கடவுள் துணை.

# யோசேப்பு டிருமா.

இது

சன்மார்க்கபோதினிப் பத்திராதிபரவர்களால்

முன்பிரசுரிக்கப்பட்ட பிரதியிலின்று

பெருப்பிக்கப்பட்டு

அதிசிரேஷ்டானுமதிப்படி

யாழ்ப்பாணம் அச்சுவேலி

ஞானப்பிரகாச யந்திரசாலையில்

பிரசுரிக்கப்பட்டது.

894.8112
சின்ன

1928

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

994.8112
SOS
CEY
SA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18132

SOUTH ASIA SECTION

JAFFNA COLLEGE
UNDERGRADUATE DEPARTMENT
2 - DEC 1964

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. 17899

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை.

[stamp]

இந்தச் சரித்திரத் தலைவனான யோசேப்பு, இரட்சகர் இருவவதாரமான சந்ததித் தலைவருளொருவர். இவர் ஆபிரகாமின் புத்திரனான ஈசாக்கின் குமாரர் யாக்கோப் பென்பவரின் புதல்வர். இவருடனும் இவர் தாதை மூதாதையருடனும் தேவன் கூடவிருந்து அவர்களை வழிநடத்தினாரென்பதைச் சரித்திரவாயிலா யறிகிறோம். இரட்சகர் ஓர் அரசகுடும்பஸ்தராயிருத்தல் தேவசித்தமாயிருந்தது. "அனுப்பப்படவிருக்கிறவர் வரும்பரியந்தம் யூதாவினின்று செங்கோலும் அவன் தொடையினின்று நியாயாதிபதியும் எடுபடுவதில்லை." (ஆதி. 49. 10) என்று சொல்லப்பட்டிருப்பதால் இது பிரத்தியட்சமாயிருக்கிறது.

அன்றியும் யோசேப்பு நமது திவ்விய இரட்சகரின் முற்குறிப்பா யிருக்கிறார். எப்படியெனில், யோசேப்பு தம் சகோதரரால் வஞ்சிக்கவும் பகைக்கவும் பட்டார்; இரட்சகரும் தம் சொந்தச் சீஷனால் காட்டிக்கொடுக்கப்பட்டுத் தம்மினத்தவரால் பகைக்கப்பட்டார். யோசேப்புத் தம் சகோதரரைத் தேடும்படி பிதாவால் அனுப்பப்பட்டார்; இரட்சகர் இவ்வுலகிற் சிதறிப் போனவர்களைத் தேடும்படி பிதாவால் அனுப்பப்பட்டார். யோசேப்பு 20 வெள்ளிக் காசுக்கு விற்கப்பட்டார்; இரட்சகர் 30 வெள்ளிக் காசுக்கு விற்கப்பட்டார். யோசேப்புத் தம்மீது சாட்டப்பட்ட குற்றத்தை மறுதலிக்காமலும் வாய் திறவாமலும் அநீதியான தண்டனைக்குட்பட்டார்; இரட்சகர் தம்மேல் இல்லாத குற்றங்களைச் சாட்டினவர்கள் முன்னிலையில் மவுனமாயிருந்தார். யோசேப்பு சிறைச்சாலையில் இரு குற்றவாளிகளுடன் இருந்தார்; அவருள் ஒருவன் ஈடேற்றமடைய மற்றவன் கொலைத்தீர்ப்பிடப்பட்டான். இரட்சகர் இருகொலைகாரரிடையில் சிலுவையில் அறையுண்டிருந்தார்; அவருளொருவன் ஈடேற்றமடைய மற்றவன் நரகத்தீர்வை யிடப்பட்டான். யோசேப்பு சிறையைவிட்டு நீங்கியபின் சர்வாதிகாரமும்பெற்று யாவரும் பயங்கரத்துடன் வணங்கும்படி பார்வோனால் நிரூபிக்கப்பட்டார்; இரட்சகர் உயிர்விட்ட மூன்றாம்நாள் மரணத்தைச் செ

SOUTH ASIA SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்து உயிர்த்தெழுந்தருளிப் பிதாவினால் சர்வாதிகாரமும்பெற்று மூவுலகத்தாராலும் பணியப்பெற்றார். யோசேப்பு பஞ்சத்திலே பல சீவர்களைக் காத்தார்; இரட்சகர் ஞான போசனத்தால் பாவிகளை இரட்சித்தார். யோசேப்பு சகோதரருக்குப் பொறுத்தலையும் சமாதானத்தையும் அருளினார்; இரட்சகர் தம்மைப் பாடுபடுத்திய தம்மினத்தவர்க்குப் பொறுத்தல் அளித்தமாத்திரமன்றித் தம்மை விசுவசித்துப் பின்பற்றினவர்களையும் தயாளத்தோடு ஆதரித்துக் காத்துவருகிறார். இப்படியே நம்மிரட்சகருக்கொப்பான யோசேப்பின் சரித்திரத்தை நாம் முன், கலாசாலைச் சிறுவர்களுக்குபயோகமாக ம ள ள ஸ்ரீ எற். மேதரவர்கள் கேள்விப்படி இயற்றி அச்சிட்டு விற்பனை செய்துவந்தோம். அப்பிரதிகள் செலவாயினமையால் யாவர்க்கும் பயன்படுமாறு இதைப் பெருப்பித்து இரண்டாம்முறையாய் அச்சிட்டு வெளியிட்டோம். தற்போது அப்பிரதிகளும் செலவானமையால் பின்பு நம்மால் அரங்கேற்றப்பட்ட டிருமாவில் புதிதாய்ச்சேர்த்த பாடல்களுஞ்சேர்த்து அச்சிட்டு மூன்றாம்முறையும் வெளியிடுகிறோம்.

M. RAMALINGAM

அநாதிசுமே.

# யோசேப்பு டிருமா.

## காப்பு.

### வெண்பா.

சீர்சேரும் யாக்கோபின் சேயோசேப் பின்சரிதை
நேர்சேரும் பாவாய் நிகழ்த்தவே—தார்சேரும்
வானும் புவியும் மனுவுஞ் சராசரமுந்
தானருடே வேகிருபை தா.

## தேவ ஸ்துதி.

(வாசதேவனே ...என்றமெட்டு)

அகிலகாரணா—அதி—பமலபூரணா
நிகரிலாரணா—சுப—நிலையதாரணா

தூயசோதியே—புகழ்—கொலிப்ரக்யாதியே
நேயமோதியே—நிலை—நிறுத்துமாதியே

ஏகதேவனே—நாம்—எண்ணில்மூவனே
ஆகசிவனே—எமை—ஆள்ப்ரதாபனே

பாவின்முன்வாராய்—நின்—பட்சமேதாராய்
நாவின்மேவிராய்—சாமி—நமதுநண்பராய்

## வேறு தரு.

(அரவாபரணனே...என்றமெட்டு)

சருவவுயிருந்தாங்கித் தத்துவமிகவோங்கிர் தாஞணவானவனே
குருவாய்வருசொரூபா குறைவற்றிமெரூபா கூர்ங்கெதனமக்காத்தருளே

## தேவமாதா ஸ்துதி.

மருவலாடிபோற்ற வையகர்துதிசாற்ற மைந்தனை யளித்தவளே
திருபர்குலத்துத்தாயே நிர்மலமரியே நிமலனையீராய் தருளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூசைமாமுனிவர் ஸ்துதி.

யாக்கோபுத்திரன்சூசை யின்காதைசொலஆசை ஈவாய்சூசைமுனியே
பாக்கியவக்குலத்துப் பார்க்வந்ததவத்துப் படர்ந்தவிரத்தனீரே

சோக்கம்நிறைவேறிட நான்முறையாய்க்கூறிட நன்மைதந்தாண்டருளே
வாக்குமனதக்கெட்டா வண்டர்மனதிலொட்டா வானேனுனையிரந்தருளே.

## அவையடக்கம்.

### விருத்தம்.

சகவிரட்சகக்கிறீஸ்தின் சந்ததித்தலைவனென்ன
இகமதில்வசித்திருந்த யாக்கோபின்புத்ரனை
புகழுறுயோசேப்பென்னும் பூபதிசரிதைதன்னை
பகருவேனென்சொற்குற்றம் பாவலீர்பொறுத்திடீரே:

## பாயிரம்.

### அகவல்.

ஆதியிற்றேவ னம்பரம்பூமியுஞ்
சோதிசேர்தாரொடு சொல்சராசரமும்
ஆக்கியபின்ன ராதாமேவாளைப்
பாக்கியநிலையிற் படைத்தாரவர்கள்

பரன்விதிமீறிப் பாவிகளாக
நரனுருவாயவர் நானிலமேல்வர
எண்ணிலாதனு விவரிற்சந்ததி
நண்ணிடச்செய்தார் நானிலமதில்

ஆதாம்புத்ரன் அருஞ்சேத்திடமாய்
ஓசேனோசம் உற்றானவனால்
வகைபெறுகேனன் வந்தானவனால்
மகலாலேயேல் தோன்ற வருமவன்மகனாய்

யாரேத்தற்றான் இவனேனோக்கைப்
பார்மேற்றந்தான் பற்றவன்சேயாய்
மெத்துசலாவுற விளங்குமவனால்
லாமேக்கைப் புவியிலுதித்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனிடமாக அன்புறுகோவா
புவனியினிற்றோன்றிப் புத்திரன்சேமை
அளித்தனனவனும் அர்பக்சாத்தைக்
களிப்பொடுதந்தான் கருதியேயவனும்

சாலாவையியத் தரையினிலவனும்
மேலாயேபேரை விரும்பியீன்றான்
ஏபேர்பேலேக் கீனத்தரவவனால்
மாபேர்ரேகூ மகனாய்வந்தான்

அவன்சேருக்கை அருளவவனால்
யவனநாகோ ரியல்பாயுதித்தான்
அவன்தோராக்கை அளித்தானவனால்
புவனத்தாபிராம் பொற்பாயுதித்தான்

ஆபிரகாமா லரியவீசாக்கும்
பூபிரபலமாய்ப் புகழ்யாக்கோபைப்
பெற்றான்யாக்கோப் பெண்ணால்வர்களால்
உற்றிடுரூபன் உயர்வார்சிமியோன்

லேவியூதா இசகார்செபிலோன்
தாவுதாண்நத் தலிகாத்ஆசேர்
பிரியயோசேப் பென்சமீனும்பன்
னிருபுத்திரரை யீன்றானவனருள்

யோசேப்பேக ஐயரருள்பெற்ற
தாசனாய்த்தக்க தரிசனங்கண்டான்
தரிசனந்தன்னைச் சாற்றச்சோதரர்
எரியுமனத்தரா யிவனைக்கொல்ல

எண்ணியுமவர்க ளெண்ணம்பலியா
தண்ணலருளா லதிபதியானான்
கன்மம்புரிந்தோர் நன்மையடைந்தார்
பின்வருசரிதை பெருகக்காட்டும்

குறைகளைப்பொறும் குற்றங்களையும்
இருவர்சொல்லெனச் சிந்தைகொள்ளேம்
பத்தியினாலே பகருஞ்சரிதையில்
வித்தகர்பிழையை விரும்பிடாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வந்தனக்காரர்.

(இலங்குசெம்பொன்...என்றமெட்டு)

இலங்குசெஞ்சுட ரிடையணியீஸ்பரி ஈன்றவெம்பெருமானை
வந்திநமஸ்கரிப்போமே-- இலகிருசரணிணை தனை—வந்திநம.

அலங்கிர்தஞ்சேர் காவினிவ்லவைசெய் அநீதப்பவமொழிக்க
அமலன்மனுவாகவந்தார்-- இவ்வவனியில்நலமுடன்—அமல.

கலங்கிடச்செய் அழல்நரகதிலுடை கபாடந்திறந்தருளக்
கன்னிகையின்பால்மேவினர்-- மிகுகன்னியமுறுமொரு—கன்னி

பலங்கொளச்செய் பாரினில்மானிடர் பாவந்தொலைத்திடவே
பரமன்மனுவுருவானார்-- பரிவுறுகிருபையாய்—பரமன்மனு.

### வேறு தரு.

(சோபனஞ்சொன்னேமே...என்றமெட்டு)

வந்தனஞ்சொன்னேமே—நல்ல
வந்தனஞ்சொன்னேமே
சுந்தரவிச்சபை வந்தபெரியோர்க்கு
வந்தனஞ்சொன்னேமே

இத்தலத்தோர் துதிக்கும்—சந்தப்பாப்
பெண்ணுந்தயாநிதிக்கும்
தத்வநெறிவிதிக்கும்—இந்திய
சாம்ப்ராஜ்யபதிக்கும் ... வந்

நக்ககுருமாருக்கும்—நீதி
தன்னைப்புரிவோர்க்கும்
மிக்கபெரியோர்க்கும்—கலா
வித்தையுரியோர்க்கும் ... வந்

### வேறு தரு.

(எக்தையோரே என்ற இங்கிலீஷ்மெட்டு)

இந்தச்சபையுறு பெரியோரே
இசைக்கிதெரிதற் குரியோரே
சந்தவழுவைத் தெரிவோரே
தவறுசொலாதருள் புரிவீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோசேப்பு டிருமா

பாச்சிசோச்சி யெனத்தீட்டும்
பாலியர்மீதிற் பிழைகாட்டும்
மாச்சடையுண்டோ வெம்மாட்டும்
மதிவல்லீ ரிசக்கங்காட்டும்

யாக்கோப்பென்றார் பன்னிருவர்
இவருள்யோசேப் பெனுமொருவர்
யோக்கியம்பெற்றில கிடுநிருபர்
உயர்கதைக்கூறப் பரனருள்வர்

தேவன்செயலை மதிப்பீரே
திருவுளந்தன்னைத் துதிப்பீரே
பாவமீருளம் பதிப்பீரே
பரிந்தெனையாசீர் வதிப்பீரே.

## பார்வோனரசன் கொலு.

(தெரிஅம்சனு...என்றமெட்டு)

மதிமந்திரர் துதிதந்திடு
வார்மணி முடியணி பார்வோன்நான்
வைய முய்ய நம்மை செய்யும்
மகத்துவ மிகுத்திடு செகப்பதிநான்

சுதிதந்திடுஞ் சுரமண்டலந்
தொனித்திடச் செகத்தையாள் மகத்துவன்நான்
சூழ்ந்து செசாத தரகபதாதிகள்
துதிசெய்ய வுலகையா பேல்லிபன்நான்

செகத்தரசர் திறையளக்கத்
திரமுட னரசுசெய் புரவலன்நான்
தீர மேவு ராசராஜேர்
தெரிசனை செய்துபணி யரசனும்நான்

மகத்துவஞ்சேர் செசித்துரகர்
மருவியே யரசுசெய் திருபனும்நான்
வஞ்ச நெஞ்ச சத்ரு பேர்ந்த
மருவலர் வெம்பரி புரவலன்நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு.

(...சாஹைமக்கவுகா...என்றமெட்டு)

ஆதியேமெய்ச் சோதியேயனர் தாதிபாநமோ
அப்பிரமாண பிரமாணனே அரூபனேநமோ

சோதிசத்தி யாங்கமூலா சுயம்பராபரா
சுயமூலா சருவசுப சுந்தராநமோ

அசமசமா ஸஹவபரி அந்தபரியந்தா
அசிந்தமகி மோத்தமஹ மாதியேநமோ

நிசமுறுசர் வாக்கிரேஸ்வரா நிறைநிர்வசிக
நீதிஸ்பரா ஞானரூபா நிர்மலாநமோ

ஓயாசுக திப்பிரவாகா ஒழியாமோட்சத்தி
யாகாதிரி காலமுமுண ரீஸ்பராநமோ

மாயாசுக லோகத்துன்னை வணங்கியிணங்க
வரமளித்துக் கிருபைசெய்யும் பரமனேநமோ.

வசனம்—அப்பிரமாண பிரமாண வரூப சயம்பரா, அசமசமான அபரியந்த பர்யந்த நீதிஸ்பரனே, உமது பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறேன் சுவாமி.

## சோபனக்காரர்

(பியாரமோரிப்பியாரி...என்றமெட்டு)

பல்லவி

தேசபதிபார்வோன் ராசனைப் போற்றிசெய்வோம்

சரணங்கள்

நேசர்விசுவாசன் நீசர்களிஞசன்
ஊஞ்சதுதார்சன் ஈகிப்துமகாராசன் ... தேச

அரசுபுரிவைய்ய மழகுபெறவுய்ய
மருவுகுறைகொய்ய வளசரசுசெய்ய ... தேச

மாற்றலர்துளங்க வாய்மைகள்வழங்க
ஒற்றமார்கழங்க பில்லாதுவழங்க ... தேச

நகரந்தம்கீடும் மலர்மாலைசூடும்
பெருங்பண்பாடும் புலருங்கொண்டாடும் ... தேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு தரு.

(பொன்னேமின்னேசேடியரே என்ற இங்கிலீஷ்மெட்டு)

படியாள்பார்வோ னெனுமராசே
பலதேசராசர்க டஞ்சிரசே
பாடியேமலர் சூடியேயொன்று
கூடியேயடிப் போம்முராசே

துரையேபொருதிற லுடைவீரா
துணைவேண்டினவர்க ளுபகாரா
தோத்திரம்புரிந் தேத்தியேயுமைத்
துதித்திடவந்தோம் செயதீரா

வித்தகர்துத்திய மதுரீட
விற்லுறுபொருநர்கள் புடைசூழ
விளங்குசாமரை வழங்கியிங்கித
வீணையைமீட்டிவந் தோம்பாட

கிருபாகிருபா காதுரையே
நின்தயவுக்குண் டோகரையே
நீடுவோமுமை நாடுவோம்புகழ்
பாடுவோமொன் றுய்நிரையே

இராசன் வசனம்—பிரதானி இவர்களின் வந்தனவாழ்த்து ஆடல் பாடல்களைக்கேட்டு மிகுதியுஞ் சந்தோஷமானேன். இவர்களுக்குத் தக்க சன்மானஞ்செய்தனுப்புவாய் பிரதான்.

மந்திரி வசனம்—அப்படியே செய்தனுப்புகிறேன் மகராஜ்.

### இராசன் விருத்தம்.

பாட்டினில்மகிழ்ந்தேனென்றன் பத்திராசனத்தின்முன்பு
திட்டிடற்கரியநீதி செப்புமந்திரியேகேளாய்
பீட்டினிற்குன்றிடாத பிரபலமுறுமெசித்து
நாட்டினில்வழமையெல்லாம் நட்புடனுரைசெய்வாயே.

வசனம்—புத்திவிஸ்தாரமும் கலைக்ஞானமும் யூக சாமார்த்தியமுமுடைய மந்திரி, நமது அரசக்குட்படாநின்ற எகித்துநாட்டுச் சிறப்பாதியவைகளை அறியவிரும்பினேன். அதைத் தெரிவிப்பாய் பிரதான்.

மந்திரிவசனம்—ஆணையாசக்கிரமும் உத்தண்டகெம்பீரமும் முகவசீகரமும் பொருந்திய மகிபதியே உமது நாடுநகரங்களில் நானெடுத்துரைக்கக்கூடிய குறைகளேதுமில்லை. விபரமாய்க்கேட்டால் மகிழ்வுரைக்கக் காத்திருக்கிறேன் மகராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவிசாரணை.

(ஜெசமதிரகுணநவின்றி என்றமெட்டு)

இராச உன்னிதமொடுசென்னல் உயர்ச்சியுடனேகன்னல்
ஓங்கியேவளருகுதா
உலகில்மும்மாரிபெய்து இலகிப்பயிர்களுய்து
ஊர்செழிப்புறுகின்றதா

வசனம்—நமதராசாட்சிக்குட்பட்டஇந்த நமதிராச்சியத்தின் தானியாதிகள் சேட்டமாய் வளர்ந்து நற்பலனைக் கொடுக்கின்றதா? அதனால் ஊர் செழிப்புறுகின்றதா? விபரிப்பாய் பிரதான்.

மந்தி. இன்னகர்தன்னில்மதி தன்னில்மும்மாரியதி
உன்னிதமாய்ப்பொழிவதால்
ஏதிப்பயிர்தழைத்து மீறியிவ்வூர்செழித்து
இலகிவருகுதேஐயா

வசனம்—நமது தேசத்திடமாய் மாசந்தோறும் மூன்றுமழைக்குக் குறையாமல் வருஷிப்பதால் பயிர்கள் மிகச் செழிப்பாய்வளர்ந்து நற்பலனை யளித்துவருகின்றன மகராஜ்.

இராச. பெருவலிமைகணிறை புரவலர்தருதிறை
பிசகாதளிக்கின்றாரா
பிருதுவிதனிலெவர் கிரமந்தப்பிடுபவர்
பிரியமோடுமையாயே

வசனம் நமதாணையாசக்கரத்துக்குட்பட்ட வலிமை பொருந்திய சிற்றரசர்கள் தாங்கள் தரவேண்டிய கப்பங்களைத் தப்பாது செலுத்திவருகிறார்களா? அவருள் ஒழுங்கீனமாய்நடப் வருண்டா பிரதான்

மந்தி. ஒருவருந்தடையில்லாத் தருதிறையானதெல்லா
முண்மையாய்த்தருகின்றார்
உன்னதாவெம்மருமை யோங்கலேயுண்பெருமை
உலகெங்கும்நிலவுகுதே

வசனம் அட்டதிக்கும் கீர்த்திப்பிரதாபம் பொருந்திய அரசேசிற்றரசரும் தாம் தரும் திறையைமுறையோடு செலுத்திவருகிறார்கள் மகராஜ்

இராச. அதிபலசசரத துரகபதாதிகத —.
மதிமெனுமேலவுகின்றாரா
அந்நியர்படைகொண்டு அநீதியதாய்மிண்டு
மல்லேவலைக்காயித்தமா

வசனம் -- அதி நிபுணத்துவம்பொருந்திய மந்திரீ, கெச ரத துரக பதாதியென்கிற நால்வகைச்சேனைகள் சக்க ஆயித்தத்துடனிருக்கின்றார்களா? சத்துருக்கள் சந்நிதியிற் படையெடுத்துவரின் செயிக்கக்கூடிய பலத்துடனிருக்கின்றார்களா? தெரிவிப்பாய் பிரதான்.

மந்திரி பதியாசானரசே பன்னெண்தேசாதிபரசே
பதாதிகள்பலபிகவே
பன்னிடுகில்வங்கிதம்மை முன்னிடுபவர்தம்மைப்
பஸ்பீகரிப்போமே

வசனம்—வீரப்பிரதாப சிங்கேற்றையொத்த புயவலிமையுள்ளவரும் பதினெண்தேச ராசருக்கும் சிரோரத்தினமாய் விளங்குபவருமான பார்த்திபனே, நமது சேனைகளெல்லாம் மிகு புயபெல பராக்கிரமத்துடன் சர்வாயித்தமாயிருக்கிறார்கள். சத்துருக்கள் தலைகாட்டினால் நிர்த்தூளியாக்கிவிடுவார்கள் மகாராஜ்.

## இராசன் விருத்தம்.

குருமணிக்கிரீடஞ்சூடிக் குவலயமரசாளென்முன்
அருமனத்துடனேயுத்தி யறைந்திடுமமைச்சேகேளாய்
செருநரோடமர்தொடுத்துத் திறலொடுசெயிக்கவல்ல
பொருனனும்போர்த்திப்பாரைப் புகழுறவரச்செய்வாயே.

வசனம்—ஒளிபொருந்திய மணிமகுடந்தாங்கி யரசுபுரிந்திருபனுகிய என்க்கு நன்மதிபோதமுன்னதமான என்மந்திரியே! பகைவரையடக்கவல்ல சேனுபதியாகிய போத்திப்பாரை என்சமுகத்துக்கு வரும்படி அழைப்பிப்பாய் பிரதான்.

மந்திரிவசனம்—அப்படியே செய்கிறேன் மகாராஜ்.

## போர்த்திப்பார் வரவு.

(இங்கிலீஷ்நோட்)

சந்தத்தார்முடி அந்தக்கோடணி
கிந்தைதப்பார்வோர் னராமன்
தகவுற்றிடுளை நகரைச்சாவல்செய்
மிருகத்துவவதி பதிராளே

கந்தத்தாரணி எந்தத்துவபதி
சிந்தைதக்கேற்காச் செடர்களை
கதறிப்பதறிட வதிரக்கிதறிட
விதறிக்கொல்லதி பதிராஜே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டுற்றெம்மொடு முட்டிச்சருவிடு
முட்டக்கயவர்கள் தட்டழிய
விரத்துடனம ரசடிச்சிரசரி
கோரச்சேனை பதிநானே

எட்டுத்திசையுளர் முட்டிட்டேதொழு
திட்டப்புரவல னிட்டிட்ட
சட்டப்படிநிலை யிட்டுப்பொருதிடு
மிட்டச்சேனை பதிநானே

## போர்த்திப்பார் தரு.

(மருமலர்ப்பூ என்றமெட்டு)

மன்னர்மன்னன் எனையழைத்த மர்மமென்னவோ
வண்டர்கோட்டந் தனையடக்கும் வாறுமென்னவோ

ஆணவஞ்சேர் மேதியர்க ளதியாயங்கண்டோ
ஆசியர் ஐரோப்பியர் அடாத்துகளுண்டோ

பார்சியர் பிலிஸ்தியர்கள் படையெடுத்தாரோ
பரவுமெத்தி யோப்பியர்கள் பலமடுத்தாரோ

பார்த்திபன்பார் வேனிடத்தில் பூர்த்தியாய்ச்செல்வேன்
பகருரைபோற் பற்றலரைத் தகையாய்க்கொல்வேன்

## வேறு தரு.

[வருதாசாரீ மைஆசிகாபலா என்றமெட்டு]

ராசனேசலாம் - உயர்—போசனேசலாம்
எகிப்தைமகத்வ மிருத்தாசுசெய் நேசனேசலாம்
உல்—லாசனேசலாம்

பகைவரைவெல்லும்—என்—பணிவிடைசொல்லும்
பார்த்திபாவதைப் பூர்த்தியாய்ச்செய்யக் காத்திருக்கிறேன்
உனைத்—தோத்திரிக்கிறேன்

### போத்திப்பார் விருத்தம்.

குன்றனையபுயதீரா குலையத்தோருபகாரா குணசிங்காரா
நின்றனவரும்போற்றும் நிருபர்நிருபாவயவர் நிலைகெட்டோட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றவனை வையுந்தடிந்து மேதினியாள்பரிபாலா மிளிர்செங்
கோலா
இன்றெனைநின்சமுகத்துத் தழைத்ததென்ன உளத்திலெண்ணி
யம்புவீரே.

வசனம்—மலையைநிகர்த்தபுயமும் வரைவின்றிக் கொடுக்குங் கரமும் மாற்றலரை வெல்லுந் திறனும்பொருந்திய மன்னவனே அடியேனை நின்சமுகத்துக் கழைத்த காரியமேதென்று நிகழ்த்தவேண்டும் மகாராஜா.

## பார்வோனும் போர்த்திப்பாருந் தரு.

(பூமிமெச்சிடுமண்ணுமலை என்றமெட்டு)

பார். தீரஞ்செறிரண வீரசூரசேனா பதியே
குணநிதியே என்சொல்மதியே—இங்கு
சேரும்வயவராரும் ஊருட்புகுந்துசெய்யும்
சதியே காத்து வதியே

போர். தோற்றுமாற்றலரா லேற்றமாகிவருந் தொல்லையே
உந்தனெல்லையே தனிலில்லையே—என்றும்
போற்றுகின்றார்துதி சாற்றுகின்றாருந்தன்
சொல்லையே பிறல் வல்லையே

பார். கரவடத்தோடொன்னார் பெருமிடர்செய்திட வருவார்
தொல்லைதருவார் வந்துபொருவார்—இங்கே
பொருதிடர்செய்திட இருமப்போ திவ்விடம்
மருவார் எம்மைச் சருவார்

போர். எப்படைவீரரை நம்பிரிருமவர் தீரம்
ஆரவாரம் நல்லுதாரம்—கொண்டு
அப்புவியிற்சமர் கெப்பிரமாய்ச்செய்யும்
கோரம் பாருந் தீரம்

### இராசன் விருத்தம்.

கூறுநால்வகைச்சேனைக்குங் கொற்றவனெனவிருந்து
ஏறுமேவலீட்டிகட்க மேந்தியொன்னலரைமாசின்
சேறுபோற்பிறவல்ல இரணவீரேந்த்ராநீசொல்
வாறுபோல்நாட்டைக்காத்து வலியுடனமருவாரே.

வசனம்—நமது வீரப்பிரதாபம்பொருந்திய சேனைகளுக்கெல்லாம் கீர்த்திப்பிரதாபம்பொருந்திய தலைவனாயிருந்து பற்றலரைத் தடிந்து குற்றமுற்றலரைக் கடிந்து நமது தேசத்தை எச்சரிக்கையாய்க் காவல்செய்துவருமாய் சேனாபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாக்கோபும் புத்திரரும் வருதல்.

யாக்கோபு தேவாரம்

என்னுளம் புரியவல்லாய் எம்பிதாவிறைஞ்சிப்போற்றும்
மன்னிதவருபாவெல்லாம் உடையவா கடையேனுக்கு
நன்மைகள் பலவுஞ்செய்தாய் நலமுறு மைந்தராகப்
பன்னிருபேரைத் தந்தாய் பத்தனை ஆட்கொள்வாயே.

### யாக்கோபு தரு.

(பாலாபிஷேகம் என்றமெட்டு)

காதாவுன துடை பாதாரவிந்தமே
ஆதாரமென்னரு ளென்சொந்தமே
தாதா அபிராமைத் தாசனுக்கொண்டாயே
தக்கபொருத்தனை விண்டாயே

(தொகையறா)

தந்தைதவீசாக்கினைத் தற்காத்தவிஸ்பாக
வந்தெனக்குன்றன் வரமருள்பாலகா

தரு

சச்சிதானந்த சர்வேசுரன் நீயே
சாலமுங்காலமுந் தானுனையாயே ... காதா

## புத்திரர் தந்தையை நமஸ்கரித்தல்.

[கனத்தக்கியமோகனதாஸ் என்றமெட்டு]

ரூபன் உன்னையுடைய தந்தாய் ரூபனெனப்பேர் தந்தாய்
ஓர்குறையின்றிக்காத்தாய் உத்தமனே
இன்னவணின்றன்பாதம் விருப்புடன்தொழப்போதம்
விரித்துரைத்தருப்பாய் பிரிர்தந்தையே

(துன்னாதே என்றமெட்டு)

சிமியோன் போற்றுவேன் உமக்குநற்றுதிகளைச் சாற்றுவேன்
ஆற்றலாகவிவ்வு அயனம்பண்புரிந்தாய்
அரிவையாகவளை தன்னைத்தெரிந்தாய்
மாற்றம்வைத்ததினால் மனமதுவெரித்தாய்
வளர்சிமியோனை வளர்த்துளம்பரித்தாய்... போற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆசைக்கிசைய ..என்றமெட்டு)

லேவி. என்னைசமகலாததந்தாய்—என
திதயத்தென்றுமெனையுகந்தாய்
உன்யூகமானதைமதித்தேன்—உன
துயர்கழலிணைகளைத்துதித்தேன்

(காசிவிஸ்வ என்றமெட்டு)

யூதா யூதா உனைநான்போற்றினேன்—பிதாவேயென்றும்
யூதா உனைநான்போற்றினேன்
மாதாவினுளத்தினால் நாதாயின்பழத்தினால்
வந்திடுமகிமையை வர்ணிக்கலாகுமோ ... யூதா

உந்தனதுசிந்தனையை மைந்தர்களின்வாழ்வில்வைத்த
சுந்தரனேசந்ததமும் சிந்தைமகிழவுங்களித்து ... யூதா

(நாராயணாஉன்னை என்றமெட்டு)

இசகார் எனதுதந்தையே.ஆசி தாருமே—முழு
இருதயத்தாலன்பு கூருமே
அனைவருமதிமன தன்னைக்குகந்தவம்
ஆதிபரமனது அரியசெயலின்பலம்

(சிங்காரகர்த்தவன என்றமெட்டு)

செபிலோன் அன்பாயதிவணக்கங் காட்டுவேன்—உன
கரியதிருமொழியை நாட்டுவேன்
முன்பாயநிவாயுரை நீட்டுவேன்—உங்கள்
முற்றுதைபவைரிணைப் பூட்டுவேன்

(தாதபாய்சவரேசி என்றமெட்டு)

தாண் தாதாவே யெமையாளும்
தந்தோம்வத்தனம் பிந்தாதித்தினம்
வேதாவுதனிபெற்றாய் மிகுநேசமெம்மிலுற்றாய்
விந்தைதெரிந்திடு சுந்தரபாதம்
வந்தனைசெய்து வணங்குதல்நிதம்--தாதாவே.

(பாதம்வேண்டிப்பணிந்தேன்பழனிமலை என்றமெட்டு)

நத்தலி பாதம்போற்றிப் பணிந்தேனடியேன்துதிசாற்றி
பரிவுறுகோலா வா மருதநருசீலா
பணிந்தேனடியேன்துதிசாற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[தொகையறு]

பரிவானதேவனது கிருபாகடாட்சமது
பரவுமிசிறுமேல்தந்தையே
விரிவானவம்சத்தி லரிதானபெருமையாய்
மிளிருமெழிலாரெந்தையே

தரு.

பரிவுறுகோலா வர மருளுறுசீலா
பணிந்தேனடியேன்துதிசாற்றி—பாதம்.

(எந்தையேஉன் என்றமெட்டு)

காத். தந்தையேஉன் பாதந்தன்னைப் போற்றிசெய்தேன்
சந்ததமும் உந்தனது சிந்தைமகிழ் வாகக்காத்தாய்—தந்
ராகேல்மலடியென எண்ணமுற்றேயென்மன
தின்படியென்னன்னையைக்கை யேற்றனையே—தந்தை.

(மாவுங்கொய்யாவும் என்றமெட்டு)

ஆசேர் லேயாளண்ணைப்படி எந்தாயாம்பைக்கொடி
என்னுங்கிர்பாலேயடுத்தீர்—என்னைச்
சேயாகப்பெற்றெடுத்தீர்
தாய்தாய்வளர்த்தெனக் காதாரமாய்நின்ற
தோன்றலைப்போற்றிடுவேன்—உமக்கேயில்
துத்தியஞ்சாற்றிடுவேன்

(சங்கரிமைந்தனே என்றமெட்டு)

யோசேப். எங்கள்பிதாக்களின் பங்கந்தவிர்த்தோயே
இங்கடியேனை இரட்சிக்கவே
இரந்திடுவேன்தந்தையே
மண்ணின்றுவான்மட்டாய் வாகாயேணிகிட்ட
வானோர்வரவுஞ் செலவுங்கண்டாய்
மைந்தனுனைப்போற்றினேன்

(கனந்தங்கியமோகனதாஸ் என்றமெட்டு)

பென்சமீன் அன்னையிலதிகநேசம் அடர்ந்திடும்விசுவாசம்
ஆயிருந்தெனையீன்ற அரியதந்தாய்
சின்னக்கனிஷ்டன் றன்னைத்
திகழ்பென்சமீனுமென்னைச்
சித்தத்திருத்தியருள்செய்வீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாக்கோபு தரு.

(பாலாபிஷேகம் என்றமெட்டு)

தந்தையுரைதன்னைத் தட்டவேண்டாம்பொல்லாச்
சண்டிகளோநீங்கள் கிட்டவேண்டாம்
சிந்தையில்வர்மித்துத் திகைக்கவேண்டாம்இந்தச்
செகத்துளரைநீங்கள் பகைக்கவேண்டாம்—மக்களே

பூதலத்தின்வாழ்வை நம்பவேண்டாம்பிறர்
புன்மைசெய்திட்டாலுங் கெம்பவேண்டாம்
மாதரின்மேலாசை வைக்கவேண்டாம்மிக
மண்பொன்னிலும்நேசம் துய்க்கவேண்டாம்—மக்களே

துணைவர்நேசர்தன்னைத் துறக்கவேண்டாம்வானை
சொந்தநாடென்பதை மறக்கவேண்டாம்
இணையில்லானைத்தொழா திருக்கவேண்டாம்நீங்கள்
எவர்களையும்மனங் கருக்கவேண்டாம்—மக்களே

தருமநீதமிகச் செய்யவேண்டும்என்றும்
தற்பரனைப்பணிந் துய்யவேண்டும்
புரவலவரைநிதம் போற்றவேண்டும்மிகப்
போந்தவரைத்துதி சாற்றவேண்டும்—மக்களே

பொய்ம்மைமொழிதன்னை நீக்கவேண்டும்பொல்லாப்
புன்பவங்களெல்லாம் போக்கவேண்டும்
மெய்ம்மையென்றும்சொல்லி வசிக்கவேண்டும்நித்தம்
மிதவுணவுதன்னைப் புசிக்கவேண்டும்—மக்களே

தக்கநேரந்துயில் கொள்ளவேண்டும்மிக்க
சளப்புவார்த்தைகளைத் தள்ளவேண்டும்
மிக்ககஷ்டத்தொழில் விலக்கவேண்டும்பரன்
விதிமுறைமையென்றும் துலக்கவேண்டும்—மக்களே

வசனம்—எனது பட்சமுள்ள புத்திரரே, நானிப்போதுசொன்ன புத்திப்பிரகாரம் நடந்துவருவீராளுல் தேவாசிர்பாதம் மேன்மேலும் பெருகும் கண்மணிகாள்.

பிள்ளைகள்வசனம்—இந்தப்பிரகாரமே நடந்துவருவோம்பிதாவே.

### யாசகோபு விருத்தம்.

சித்திரமணையில்வைகச் சிறுவன்யோசேப்பினோடு
புத்திரன்பெஞ்சமீனைப் புகழுடனிங்குவிட்டு
பத்துப்பேருந்நீர்சென்று பரிவொடுமந்தையெல்லாம்
மெத்தப்பத்திரமாய்ப்பார்த்து மீண்டிங்குமேவுவீரே.

வசனம்—என்னன்புள்ள புத்திரரே, என்னுடன் சல்லாபித்துக் கொண்டிருக்க யோசேப்பையும் பெஞ்சமீனையும் வீட்டில் விட்டிட்டு மற்றைய பத்துப்பேரும் சந்தோஷத்துடன் சென்று மந்தைகளைப் பரிபாலித்து மீண்டு என் சமுகத்துக்குவருவீர் மக்காள்.

## பிள்ளைகள் தரு.

(ஆசைவமே என்றமெட்டு)

பல்லவி

மேய்ப்போமே—ஆடுகளைச்—சாய்ப்போமே

அநுபல்லவி,

வாய்ப்பேச்சைவிட்டு மகாமுயற்சிதொட்டு
வாடாமலே கோடாமலே காபோரமாய் ஓடாமலே ... மேய்

சரணங்கள்.

காலையுணவு கடுகவுண்ணவாரும்
கானகமேயெங் கதியாம்பத்துப்பேரும்
வேலைகள்செய்ய இரண்டுதுரைமாரும்
வீட்டிலிருக்க விதித்துவிகம்பாரும்
விளையஞ்செய மனமாகுது
நினைநெஞ்சாகமும்நோகுது ... மேய்

தலையாரியங்கே நடச்சாமலோடுது
சன்னைச்சிபன்னைச்சி சாரலைநாடுது
நிலையாய்நில்லாது நெடுந்தூரந்தேடுது
நீண்டபசும்புல் நிலயத்தைத்தேடுது
நிலைபோவெகு தலையாகுது
மலைமேல்ராவி தலையாகுது ... மேய்

மூனிக்கறுப்பிகும் மானத்தினைத்தேரும்
மூசனூறுதுட்ட மிருகங்களுஞ்சேரும்
ஆளுக்கொருகரம் ஆடுகளைப்பாரும்
அந்தச்சுனைக்கேகி ஆயாசத்தைத்தீரும்
அழல்மீறிய பொழுதேறுது
அதிதீவிர கனல்மீறுது ... மேய்

குள்ளநரியுங் குறுக்காகஓடுது
கொடியஓநாயுங் கடுவாயுங்காடுது
கள்ளப்புலியுஞ் சிவிங்கியுஞ்சாடுது
கனைத்தேஅரியும் புனத்தினில்கீடுது
கடிதாய்நட கணைமேவிட
கொடிதாய்மிர்க மடிவாகிட ... மேய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திரிகங்களைச் சூழ்ந்துகொண்டுகாக்கூட்டிச்
சுனையருகிற்போய் மனமாகநீர்காட்டி
உற்றவுருமவுணவுண்டுபின்காட்டி
லோங்குமசங்களைப் பாங்குடனேயோட்டி
உழுசெச்சைகள் தழைவுற்றிட
நிறைவுற்றவை நிலைபெற்றிட ... மேய்

வெள்ளைக்கூட்டிச்சி மிரண்டங்கேயார்க்குது
மேன்மலைதன்னை வெருட்சியாய்ப்பார்க்குது
கள்ளக்கறுப்பி கடந்தோடிச்சேர்க்குது
கண்டபடிவிளை வுண்டாவல்கிர்க்குது
காடோரமாய் காமோடியே
நாடோர்பகை யாகாடியே ... மேய்

பள்ளைக்கடாக்கள் பருஞ்சண்டைபோடுது
பசுவினமெல்லாம் பயிர்களைநாடுது
புள்ளிநாம்பனும் புறத்தாலேஓடுது
பொதியேற்றுமொட்டை புனக்களைச்சாடுது
பொழுதுங்கடி தேகமறையுது
முழுதும்இரு ளேயுறையுது ... மேய்

சகோதரர் விருத்தம்.

மாலையாய்விட்டதப்பா மனைசென்றுமீளவேண்டும்
மூலைகள்முடக்கெல்லாம்போய் முழுமைந்தைகளையுஞ்சேர்த்துக்
காலையிலடைத்துவிட்டுக் கருதியேமனைபோய்நாளை
வேலையைத்தொடங்கவிங்கே விரைவினில்மேவுவோமே.

ரூப. வசனம்—இருட்டாய்விட்டது, நமது பிதா க்ஷேமத்தைய றியவிரும்புவார். ஆதலால் இன்று மந்தைகளெல்லாவற்றையுந் திரட்டிக் காலையிலடைத்துவிட்டு வீட்டுக்குப்போய்வருவோம் சகோதரரே!

மற்றோர்—அதுதான்நல்லது அப்படியேசெய்கிறோம் அண்ணா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாக்கோபும் மற்றைய புத்திரருஞ் சமுகத்தில்

[யோசேப்பு கனவைத் தெரிவித்தல்]

## யோசேப்புவும் சகோதரருந் தரு.

[வாசுதேவனே என்றமெட்டு]

யோசே. சொற்பனங்கண்டேன்—அதைச்
சொலஆவல்கொண்டேன்
அற்பமதியன்நான்—கண்ட
தறையாதென்செய்வேன்

சகோ. சொற்பனமொன்று—கண்டாற்
சொல்வதுநன்று
அப்பர்முன்னின்று—அதை
அறைவாய்நீயின்று

யோசே. காரின்நீர்புரண்டு—விளை
கழனிநெற்றிரண்டு
பார்மேற்பன்னிரண்டு—கட்டாகப்
பார்த்தேனேதெருண்டு

வசனம்—வயலில் அரிவியை அறுத்துப் பன்னிரண்டு கட்டுக்களாகக் கட்டக்கண்டேன் அண்ணமாரே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோ. பன்னிருகட்டுகளுன்—கன்னுற்
பார்த்திட்டதற்குப்பின்
உன்னிடத்தமிதன்—அதை
உரையாயெங்கள்முன்

யோசே. வரிந்துமேவிட்டு—ஓங்கி
வளர்ந்ததென்கட்டு
சரிந்துமுட்டிட்டு—மற்றவை
தாழ்ந்ததெதையிட்டு

வசனம்—அந்தப் பன்னிரண்டு அரிக்கட்டுகளில் என்கட்டு ஓங்கி வளர்ந்துநிற்கவும் மற்றவை அதைத் தாழ்ந்து வணங்கவுங்கண்டேன் அண்ணமாரே.

சகோ. எமையாளப்பார்த்தாய்—எமக்
கிறையாகத்திர்த்தாய்
அமையாக்கதைகோர்த்தாய்—அகங்
காரமேயார்த்தாய்

யோசே. சினத்துச்சொல்லவேவா—நான்
சிறுவனல்லவேவர்
மனத்தில்லெல்லவேவா—சொன்னேன்
வைதல்நல்லதோ

வசனம்—கோபிக்கவேண்டாம். நான் விபரமறியாத சிறுவன். நான் கண்ட தெரிசனத்ததையே சொன்னேன் அண்ணமாரே.

சகோதரர் வசனம்—"அகத்தினழகு முகத்திற்தெரியும்" என்றாற் போல உன்னுன்னத்தி வில்லாததா வெளிக்குவந்தது. அதைப் பின்னாற்பார்ப்போம் போ.

பொதுவிருத்தம்.

முன்கனவதனற்சேட்டர் மூரனுடனிருக்கும்போது
இன்னொருகனவைக்கண்டு இச்செய்திசகோதரர்க்கும்
தன்பிதாவுக்குஞ்சொல்லத் தகப்பனும்அதைச்சொல்லென்ன
இன்பமதாய்யோசேப்பு மிரண்டாஞ்சொப்பனஞ்சொன்னனே.

## யோசேப்பும் யாக்கோபுந் தரு.

(வாருமெர்தன்பிராணநாதா என்றமெட்டு)

யோசே. இன்னுமோர்கனவுகண்டேன்
என்னுள்ளப்பிரமைகொண்டேன்
முன்னொருகனவைஒதி
மூனூற்றார்சொல்லாமைநீதி

யாக். கண்ட கனவென்னவென்னாய்
கட்டுக்கதைக்கச்சங்கொள்ளாய்
விண்டிடிற்பொய்வார்த்தைகற்கில்
விரித்துரைத்திடுசீர் தூக்கி

யோசே. மின்னுகின்றவின்மணியும்
மிளிர்மதியாக்கண்ணணியும்
பன்னிரண்டுதாரகைகளுமென்னைப்
பணிந்திடக்கண்டேனீதென்னே

வசனம்—சூரிய சந்திரரும் பன்னிரண்டு நட்சத்திரங்களும் என்னை வணங்கக்கண்டேன் பிதாவே.

யாக். வண்மைசெறிபாலகனின்று
வகையுமுன்னையறிந்தேனின்று
எண்ணினேனீயிதனையோதி
எடுத்ததிதன்னைப்பிரக்கியாதி

யோசே. இவ்வேமோசமுறினுமுன்னை
செப்பெனச்சொல்லென்னைவன்மை
மேவிநடத்திடுநான்பொய்யா
விளம்புவேன்யோகியுமையா

யாக். இதனைமெய்யென்றெண்ணிடாதே
எரிச்சல்வரப்பண்ணிடாதே
அதிககர்வத்தைப்போக்கு
அமலன்செயலைநோக்கு

யாக். வசனம்—இக்கனவில் நம்பிக்கைவையாதே. மற்றவருக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணாதே. தேவசித்தப்படி நடக்கட்டும் மகனே.

யாக்கோபு விருத்தம்.

பகுத்தறிவில்லாவிந்தப் பாலகன்வார்த்தைதன்னில்
மிகுத்தஆத்திரங்கொள்ளாமல் மீண்டுமைந்தர்களைமேய்க்க
சுகத்துடன்செல்லுமெங்கள் சுவாமியின்சித்தமின்றி
இகத்தினில்நடப்பதென்ன எண்ணமற்றேகுவீரே.

வசனம்—இவன் மாதறியாதபாலன். இவன் கண்டது கனவோ நினைவோ தெரியவில்லை, "அமலனையறியாமல் அணுவுமசையாது" நீங்கள் அவன்வார்த்தையை மனதில்வையாமல் மந்தைகளை மேய்க்கப்போங்கள் மக்காள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூதா தரு.

(கண்மணிமைந்தரேகாணகஞ்செல்லுவோம் என்றமெட்டு)

மகனேமகனேயென்று வாழைப்பழந்தீற்றி
வைத்திருந்தாரெங்கள் தந்தை—அவன்
மெத்தச்சொல்லானே றிந்தை

வகைவகையாய்ப்பஞ்ச வர்ணச்சட்டைகளும்
வாங்கிக்கொடுத்ததே மோசம்—அவனிடத்தில்
வைத்தாரெந்தந்தைநேசம்

நாட்டைவிட்டுநாங்கள் நாட்டிற்புகுந்தந்த
ஆட்டின்பின்சென்றலைய—எங்கள்
வீட்டிலிராதென்றுழலைய

கேட்டமெல்லாமவர்க் கூட்டிமிகுபட்சம்
காட்டிவருவதநீதி—அவனைத்
தாட்டிகமாய்க்கொல்லல்நீதி

கையிற்றடியோடு வெய்யில்மழைதன்னை
ஐயோவகித்திடவோ—அவன்
களித்துச்சுகித்திடவோ

ஒப்பாரமாயவன் ஐயருடன்வசித்
தாண்டிருக்கயோகம்பெற்றான்—எங்கள்
ஒக்கலாகமனமுற்றான்

சும்மாவிருந்திட்டாற் சோறுகுமோசித்தா
சுறுக்கில்வாடாகாலாட்ட—என்று
சொன்னவன்பொற்கழுத்திட்ட

இம்மாநிலத்தினி லம்மாநீனைந்தா
லிவனைவிடலாமோஉய்ய—வாரும்
ஏகோபித்துக்கொலைசெய்ய

வசனம்—இந்தக் கர்வமுள்ள சத்துராதியை உயிருடன்விடப்படா
ரூ. கொன்றுபோடுவோம், உங்கள் சம்மதியென்ன சகோதரரே.

## ரூபன் தரு.

[சகியேநானென்னசெய்வேன் என்றமெட்டு]

அறியாதபாலனப்பா அவன்மீதுநீங்களிப்போ
குறிவைத்திடல்தகாது குறுகிடும்மிகுதீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர்நீதிசெய்வார் அநியாயஞ்செய்தாருய்யார்
கண்டபழிபோகாது குறுகிடும்மிகுதீது

குட்டிநாய்குரைத்தாலென்ன குறையுண்டாம்அவன்சின்ன
முட்டாட்டனமோஅன்றோ மொழிந்ததுமுண்மையென்றோ

வாலனவன்றன்வெறும் வார்த்தைப்பிழையைப்பொறும்
மேலும்பொறுத்துப்பார்ப்போம் மிஞ்சினல்வர்மந்தீர்ப்போம்.

வசனம் — "ஆய்ந்தோய்ந்துபாராதான்காரியம் தான்சாந்துயரந்தரும்" சற்றே யோசித்த மனஆறுதலாய் நடவும் சகோதரரே.

## லேவி தரு.

(கொஞ்சவயதாச்சே என்றமெட்டு)

பல்லவி

இந்தப்பயலுக்குக்கர்வம் வந்தவாறுபார்

அனுபல்லவி

எம்மைப்பெற்றதந்தைக் கேற்றவிவன்நிந்தை
யாம்பொறுக்கலாமோ இவன் எமைக்குறைக்கலாமோ
இவனிற்பழி வாங்கவேனும் கவனித்திருப்பீர் ... இந்த

சரணம்

பாராய்கனவென்னவொன்றைப் பாவித்துச்சொன்னான்
பசுவிளங்கன்று பயமுறுதென்று
பகருமொழிபொய்யோ அவன் பசப்பினதுமெய்யோ
பார்ப்போங்கர்வந் தீர்ப்போம்அவனைச் சேர்ப்போந் தென்புலம்
இந்த

வசனம்—நல்லதும் வரட்டும், அவன் கர்வத்தைப் பார்த்துக்கொள்ளுவோம். இப்போது ஆடுகளை மெய்த்துக்கொண் டிங்கேதானேயிருப்போம் சகோதரரே.

## யோசேப்பு காட்டிற்குச்செல்லல்.

யாக்கோபு விருத்தம்.

ஆடுகள்மேய்க்கச்சென்ற அண்ணரைஇன்னுங்காணேன்
கேடுகள்ஏதுமுண்டோ கெதியுடன்நீயெழுந்து
காடுகள்கடந்துசென்று கருத்துடனவரைக்கண்டு
நீடியசுகத்தைக்கேட்டு நில்லாமல்மீண்டுவாராய்.

வசனம்—உனது அண்ணன்மாரை இன்னுங்காணேனே. அவர்களைப்போய்த் தேடிப்பார்த்துச் சுகம் விசாரித்துக்கொண்டு வருவாய் யோசேப்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோசேப்பு தரு.

(மன்னனைக்காணுமல் என்றமெட்டு)

அண்ணமார்களின்கொடுமை அடவியில்மிகுகடுமை
எண்ணமெல்லாந்தினிலே இருக்குதர்தக்காணிலே

கடாவெருத்துச்சண்டைவிட்டுக் களிப்பார்நானதையிட்டு
தடைகூறிலடிப்பாரே தலையிலுமிடிப்பாரே

கள்ளமாகஆட்டைவிற்றுக் காசுவாங்கஆசையுற்று
மெள்ளமெள்ளக்கிட்டுவாரே வேண்டாமென்றாற்குட்டுவாரே

நல்லுருசியூணிற்சிந்தை நாடினெதிர்கூறினிந்தை
சொல்லியெனைவைவாரே சோலியெல்லாஞ்செய்வாரே

வசனம்—நான் காட்டிலிருக்கும்போது சிலசகோதரர்செய்த கொடுமை தாங்கமுடியாது. அங்கு செல்ல அஞ்சுகிறேன் பிதாவே.

## யாக்கோபு தரு.

(வெள்ளிமலையொத்தபலமேடை என்றமெட்டு)

அருமைப்பெருமையான பாலா — நானும்
அறையும்மொழிதனைக்கேள் சீலா — உன
தண்ணன்மார்கள்யாவரும்வன் கண்ணரல்லருபன்முன்சென்
றறிவாய் செயல்பிறிவாய்

ஒருவருமிங்குவரவில்லை — அவர்க்
குற்றதுண்டோவதுந் தொல்லை — ஏக
உத்தமனை நெஞ்சிருத்திப் பத்தியதாய்ச் சென்றறிந்து
ஓடி வாநீ தேடி

வசனம்—உனது மூத்தண்ணன் அங்கிருக்கும்போது பயமென்ன? நீ சந்தோஷமாய்ச்சென்று அண்ணனிடத்தில் சுகசேஷமங்களை விசாரித்துக்கொண்டு மற்றோருடன் வார்த்தையாடாமல் வருவாய் மகனே.

யோசேப்புவசனம்—அப்படியே செய்கிறேன் பிதாவே!

## யோசேப்பும் பென்சமீனுந் தரு.

[கண்மணியே என்றமெட்டு]

யோ. தம்பியரே என்றன்நேசத் தம்பியரே கேள்
தமையன்மாரைப் பார்த்துநானுந் தாவிவருகிறேன்

பென். நம்பியுன்னை யிருந்திட நமைவிட்டேகவோ
நானுமுன்னுடனுலவாய் நண்ணியிருப்பேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோ. என்னபுத்தி தந்தையுடன் இங்கிருப்பாயே
என்னையேபங்கேகவிட்டா லேகிமீளுவேன்

பென். அன்னையில்லை உனதுடைய ஆதரவிலே
அமர்ந்திருந்தே னென்னைவிட்டு அகல்நீதியோ

யோ. அண்ணர்களைக் கண்டபின்ன ருறுகியுன்னையே
அன்புடனே வந்துகாண அமலனருளுவார்

பென். எண்ணமுடன் பாமனை யிதயத்தெண்ணியே
ஏகிமீண்டு வந்தென்னை யினிதணைப்பீரே

பென்சமீன் வசனம்—இனி என்னசெய்யலாம். தேவகிருபையை முன்னிட்டுச் சேமமேபோய்த் திரும்பிவந்து என்னை அரவணைப்பீர் அண்ணா.

யோசேப்பு வசனம்—எல்லாம் இறைவன்செயல் க்ஷேமமாயிருந் தம்பீ!

## யோசேப்பு தரு.

(நந்தாவனச்சிங்காரம் என்றமெட்டு)

இந்தவழியோரவழ கென்னசொல்வேன்சிங்காரம்
இருகண்களையுங்கவர்ந் தெழுகின்றதெகம்பீரம்

சந்தனம்அகில்புன்னை சண்பகங்கோங்குதென்னை
மந்தாரமொடுபன்னை மகிழினழகுதன்னை

வசனம்—என்ன அலங்காரம்! இவ்வழியருகிலேலகிற்கும் சந்தனம் சம்பீரம் வில்வம் அகத்தி செம்பரத்தை முதலிய மரங்கள் புஷ்பித்திருக்கும் காட்சிகள் என் இரு நேத்திரங்களுக்கும் அடங்கவில்லையே. ஆ! ஹா!

கானிலேயன்னதாழை காய்க்குதழகார்வாழை
மேனிமிர்பூகம்பாழை விரிக்குதேஇந்தவேளை

வசனம்—இந்தச் சிங்காரவனத்தில் அன்னதாழைகளும் வாழைகளும் அழகிய கனியைத் தருகின்றனவே. கமுகாதியன ஓங்கிவளர்ந்து பாழையைவிரித்து விளங்குகின்றனவே இதென்ன அதிசயம்!.

மருங்கில்மணக்கும்முல்லை மலர்ந்துசரிந்தஅல்லை
நெருங்குதேஉயர்தில்லை நிளமுருக்கேதெல்லை

வசனம்—வாசம்பொருந்திய வெட்சி அல்லை முல்லைகளின் அழகுகளை வரையறுக்கக்கூடவில்லையே! ஓ! இது என்ன மனோகரகாட்சி.

கானகத்திடை குயில் காட்டுதேமடமயில்
ஞானசக்கிதம்பயில் நிலையேமா இந்தக்குயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—சிறந்த அன்னப்பட்சியினதும் ஒய்யாரருளடைய கொக்கு கேகயப்பட்சிகள் முதலியவைகளினதும் அழகை வர்ணிக்கமுடியுமா? ஆகா!

ஓடுதேகேசரி உறுமிப்பாயுதேஅரி
நீடுதேவேசரி நெருக்குதேநாகரி

வசனம்—அதோ ஒரு குதிரையின் ஓட்டத்தையும் சிங்கத்தின் சீற்றத்தையும் பார்த்தேன். வேசரிகள் நிரைநிரையே செல்வதையும் யானை நெருங்கிவருவதையுங் கண்டேன். இவைகளெல்லாவற்றையும் ஈஸ்வரனே சிருட்டித்தார்! அவரது ஞானத்தையறியவல்லவரார்! கடவுளே நமஸ்காரம்!

## வேறு தரு.

(சேலைநெய்கிறேன் என்றமெட்டு)

பல்லவி.

அண்ணரைக்கண்டேன் — அதோவென
தன்னரைக்கண்டேன்

அநுபல்லவி.

உண்மைசொன்னதா லுளச்சினங்கொண்ட
உத்தண்டமாகிய உபைபலவிண்ட ... அண்

சரணங்கள்.

ரூபனன்னை யிருக்கும்வரைக்கும்
ஒருகுறைவாரா தவசவர்விளைக்கும்
பூபிரபலத்தை அறுப்பாருரைக்கும்
புன்மொழியவர்க ளுளத்திணைக்கரைக்கும் ... அண்

அங்கேயண்ணர்கள் கோல்களையாட்டி
அவைகளிலேசுமைக் குடுகுகள்மாட்டி
இங்கேவருகிறார் மந்தைகளோட்டி
என்னைக்காட்டுகிறார் தங்கரம்நீட்டி ... அண்

வசனம்—ஆ! என்ன சந்தோஷம். இக்காடெல்லாந்தாண்டிச் சேமமே சகோதரரை வந்து தரிசித்துவிட்டேன். இதுவும் உமது திருக்கடாட்சந்தான் ஈஸ்பரா!

யூதா கலித்துறை.

அப்பார்க்கு மெங்கட்கு மேலா யிருக்க அவாவுடைய
சொப்பன காரன் வருவது பார்வெகு தூரத்திலே
இப்பொழு தேயவன் சர்வந் தொலைத்திட யாவர்களும்
ஒப்பித மாகக் கொலைபுரி வோம்நல் லுபாயமிதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—பாம்பை மடிக்குள்ளே கட்டிக்கொண்டிருக்குமாப்போலேயும் வண்ணான் துறையில் முயல்போலவும் எப்பொழுதும் இவனுக்குப் பயந்துகொண்டிருக்கவேண்டுமா? அதோவருகிறான் சொப்பனகாரன், அவனைப் பிடித்துக் கொன்றுபோடுவோம் சகோதரரே.

ரூபன்வசனம்—ஆ! ஆ! இச் சண்டாளயோசனை செய்யலாமா?

யூதாவசனம்—ஓகோ! இவன் எங்களைக்கெடுக்கச் சதியாலோசனைசெய்யலாமா? இவன்சிரசைத் தடையின்றிக் கொய்வதே புத்தி.

ரூபன்வசனம்—இவன் நமது பிதாவுக்குப் பின்னிட்டவயசிற் பிறந்த பிள்ளையாதலால் இவன்மேல் அவர் மிகுபட்சம் வைத்திருக்கிறார். இவனை ஒன்றுஞ்செய்யாமல் விட்டுவிடுங்கள் தம்பிமாரே.

## இசகார் தரு.

(இன்னமும்வர்மமா என்றமெட்டு)

பல்லவி

இன்னமுந்தப்பவோ—இவன்
எள்ளளவுஞ்சோரியாமல் வல்லவர்க்கும்ராசனென்றான்

சரணங்கள்

கண்டகனிவன்றனம்மை வென்றுளன்றும்அரசாள்வ
தன்றியன்னை தந்தையரும் தெண்டனிடுவார்களாமே ... இன்
இத்தனைமகத்துவமி குந்தசொற்பனத்தைச்சொல்லி
எத்தியவர்மத்தியிலுங் கர்த்தனியம்பேசினவன் ... இன்
நெஞ்சதுதுணிந்தவனும் பிஞ்சினிற்பழுத்துச்சற்றும்
அஞ்சிடாதுவார்த்தைசொன்ன வஞ்சநெஞ்சன்துஞ்சிடாமல் இ
குட்டையுடையணிந்துநாம் கெட்டதண்ணீர்விட்டுக்கட்டி
தட்டளிந்திடவேவவர்னச் சட்டையுந்தரித்திட்டானே ... இன்
எப்பொழுதினுமெங்களை அப்பரும்புறக்கணித்து
முப்பழமும்பாலுடனே செப்பசனமீவதென்ன ... இன்
பிள்ளைகளிற்பத்துப்பேரும் பள்ளைமேய்த்தலைவுறவே
கிள்ளையைப்போலிவர்களை மெள்ளவளர்த்திடுவதேன் ... இன்
மேட்டிமைபதாணகனுத் தீட்டுமவன் நாட்டிகத்தை
கேட்டபின்னருந்தயையைக் காட்டுகிறீரே அப்பர் ... இன்.

வசனம்—இன்னமும் இவனைத் தப்பவிடலாமா? இப்படிச்சமயம் எப்போதுகிடைக்கும். இன்றே இவனைக் கொன்றுவிடுவது நல்லது அண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூபன் தரு.

(கானகத்தில்கானலைந்து என்றமெட்டு)

இந்தயோசனைசெய்யலாமோ இவன்சிரசைக்கொய்யலாமோ
சொந்தத்தம்பியைக்கொல்லவோ துரோகம்வருந்தானல்லவோ

வசனம் — ஐயையோ இச்சதியாலோசனை செய்யலாமா? பழி பழி சகோதரரே!

சகோதரர் வசனம்—இவன் எல்லோரையும் ஆள எண்ணுவது துரோகமல்லவா? இவனைக் கொல்லுவதே சரி.

ரூபன்

குறைவுளான் தம்பியல்லவோ கொல்லலிவன்றுநீர்சொல்லவோ
கறையெமைப்பார்த்தோலமிடும் கருதுயோசனையைவிடும்

வசனம் — இவன் நமது தம்பியல்லவா? உதிரமுருகுமல்லவா? இவன் இரத்தப்பழி நம்மைநோக்கி ஓலமிடாதா? ஒருவன்கொண்ட கர்வத்திற்காகக் கொலையா தீர்ப்பு? இந்த யோசனையை விட்டுவிடும் சகோதரரே.

சகோதரர் வசனம்—ஆகா! அப்பர்முதலாய் இவனை விழுந்து வணங்கவேண்டுமா? இவன் தொலைந்துபோனாற்றான் நாம் அச்சமின்றி வாழலாம். விபரீதபுத்தி நாசகாலமாய்த்தானேமுடியும். இவனை விடப்படாது, மிஞ்சினால் உன்றலையும் பத்திரம் பார்த்துக்கொள் அண்ணா.

ரூபன்

ஆபேல்தனைக்காயீன்கொன்றான் ஆதலாற்சாபத்துள்நின்றான்
ஓபாதகமும்மைச்சுடும் ஒருகுழியிற்றள்ளிவிடும்

வசனம் — ஆ! இப்படிபாதகமொழிசொல்வது கடவுளுக்கேற்குமா? இவனைக் கொன்றால் பிதாவும் இறப்பார். எனதுயிருக்கும் அனர்த்தந்தான் நேரிடும் ஆபேலைக்கொன்ற காயீன் சாபமடைந்ததறியீர்களா? கொலைபாதகத்தை என் விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறீர்? அதோதெரிகிற பாண்கிணற்றில் தள்ளிவிடும். அப்பால் நடந்தது நடக்கட்டும், இந்தப் பாதகத்தையும் பார்க்கமாட்டேன். நான் இவ்விடத்தில் நில்லாமல் ஓடிப்போகிறேன் சகோதரரே.

சிமியோன் வசனம்—அது நல்லபுத்திதான், தம்பி அங்கேகிடந்து பாடுபட்டிக்கட்டும். இதற்கு யாவருஞ் சம்மதமா கையுயர்த்துங்கள்.

மற்றச்சகோதரர் வசனம்—ஆமாம்! சம்மதம்! சம்மதம்! முக்காலும் சம்மதம்!

சகோதரர் விருத்தம்.

சொப்பனக்காராவாடா துரையெனவேயிருந்து
செப்பமாயரசுசெய்யச் சிந்தையிலெண்ணினையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியுந் தனுட்சி யென் றுகாம்பார்க்கவேண்டும்
தப்பறப்பாண் கிணற்றில் சடுதியிற்றள்ளுவோமே.

வசனம்— உனது சொப்பன மகத்துவத்தைப்பார்க்கவேண்டும். இங்கேவாடா! அந்தப் பாண்கிணற்றிலிருந்து அரசாட்சிசெய்து பார்க்கமாட்டாயா?

## யோசேப்பு தரு

(அப்பாமகனேபாம்பு என்றமெட்டு)

உன்சகோதரனல்லோ உங்கள்மனதுகல்லோ
உருக்கமுமக்கில்லையோ அண்ணரே அண்ணரே அண்ணரே

புழுப்போலத்துடிக்கிறேன் பொறுப்பாதம்பிடிக்கிறேன்
பொறுதித்தாள்வீரே அண்ணரே அண்ணரே அண்ணரே

அழுத்தமாய்நில்லாமல் அநீதியாய்க்கொல்லாமல்
ஆதரித்தாள்வீரே அண்ணரே அண்ணரே அண்ணரே

ஐயையோநான்காணே அறியாத்தனத்தாலேழை
அறைந்ததைப்பொறுத்திடுவீர் அண்ணரே அண்ணரே அண்.

மெய்யெல்லாம்பொங்குதே விறைத்துடல்நடுங்குதே
வீண்பழிசெய்யவேண்டாம் அண்ணரே அண்ணரே அண்ண.

அமலனேதவன்பார்ப்பார் ஆகிதந்தேகாப்பார்
அடியேனைவிட்டுவிடும் அண்ணரே அண்ணரே அண்ணரே

விமலற்கேற்காதபாவம் வீணையென்மேற்கோபம்
வேண்டாம்பொறுத்தருளுவீர் அண்ணரே அண்ண. அண்ண.

வசனம் நான்செய்த குற்றத்தைக் கடவுளுக்காய்ப் பொறுத்துக் கொள்ளுங்கள் அண்ணமாரே!

## தாண் விருத்தம்.

கெட்டையாநீயெமக்கு நிருபனுப்பஞ்சவர்ணச்
சட்டையாபோட்டுக்கொண்டாய் சடுதியிற்கழற்றுபார்ப்போம்
சொட்டையாசொன்னுய்நம்மைச் சொகுசாகக்கிணற்றிருந்து
திட்டையாய்த்தியானஞ்செய்து நிலைமாசாளுவாயே.

வசனம்—பஞ்சவர்ணச்சட்டையா? இதை நாம் இட்டுப்பார்க்கக் கூடாதா? கழற்று கழற்று.

யோசேப்பு வசனம்—இதைத் தேவையானல் எடுத்துக்கொள்ளுங்கள். என்னை விட்டுவிடுங்கள் அண்ணார்களே!

நத்தலி வசனம்—ஆகா! வடிவான சட்டையாய்த்தானிருக்கு. காத், இதைக் அங்கேபோடு. ஆசேர் இவனை மற்றக்கையிற்பிடித்து என்னுடன்கூட இழுத்துவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோசேப்பு தரு.

(அம்மா அம்மா என்றமெட்டு)

அண்ணு அண்ணு ரூபனண்ணு அடியேனைப்பாரப்
அநியாயமாய்க் கொல்லப்போருர் அனுகிரீவாராய்

என்னமனம் புண்ணுகுதே எப்படியுய்வேன்
என்தன்தம்பி கதறுவானே என்னநான்செய்வேன்

தாயேவிய நீயேயென்றும் தயவுபண்ணினுய்
சதியாய்க்கொல்ல விட்டுஎங்கே சார்ந்துநண்ணினுய்

நேயமதைக் காட்டாமிதென்ன நினைந்துநீக்கினுய்
நீசர்மோசம் செய்யவிட்டு நீபின்வாங்கினுய்

சின்னவய சிறுமடியேன் திருந்தஆசித்தாய்
தீமைமற்றோர் செய்யினும்நீ சேர்ந்துநேசித்தாய்

உன்முகத்தைக் காணுதற்கு ஓடிவாராயோ
உயிர்விடுமுன் தயவாயென்னை உற்றுப்பாராயோ

சொன்னபிழைக் காயடித்து என்னைச்சிட்சியும்
துயர்வருத்திக் கொல்லவேண்டாம் தொடர்ந்துரட்சியும்

அன்னையும்நீர் தந்தையும்நீர் என்னைவிட்டுவிடும்
அப்பர்கேட்டா லென்னசொல்வீர் அவருயிருங்கெடும்

வசனம்--இன்னமும் உங்கள்மனதிலே இரக்கம்வரவில்லையா? நான் உங்கள் தாசனுயிருக்கிறேன். என்னை விட்டுவிடுங்கள் அண்ணு!

ஆசேர் வசனம்—தாசனு! இராசனு? இதற்குள் தூக்கிப்போடுகிறோம் குசாலாயிருந்து ஆளுகைசெய.

யோசேப்பு வசனம்—ஐயோ பரமபிதாவே! இதோ பாண்கிணற்றில் விழுகிறேன் என்னை இரட்சியுஞ் சுவாமி!

## வேறு தரு.

(அதிபதிஅரிச்சந்த்ரன் என்றமெட்டு)

இந்தக்கிணற்றைப்பார்க்கச் சிந்தைகலங்கின்றேனே
எந்தவிதமிருப்பே னென்றேமலங்கின்றேனே

வந்துபாம்புதேளாதி வளைந்துகொண்டிருக்குதே
மயக்கமுடனேயென்றன் மனந்தனைக்கருக்குதே

மூன்றுங்கல்லுஞ்செடியும் மூடியேநெருக்குதே
என்னாவிரங்காரோ ஏக்கம்பெருக்குதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிரங்குந்துணைவர் ஒருவருமில்லையோ
விள்ளிலிதென்கால மேவிடுமெல்லையோ

எங்குநிறைந்தவா எல்லாமறிந்தவா
இங்குவந்தெனையாளும் இவ்விடராலிப்போரும்

பொங்குஞானவருளே புனிதபரம்பொருளே
பங்கமனத்திருளே பாறிடச்செயருளே

வசனம்—ஜெகதீசா! பாவிமேல் உன் திருக்கடைக்கண் நோக்கியருளுஞ் சுவாமீ!

## இஷ்மவேலர் வருகை.

(குடிகள்நாங்களே என்றமெட்டு)

பல்லவி

வியாபாரிகள்நாமே—இஷ்மவேல்
வியாபாரிகள்நாமே

சரணங்கள்

வியாபாரிகளல்லும் மிளிரொளிதருமெல்லும்
சோபாதிகளைவெல்லும் சுறுசுறுப்புடன்செல்லும் ... வியா

கிலேயாத்தின்பொருள்வாங்கிக் கிளர்ந்திந்தியாவைநீங்கி
தலையாயெகித்துமோங்கித் தழைக்கவிற்போந்தாங்கி ... வியா

நெடியவொட்டைகளோட்டி நீள்தழைபுனலூட்டி
அடிமைகள்வாங்கிக்கூட்டி அங்குவிற்போம்பாராட்டி ... வியா

அந்தவூரார்கண்டு ஆசைமிகவேகொண்டு
விந்தையுறும்பண்டு விலைபிசின்மிகவுண்டு ... வியா

சந்தவெள்ளைப்போளம் சரியானபிசின்பாளம்
விந்தையுடையவிழும் விற்போமக்கரைநீளம் ... வியா

வியாபாரிகள் வசனம்—நமது ஒட்டைகளைப் பத்திரமாய் ஓட்டிக்கொண்டு எகித்துக்குப் போவோம் நேசரே.

யூதா விருத்தம்.

நஞ்சகோதரனைக்கொன்று நண்ணிடும்பழியிற்சிக்கி
அஞ்சுவதாலிலாபம் ஆகுமோஇஷ்மவேலர்
மிஞ்சும்வாணிகஞ்செய்தற்கு மேவுறுமவர்க்குவிற்று
நெஞ்சினில்வன்மமாறி நேர்மையாய்வாழுவோமே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—இவனை வருத்திக் கொன்றதினால் நமக்குவரும் லாபமென்ன? அதோவருகிற இஷ்மவேல் வியாபாரிகளுக்கு விற்றுவிட்டால் "காராம்பசுவுக்குப் புல்லும் நந்தாவனத்துக்குக் களையும்" ஆனாற்போல எங்களுக்குப் பணமும் அவனுக்குத் தண்டனையுமாகுது. அப்படியே செய்வோம் சகோதரரே,

சிமியோனவசனம்—அது நல்லயோசனை தான் தம்பி!

யூதாவசனம்—நல்லது இவனைக் குழியிலிருந்து தூக்குங்கள்.

சகோதரர்வசனம்—சாகப்போனவுக்கு யோகம்வந்திருக்குது, இத்தடியிலே கெட்டியாய்ப்பிடியடா தூக்கிவிடுகிறோம்:

யூதாவசனம்—கூட்டிவாருங்கள் வியாபாரிகளுக்குவிற்றுவிடுவோம்.

யோசேப்புவசனம்—அண்ணா!

சகோதரர்வசனம்—வாய்பொத்து, பேசினாற் கொல்லப்படுவாய்.

சிமியோன் விருத்தம்.

பணத்திற்குமிகுந்தமுட்டுப் பாடப்பாபச்சைப்பாலன்
குணத்தினிலழகான்மிக்கோன் கொள்ளநீர்விருப்பமானால்
சணத்தினிலதிகவெள்ளி தந்துநீரேற்றுக்கொள்ளும்
அணைத்துநீர்கொண்டுசென்று லதிலாபமடைகுவீரே.

வசனம்—இந்த அழகிய நற்குணப் பாலியனை எங்கள் வறுமையின் பொருட்டு விற்கப்போகிறோம். அதிக பணந்தந்து வாங்குவீர்களா வியாபாரிகளே.

வியாபாரிகள் விருத்தம்.

ஒருசிறுபாலனுக்கு ஒக்கவேயுரக்கக்காசு
தருவமென்றெண்ணவேண்டாம் சல்லியுங்குறையுதிப்போ
இருபதுவெள்ளிக்காக ஈகுவோந்தருவீரானால்
விரைவினிற்றருரும்நாங்கள் வீண்நேரம்போக்கிடோமே,

வசனம்—அதிக பணந்தர எங்களுக்குக் காசுமில்லை அவசரமுமில்லை, இருபதுவெள்ளி வைத்திருக்கிறோம் தரப்பிரியமா?


யூதாவசனம்—இந்த உத்தம பையனை அவ்விலைக்குத் தரலாமா?

வியாபாரிகள்வசனம்—தராவிடில் வைத்துக்கொள்ளுங்கள், மூதிலே போட்டதார்? எங்கள்நேரம் விலையேறப்பெற்றது ஒரு கணப்பொழுதும் வீணாய்க்கழியோம். தருகிறீர்களா? இல்லையா?

யூதாவசனம்—என்னசெய்கிறது பணத்தைத் தாருங்கள், தந்தெற்றுக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யோசேப்புவை இஷ்மவேலருக்கு அடிமையாய் விற்றல்)



## யோசேப்பு தரு.

(போறேனிதோ என்றமெட்டு)

பல்லவி

என்னசெய்வே னேதுசெய்வேன்
இனியெவ்விதம் யாருரைப்பேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபல்லவி

இந்நாள்மட்டு மென்னைக்காத்த ... என்
ஈஸ்வரனா னேதுசெய்வேன்

சரணங்கள்

அப்பரென்னை யெண்ணி யெண்ணி அங்கலாய்த்துத் தேடுவாரே
இப்படியென்றறிந்தால் இதயம்புண்ணாய் வாடுவாரே ...என்
பன்னியநாடுவிட்டுப் பரதேசத்திற்போகலாமோ
பன்னிருவர்கூடிவாழ்ந்த பண்பையெண்ணி நோகலாமோ ...என்
சகோதரனென்றெண்ணிடாமல் தப்பிதமாயென்னை வைதார்
அகமுருகிடாதெனக்கே யநீதியானசெய்கைசெய்தார் ...என்

வசனம்—என் சகோதரர் எனக்குத் தீமைசெய்தார், நான் இனி என்ன செய்வேன் ஈஸ்பரா!

வியாபாரிகள் விருத்தம்.

முருக்கதுபருத்தாற்போல மோதிடுமுலக்கைக்காமோ
சருக்கரைதின்றுவாழ்ந்த சக்கையனிவனுக்காக
பெருக்கமாய்ப்பணங்கொடுத்தோம் பேச்சென்ன சட்டிபானை
வருக்கமாமட்டப்பர்தூக்க வாடாகொண்டேகுவாயே.

வசனம்—ஆ! உனக்கு வைத்திருந்த பணமெல்லாம் கொட்டிக்கொடுத்துவிட்டோமே! சொகுசாய்வளர்த்த உன்னை யார் வாங்கப்போகிறார்கள். இனிக் கஷ்டப்படத்தான் வேண்டும். சமது சட்டி பானை முதலிய அடப்பங்களைத் தூக்கிக்கொண்டுவாடா பயலே,

யோசேப்பு தரு.

(மாலையணிந்தேஉள்ளம் என்றமெட்டு)

சுமைசுமந்தறியேனே தூங்கிநின்றறியேனே
நகையிரட்சித்தாருவாய் நாயகனேசாமி
ஏழைச்சொகுசாய்வளர்த்த நிதம்நோவென்னவிளைத்த
இருக்கிறரோதத்தைக்கு ஈஸ்பரனேசாமி
ஆபிராம்குலந்தன்னில் அடியேனிந்நிலந்தன்னில்
மேவியடிமையானேன் மேலவனேசாமி
மாபிதாபகோத்திரம் வந்துசம்பத்பாக்கியம்
வருந்திச்சுமக்கலாமோ ஞானவானேசாமி
ஓராயிரவடிமை உன்னுதலைப்பிடிமட்டும்
சேருங்கொண்டுசெய்யவோ திவ்வியனேசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாராயுனதுநேசந் தற்பராவிசுவாசம்
தளராமலிருக்கிறேன் தாதாவேசாமி

கால்கள்தள்ளாடுதே கலேமிகசீடுதே
கருணையாய்ப்பேலன்தாராய் கர்த்தாவேசாமி

பால்பழமருந்தினேன் பலத்தொடிருந்தினேன்
பசிக்குணவளிப்பாரோ பராபரனேசாமி

வசனம்—கோத்திர மகிமையுள்ள குலத்திற்பிறந்து கொடுமைவி ளிமித்தம் அடிமையாகி ஆத்திரத்துடனே அடப்பஞ்சுமந்து அன்னி யதேசஞ் செல்லலாமோ ஆண்டவனே.

## ரூபன் புலம்பல்.

(வாயைத்திறந்துகொஞ்சம் என்றமெட்டு)

பல்லவி

தம்பியைத் தப்பவைப்பேனிதோ—அன்றேல்
சதிக்காளாவேனிதோ—நான் தம்பி.

அநுபல்லவி

கும்பிநரகுறவே கொல்லநினைந்தார் நல்லதுசெய்தேன் ...தம்பி

சரணங்கள்

கனவொன்றுகண்டானும் கர்வத்தைக்கொண்டானும்
கண்டிமைபண்ணினர் கொன்றிடவெண்ணினர்
குன்றினிலேதள்ள நன்றுசெய்தேன்மெள்ள ... தம்பி

சடுதிபோய்நோக்குவேன் தம்பியைத்தூக்குவேன்
தப்பிப்பிழையெனவொப்பித்தேமனச்
சாட்சியைநாட்டியே காட்டிடையோட்டியே ... தம்பி

வசனம்—ஆ! என் மனச்சாட்சி என்னை வாதிக்கின்றதே! எனக்கு என்ன வில்லங்கம்வரினும் யோசேப்பை மீட்கத் துணிந்துவிட்டே ன். அவனையா ஆகாரமின்றி அகாலமாய் இறக்கவிடுவது? தேவனே இன்னும் என் சகோதரர்கள் மனமிரங்கவில்லையா?

## வேறு தரு.

(கல்லாளடா என்றமெட்டு)

பல்லவி

கொல்லப்பார்க்கிறார்—ஐயோ
கொல்லப்பார்க்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

எல்லவரும் ஒன்றுகூடி எரிச்சலால்யோ சேப்பைநாடி
வல்லபழி தன்னைச்சூடி வதைக்கப்பார்க்கிறார் தம்பியை—எ.

குற்றமவன் செய்யவில்லைக் குணமெனிலு மவன்சொல்லை
மற்றவர்கள் மிகுதொல்லை வசனமென்கிறார் ஐயோ—வசன.

அவனையிரட் சிக்கவெண்ணி அமர்குழியிற் றள்ளப்பண்ணி
கவனம்செய்தேன் இனிநண்ணிக் கடத்திவிடுவேன்தம்பியைக்-க.

ஈதவனை யிட்டகுழி எட்டிப்பார்ப்போ மேதுபழி
பாதகமோ வென்றன்விழி பாதிப்போனதோ ஐயோ—பாதி.

வசனம்—ஆ! என் கண் மழுங்கிப்போயிற்றோ? யோசேப்! யோசேப்! ஐயோ காணேனே! என் பிரயாசமெல்லாம் வீணாயிற்றோ? அன்றி இரட்சிக்கப்பட்டானோ? ஒன்றும் தெரியவில்லையே கடவுளே!

ரூபன் (ஓடிச்சென்று) மறுவசனம் —யோசேப்பைக் கிணற்றில் காணவில்லையே! அவனெங்கே சொல்லுங்கள் தம்பிமாரே!

சகோதரர் விருத்தம்.

சிந்தைநொந்திரங்கவேண்டாம் சிறுவனைக்கொல்லவில்லை
வந்தனர்இஷ்மவேலால் வணிகர்கள்சிலபேர்கூடி
பந்தமாயவனிரத்தப் பழியெம்மேற்சூழுமென்று
சந்தோஷமாகவிற்றோம் தந்திட்டபணத்தைப்பாராய்.

வசனம் —பயப்படாதே அண்ணா! அவனைக் கொல்லவில்லை. இஷ்மவேலருக்கு விற்றுவிட்டோம், இதோ பணத்தைப் பார் அண்ணா.

ரூபன்—அதுவும் பாவந்தான், இனி என்னசெய்கிறது. பணமென்ன குணஞ்செய்யும்.

சகோதரர்—பணமுண்டானால் பிணமும் வாய்திறக்குமே! "கட்டி எட்டினமட்டுங்குத்தும், பணம் பதின்காதமுங்குத்தும்" என்பது தெரியாதா அண்ணா.

ரூபன்—ஓ! "சினத்தாற்போலறுத்தவழக்குச் சிரித்தாற்போவொட்டுமோ"? ஒருகோடிதிரவியம் ஒருகொடியிலழிவதை அறியீரா? அது நிற்க, நமது பிதாவுக்கு என்னசொல்லுகிறது?

லேவி—அவன் உடுப்பு இதோ இருக்கிறது. அதில் ஆட்டிரத்தைத்தோய்த்து இச்சட்டை காட்டிற்கிடந்ததென்று காட்டிவிடுவோம்.

ரூபன்—எப்படியாயினுந் தலைபழிந்துபோங்கள். என்மனம் திருத்தியும் ஆறுதலும் அடையாது. நான் ஒன்றும்பேசேன்! இதைப் பிதாவுக்கு அறிவிக்க ஆர் போகிறது?

தாண்—கழுவுக்கேற்ற கோமுட்டிபோல் நான்தானே யிருக்கிறேன். நான்போய்த் தெரிவிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபன்—அப்படியே சென்று அவர்மனதை ஆறுதற்படுத்திவருவாய் தம்பீ!

### வியாபாரிகள் ஆனந்தக்களிப்பு.

செட்டென்பதே ஒரு போட்டு—அதை
சீரில்லா விட்டாற் சிதைந்திடுங்கெட்டு
கட்டமற்றமுத விட்டு—அதை
கடத்தினு லெய்து மிலாபமெம்மட்டு

கடன்கொடுத் தால்மிகு தொல்லை பொருள்
கைமேலே காசுக்கு விற்பதுவல்லை
இடம்பெற மனதிலே ரெல்லை—வைத்துச்
செட்டு செய்திட்டாலோர் சேதமுமில்லை

கணதுள்ளி பெருவெள்ள மாகும்—லாபம்
கணக்கலைத் திட்டால் பலனற்றுப்போகும்
புனலில்லா மற்பயிர் சாகும்—நிதி
பூரண மாய்விட்டால் லாபமுண்டாகும்

நூற்றுக்கு மேலானு ஊற்று—அதை
நுண்ணிமை யோடழி யாமற்காப்பாற்று
நேற்றடித் திட்டதற் காற்று—இன்று
நில்லாதே யுள்ள நிலைமையைப்போற்று

### யோசேப்பு தரு.

(அடிக்கடி வருவானே என்றமெட்டு)

அடிமையா யெகிப்துக்குப் போறேனே—சாமி
அண்ணரால் வந்திதென்று கூறேனே

கொடிய வெமதுபவக் கூறீதோ—சாமி
குற்றந் தடுந்திடுங்கை மாறீதோ

அவலமாய்ச் சாவதிலும் அடிமைநன்றே—சாமி
அங்குங் கிருபைசெய்வா யென்முன்னின்றே

கவலைப் படுக்குண்டா மென்செய்யலாம்—சாமி
கருணையுண் டேலங்குங் கதித்துய்யலாம்

### வியாபாரிகள் வசனம்.

ஒருவன்—இதோ எகித்துதேசத் தக்கு வந்துவிட்டோம். முதல் இந்த அடிமையை விற்றுவிட்டு அப்பால் வேறு வியாபாரம் பார்ப்போம் நண்பரே.

மற்றவன்—அதுதான் நல்லது, வேறும் கட்டிக்கொண்டல்லவா திரியவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாபாரிகள் தரு.

(மாலையணிந்தே என்றமெட்டு)

இந்தமாநகர்தன்னி லிருக்குமானிடர்களே
எழில்சேரிப்பையனைக் கொள்வீர்களா

எந்தத்துரைமாருக்கும் ஏற்றிடும்பணிசெய்வான்
இனியபையனிவனைக் கொள்வீர்களா

புத்திபிருதியுள்ளான் பொறுமையுடனிருப்பான்
பூரணசுகமுள்ளான் கொள்வீர்களா

சுத்தமுடனிருப்பான் சுகபலனுமுண்டு
துரிதவினையாளனைக் கொள்வீர்களா

தேடக்கிடையானிவன் சிறியபொய்யுஞ்சொல்லான்
சிறுவன்றனைநீங்கள் கொள்வீர்களா

மாடத்துலங்கிடுவான் எடிவுஞ்செய்துவைப்பான்
வாய்ந்தஇவனையாருங் கொள்வீர்களா

வசனம்—அதி அலங்கார ரூபலாவர்ணியமுள்ள இந்த வாலிபனை ஆரேனும் வாங்குவீர்களா? மிகச் சமர்த்தன். எந்தப் பணிவிடையுஞ் செய்வான். யூக சாமர்த்தியமுள்ளவன் இவனை வாங்குபவர்களுக்கு அதிஷ்டம் வலியவரும். போனாற்கிடையாது, வாங்கில் வாங்குங்கள்.

### போத்திப்பார் விருத்தம்.

அழகுள்ளசிறுவன்றன்னை அடிமையாய்விற்பதென்றால்
வளமுள்ளவென்சேவைக்காய் வாங்குவேனிவனைநானும்
தெளிவுள்ளவிலையைச்சொல்லுந் திரும்பியான்கேட்பதில்லைக்
களிகொள்ளப்பணத்தைத்தந்து காளையைக்கைக்கொள்வேனே.

வசனம்—இச்சிறுவனையா விற்கிறது?

வியாபாரிகள் வசனம்—ஆம் துரையே.

## போத்திப்பாரும் வியாபாரிகளுந் தரு.

(ஆண்டிப்பண்டாரம் என்றமெட்டு)

போத். வாருஞ்செட்டிகளே—விற்றால்
சேரும்வட்டிகளே
வாரும்வியாபாரிகளே வாலிபனிவனின்நிலை
பாருமிவன்றனைக்கொள்வேன் பகர்ந்திடுவீருள்ளவிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியா. விலையைத்திருமே—இவன்
நிலையைப்பாருமே

உள்ளபணங்களெல்லாம் ஒன்றும்விடாமற்கொட்டி
தள்ளிவிட்டுவாங்கிவந்தோம் சடுதியாயவ்வூரைவெட்டி

போ. முகத்தழகுபோலவிவ னகத்தழகுமிருந்திடுமோ
வருத்துவிலைசொல்லவேண்டும் தொகுத்துரைத்தல்பொ
ருந்திடுமோ

வியா. ஒருபொருளைப்பார்த்தவுடன்உயர்வுதாழ்வுதெரிந்திடுமே
உண்மையாகநூறுவெள்ளிஎண்ணிவிட்டோம்பரிந்திடுமே

போ. எண்ணிக்கொடுத்ததொகை இயம்புமென்றுகேட்டேனு
உண்மைத்தொகையுரைத்தா லுவப்புடன்தரமாட்டேனு

வியா. எங்கள்வியாபாரமெல்லாம் இவனோடேகெட்டதையா
இருநூறுவெள்ளிசெல விவனாலாய்விட்டதையா

போ. சரிக்குச்சரிலாபம்வைத்துப் பெருக்கக்கொள்ளைபுரிவீரா
விருப்பமானுலிருநூறு வெள்ளிதரத்தருவீரா

வியா. லாபமில்லாவிடினுமுமக் கிச்சிறுவனைத்தருவோம்
மாபிரதாபனிவனை வாங்கிடும்நாம்போய்வருவோம்

வசனம்—பகாபிரபு! இராச சமுகத்துக்கு எலுமிச்சம்பழம்போன்ற இவன் உமக்கே உரியவன்! இவன் காத்திரமான கோத்திரத்தான்! இவன் பெருமையைப் பிறரறியமாட்டார்கள், எமக்கு நட்டம் வரினும் உமக்கே இவனைத் தருவது விருப்பம். எற்றுக்கொள்ளும் ஐயா!

போத்திப்பார்வசனம்—இதோ பணமிருக்கிறது எடுத்துக்கொண்டு சந்தோஷமாய்ப் போய்வாருங்கள் வியாபாரிகளே!

வியாபாரிகள்வசனம்—கோடி நமஸ்காரம், நாம் போய்வருகிறோம் துரையே!

போத்திப்பார் வசனம்—இங்கேவா உன் பெயரென்ன?

யோசேப் வசனம்— என்பெயர் யோசேப் எசமானே.

போத்திப்பார் வசனம்—நீ எனது உண்மையான பணிவிடைகாரனாய் நடந்துகொள்ளுவாய் யோசேப்.

## யோசேப்புவும் போத்திப்பாருந் தரு.

(அவதாரபுருடன் என்றமெட்டு)

பல்லவி

யோசே. நின் பாதஞ்சரணம்—பரி
பாலா ஜெயசீலா அநுகூலா—நின் பாதம்சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

சாதுகுணமுலவு நீதிசெறிபரவு சோதிவதனமுறு தாரா—அதி
தகமைமிகமருவு பகைகமையினையொருவு சகபரிபாலகெம் பீரா-
புகழ்-தழுவுநேசருபகாரா அதிகாரா மிருதீரா ஒப்பாரா ...நின்

பல்லவி

போத். அதி மதிசேர்சுந்தரா—நீபோர்
வாலை பூஞ்சோலை உளவேலை பார்—மதி.

சரணம்

பதியினதிபனென்று மெனதுதுதியையதி கெதியிலடையின்மிகு
பாங்காய்—மிகு—மதியினெடுவிவித பயிரையயர்வறவே மகிழ்
வினுடனிடுநற் போங்காய் –அதி—வருத்தமுறுவேலையென் றேற
ங்காய் பின்வாங்காய் எனைநீங்காய் மிகவுங்காய் ... அதி மதி

பல்லவி

யோசே. நான் பணிபுரிகிறேன் –பர
தேசி எனைநேசி மெய்பேசி நான்—பணிபுரி.

சரணம்

அணியுந்துணியு நல்ல வசனத்தையுமளித்து ஆதரித்தால்நானு
ழைப்பேன்—மிகப் —பணியுமனதுடனே துணிவுற்றுமக்கடுத்த
பணிவிடைசகலதுஞ் செய்வேன்—இடு—பயிர்கடனக்குந்னீர்
பெய்வேன் உளநொய்வேன் ஆரைவைவேன் மிகநைவேன்
நான் ... பணி

பல்லவி

போத். நீ விதனங்கொள்கிறாய் - உனை
விற்றார் உன்பெற்றார் ஒன்றுமற்றார் போலே—வித.

சரணம்

பதனமுடனேநடந் ததனவுரைகடனைப் பகராதமரவகைபாராய்
–நல்ல—பணிகள்கணிசமொடு துணிவாயனுதினமும் பட்சமுட
னேசெய்துவாராய்—உயர்—பண்புநெறிமிகுநேராய் நல்லசீராய்
உளம்கூராய் இதைஜராய் நீ ... விதனம்

போத்திப்பார் விருத்தம்.

நாட்டங்கொண்டெனதுசொந்த நந்தனவனமாமப்பூந்
தோட்டங்கண்டிவ்வாயங்கே துல்லியமாகச்சென்று
சேட்டங்கொண்டிடவெசெய்து செடிகொடிதருக்கள்நாட்டி
வாட்டங்கொண்டிடாமற்காத்து மகிமையாய்வாழுவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—நீ துக்கியாதே, எனது பூந்தோட்டத்தை உனக்கு ஒப்புவித்தேன் நல்ல வேலைசெய்வாய் யோசேப்.

யோசேப்வசனம்—அப்படியே நடந்துகொள்ளுகிறேன் எசமானே.

## யோசேப்பு இறந்தானென்று பிதாவுக்குத் தெரிவித்தல்.

தான் விருத்தம்.

தந்தையேகாட்டிலிந்தச் சட்டையைக்கண்டெடுத்தோம்
உந்தன்மைந்தன்யோசேப்பு உடுத்தியசட்டையிதோ
சந்தேகமுற்றோம்பாரும் தனயனையனுப்பினீரோ
எந்தவாறங்கேவந்த சேதிதானறிகிலோமே.

வசனம்—காட்டில் இரத்தந் தோய்ந்தபடிகிடந்த இந்தச்சட்டையைக் கண்டெடுத்தோம். யோசேப்பின் சட்டைபோ லிருந்ததால் உடல்பதறிக்கொண் டோடிவந்தோம். யோசேப்பு எங்கே? அவனை அங்கே அனுப்பினீரானால் மிருகம் பட்சித்திருக்கவேண்டும் பிதாவே!

யாக்கோபு வசனம்—ஐயோ! அப்பா! அப்பா! யோசேப்பே! என்னைவிட்டுப் போய்விட்டாயோ! அடா பாலா! என்னுதரம் எரியுதே லா!

யாக்கோபு விருத்தம்.

புத்திராஎன்னைவிட்டுப் போனாயோபுனிதசோதி
வத்திராஉன்னைநானே வனத்திற்கனுப்பிமாய்த்தேன்
பத்திராசனத்திருந்து பாராள்வாயென்றிருந்தேன்
சித்திராஉனதிரத்தம் செகத்திற்காணப்பெற்றேனே

வசனம்—என தன்பான மகனே! உன் ஒளிபொருந்திய முகத்தைக் காண ஆவலாயிருக்கையில் உன் உதிரந்தோய்ந்த சட்டையையா நான் காணப்பெற்றேன்! உன்னை வனத்துக்கனுப்பிக் கொலைசெய்தவன் நானே! இனி என்ன செய்யப்போகிறேன் பாலா!

### யாக்கோபு தரு.

(தாயைவிட்டுவந்துகாட்டில் என்றமெட்டு)

பல்லவி

என்னைவிட்டு நீபிரிந்து
இறந்துபோனாயோ என்னை மறந்துபோனாயோ

சரணங்கள்

உன்னைநினைக்க நினைக்கவுள்ளம் உருகுதேமகனே
உன்சட்டையினில் உதிரம்வந்ததேதோ
ஒழிந்தாயோபாலா இனிக்கண் ணொளியேதுசிலா ... என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதினுமுன் முகத்தைப்பார்த்து இன்புற்றிருந்தேனே - ஆ!
இப்போதினமிர் கங்கள்கொன்றதோ
என்செய்வேன்சுதனே ஒளி இலகும்பூம்பதனே ... என்

சகோதரர்களைப் பார்க்கவென்று சதிக்கனுப்பினேன்—உனைச்
சண்டாளவினை மிர்கங்கள்கொன்று
தின்றதுமெய்யோ இவர் செப்புதல்பொய்யோ ... என்

பாலவயது பதினேழிலுன்றன் காலக்குறைகிற்றோ—நீயும்
பதறிச்சிகேமிற் கதறியிறக்கப்
பாவிபெற்றேனோ அங்கே போகச்சொற்றேனே ... என்

வசனம்—அப்பா யோசேப்பு ஓடிவரமாட்டாயோ! என்னசெய்யப்போகிறேன் அடா பாலா!

## வேறு தரு.

[வா வா வா என்றமெட்டு)

பல்லவி

வா வா வா எனக் கூவியழைக்கிறேன்நீ
வாராயோமகனே முத்தந் தாராயோமகனே

அனுபல்லவி

ஐயோ வா அப்பா வா ஓ — வா வா.

சரணம்

தேவாவிதுவுன்றன் திருவுளமோமகன்
சாவாதிருக்கவருள் தாவில்லையோ அகம்
தாங்குவேனோ துயர் நீங்குவேனோ இனி
ஓங்குவேனோ மகனே வா அப்பா வா — வா வா.

## பென்சமீன் சோக விருத்தம்.

இறந்தாயோஎன்றனண்ணை என்னைநீதனியேவிட்டு
மறந்தாயோஎன்னைநீயும் மனதொருமித்துஎங்கே
பறந்தாயோமாயமான பாருலகத்தைவிட்டுத்
துறந்தாயோஎனதுநெஞ்சம் துடிதுடித்தழுகின்றேனே.

## பென்சமீன் தரு.

(வாடினேன்வாடி என்றமெட்டு)

ஐயையோஅண்ணை அகன்றுவிட்டேனே
ஆறுத்துயராலே அல்லல்தொட்டேனே

வையகத்துநப்பி வாழ்ந்திருந்தேனே
வன்மொழிகேட்டேன்ம னந்திருந்தேனே

சின்னத்தப்பியென்று என்னைநேசித்தாய்
தினந்தினநாளுந் திருந்தஆசித்தாய்

உன்னைஅகன்றே உதவியற்றேனே
ஓயாததுக்கம் உளத்திலுற்றேனே

அண்ணமார்என்னை அநீதிசெய்வாரோ
அற்பபிழைகண் டதிகம்வைவாரோ

புண்ணுப்மனது புழுங்கிறேனங்கே
புனத்தில்மாண்டாலோயா புலம்புறேன் இங்கே

ஆருடனென்குறை யைக்கூறுவேனே
அன்பாயார்தேற்ற அகமாறுவேனே

நேருடனென்னை நிமலாகண்ணோச்காய்
நேர்ந்ததுயரை நிலமீதுநீக்காய்

வசனம் — ஆ! ஆபிரகாம் ஈசாக்கின் தேவனே! எனக்கு இனித் துணையார். என்னசெய்யப்போகிறேன் ஜெகதீசா!

## யோசேப்பு தோட்டவேலை செய்தல்.

### யோசேப்பு விருத்தம்.

கூட்டத்தைதப்பிரிந்துவிட்டேன் கொள்ளியாகுலத்தினாலே
வாட்டத்தையடைந்தேனெந்தன் மகிமையையிழந்தேன்பாவி
நாட்டத்தையுன்மேல்வைத்து நான்முன்னர்செய்திடாத
தோட்டத்தின்வேலைசெய்யச் சுவாமிநான்செல்கிறேனே.

### தரு.

(கச்சேரிவேலைபோனல் என்றமெட்டு)

மண்ணிலுதிக்கபின்னர் வயல்புலமறியேன்
வாய்ந்தபயிர்செய்திடும் வகைகளைக்குறியேன்

திண்ணியகுலத்தில்வந்த சீர்த்திபெதுவோ
சிறியனியான்பணிபுரிய நிருபமிதுவோ

கொத்திவெட்டிவரம்புகளைச் சுற்றிக்கட்டியே
கொழுமையுற்றபுருவைகளை அடைப்பேன்பட்டியே

உத்திபானந்தன்னில்நாளும் உள்ளங்களிக்க
உண்மையாய்ப்பண்செய்வேன்பயிர் ஓங்கிச்செழிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிய வேலையாலேயுடல் கடுத்திளைக்குதேஐயோ
கனத்தவெயிற்றாக்கத்தாலே மிகக்களைக்குதேஐயோ

துடினவண்ணார்செயலால் துயரைவிளைக்குதே
துக்கமென்னிருதயத்தைச் சூழ்ந்து துளைக்குதே

## வேறு தரு.

(உக்காவிற்ன என்றமெட்டு)

போத்திப்பாருரைபோலநாடிப் பூங்காவனத்திற்புகுந்துடாடி
காத்திரமான தருக்கள்தேடிக் கலந்துகாட்டுவேன்கடிதிலோடி

செடியமலரின் விதைகள்விதைத்தேன் நிழல்தருமரவகைகள்வி
ரைத்தேன் [ரைத்தேன்
செடிகளின்கனு முளைகள்திரைத்தேன் சிறுகன்றுகளைச்சூழவ

கால்கள்கரங்கள்கடுத்துழையுது கனத்தவேர்வைசடத்தாற்பாயுது
சால்புறவைத்ததருக்கள்சாயுது சார்ந்தவெயிலாற்றளிருங்காயுது

மேலேபந்தரிட்டுமறைப்பேன் வெயிலினால்வரும் விறுகுறைப்
பேன் (ப்பேன்
சாலமுயன்றுதண்ணீரிறைப்பேன் தருக்கொடிசெடியதனைநிறை

என்தன்மெய்யினிளைப்பைமாற்றி எம்பரனுக்குத்துதிகள்சாற்றி
மன்றில்சேர்ந்ததுயரைமாற்றி வானேனைத்துதித்திடுவேன்போ
ற்றி

போத்திப்பார் விருத்தம்.

எந்தனதடிமையாக ஏற்றுத்தோட்டத்தில்வைத்த
சிந்தனையுடையவந்தச் சிறுவனுமென்னசெய்து
வந்தனனென்னப்பார்க்க மனதினினினைந்தேனந்த
நந்தனவனத்தைநாடி நானிதோசெல்லுவேனே.

வசனம்—அடிமையான யோசேப்பை நந்தனவனத்தைப் பராம
ரிக்கும்படி வைத்தேன். அவன் அதியூக்கமாயிருந்தான். ஆதலால்
இன்று அந்த நந்தாவனத்தைப் போய்ப்பார்ப்போம்.

## போத்திப்பார் தரு.

(ஆகாஎன்னென்றசொல்லுவேன் என்றமெட்டு)

பல்லவி

ஆகா என்னென்று சொல்லுவேன்—இந்த
அருமைசேர்பொழிலதி லெளிலதையின்னதென்று—ஆகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

வாழையுடனேயன்ன தாழைகள்நிரையும்
வருக்கையுடனே பூகம் மருதொடுசுரையும்
பாழைவிரிக்கும்வேளம் படர்கருவேம்பு
பாதிரிமகிழ்முல்லை மல்லிகைசோம்பு ... ஆகா

சோளங்கம்புதினை சுரைகெக்கரியும்
தோடைமாதாளமர் தாரவெள்ளரியும்
காளையிவன்நிரைத்தான் கண்களைப்பறிக்குது
கருமத்திற்பெரியவ னிவனெனக்குறிக்குது ... ஆகா

இந்தத்தடாகத்தா விந்தஞ்செங்குவளை
இருக்குதாம்பலல்லிக் கிடையிலேதவளை
அந்தக்கரையில்நெல்லி யாச்சாபேரீஞ்சு
அத்திஇத்தியசோகி னழகுபாரோர்ந்து ... ஆகா

சந்தனமகில்வில்வம் சண்பகப்பூக்கள்
தண்ணீர்க்கீதம்பாடித் தங்குதேனீக்கள்
சுந்தரமுறுசெவ் வந்திபிருவாட்சி
சுகந்தந்தொளிருது இதுவேகண்காட்சி ... ஆகா

போத்திப்பார் விருத்தம்.

நினைமுகநல்லவேலை செய்திருக்கின்றதிந்த
வனமதிலுலநின்தேன் மனமொடுபணிபுரிந்த
உனதுசேவைக்குத்தக்க உன்னதமருளவேண்டும்
எனதுடைமனையைநாடி என்னுடன்வருகுவாயே.

## போத்திப்பாரும் யோசேப்புந் தரு.

(சோபனபித்தா என்றமெட்டு)

போத். மாதுர்யமுள்ளாய் மதிப்புக்கொள்ளாய்
மனமுற்றேன்பிள்ளாய்
மனமுற்றேனே மனமுற்றேனே மனமுற்றேன்நானே
மகிமைபெற்றாய் தகமையுற்றாய் மனைக்குப்பற்றாயே. மா

யோ. எதுவிதித்தம் காதலிருக்த இறைவனுஞ்சித்தம்
இறைவன்சித்தம் இறைவன்சித்தம் இறைவனுஞ்சித்தம்
ஏழைச்சிறியேன் எதுக்குமியேன் ஏற்றமறியேனே—ஏ

போத். இவ்வுடைநீக்கி எருடைபாக்கி என்முன்வாநோக்கி
என்முன்வாநீ என்முன்வாநீ என்முன்னேவாநீ
என்மனைமாடம் தன்னின்கபாடத்தின்திறப்பீவேனே. இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—எனது அன்பான வாலிபனே! உனது நேர்மையானந டை உன்னை உயர்த்திற்று. நீ யூகசாமார்த்தியமுள்ளவன் இன்று முதல் உன்னை எனது அரண்மனைக் காரியஸ்தருக்கிலேன் எனது மாளிகைத் திறவுகோல் உன்வசத்திலே ஒப்புவித்தற்கு நீ இந்த உடையைக்கி இதோ இருக்கிற புதிய உடைகளை அணிந்துகொள்வாய் யோசேப்,

யோ. அவ்வியமற்றேன் செவ்வையதுற்றேன் அன்புபெற்றேனே
அன்புபெற்றேன் அன்புபெற்றேன் அன்புபெற்றேனே
அஞ்சலிசெய்தேன் அடியேனுய்ந்தேன் அழுக்காறெய்தேனே

வசனம்—மகாபாக்கியம், உமது சித்தம்போல் நடந்துகொள்வேன் ஆண்டவனே,

போத்திப்பார்வசனம்—இதோ எனது அரண்மனையின் திறவுகோல்களை உன்வசந் தந்தேன் ஏற்றுக்கொள்வாய் யோசேப்.

## போத்திப்பாரின் காதலியும் தோழிகளும் பூங்காவில் உலாவுதல்.

காதலி விருத்தம்.

ஓங்கியேயுயர்பூஞ்சோலை உச்சியின்வானரங்கள்
தூங்கியேகனிபறித்துத் துள்ளிக்கூத்தாடிநிற்க
மாங்குயிலிராகம்பாட மஞ்ஞைகள்நடனமாடப்
பாங்கிகாள்மலர்கள்கொய்து பண்பொடுகூடுவோமே.

### காதலியுந் தோழிகளுந் தரு.

(ஆறுமுககாவலவர்போலே என்றமெட்டு)

காதலி. சுந்தரநந்தாவனக்காட்சி—இதைச்
சொல்லமுடியாவெகுமாட்சி
எந்தவிதமிதற்கத்தாட்சி – சொல்வோம்
இதனைப்போமிருசூட்சி

தோழி. சிங்காரமானமலர்க்கொல்லை—இந்தச்
செகதலத்தெங்கேனுமில்லை
சங்கைநந்தியாவர்த்தமுல்லை—வாசந்
தந்திடுதிதற்கேதெல்லை

காதலி. சந்தனமகில்பாரிசாதம்—உயர்
சண்பகவாசம்வீசும்காதம்
கந்தநுகர்சுரும்புகீதம்—பாடிக்
காட்டுதேதனதுடைநாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி. மல்லிகைரோசாவுடனந்தி—தனில்
மலர்ந்திடுமந்தாரப்பந்தி
நல்லழகானசெவ்வந்தி—மிகு
நறைகமழுதிதனைச்சிந்தி

காதலி. கோலக்கலாபமயிலாட—உயர்
குயிலினமினிமையாய்ப்பாட
சிலப்புறுக்கள்நடமாடப்—பல
சிறந்தகுச்குடனிலைநீட

தோழி. வண்டினமிருமிசைபாடி—உயர்
மலர்மதுவையருந்துங்கூடி
கண்டுமந்திகள்நடமாடி—மிகக்
களித்திடுதேவினையாடி

காதலி வசனம்—இந்த நந்தாவனத்தின் காட்சியை யாரால் வர்ணிக்கக்கூடும் பாங்கிகாள்!

போத்திப்பார் விருத்தம்.

ஏவலனேநீவாராய் யினியபூங்காவினுக்கு
ஆவலதாகச்சென்று அருமலர்கொய்துநிற்கும்
பாவலர்புகழுகின்ற பாவையென்றேவிதன்னைக்
காவலனழைத்தாரென்று கடிதினில்வரச்செய்வாயே.

வசனம்—அடே சொக்கலு, நீ பூங்காவினிடமாய்ச்சென்று அங்கேகிர்கும் எனது தேவியை நான் வரும்படி அழைத்தேனென்று தெரிவிப்பாய்.

ஏவலன் வசனம்—அப்படியே தெரிவிக்கிறேன் எசமானே.

ஏவலன் மறுவசனம்—உம்மை எசமான் அழைக்கிறார் ராணியே.

காதலி தரு.

(தலக்குசெம்பொன் என்றமெட்டு)

மிண்டானவயவர்களுனதடி கண்டாலும்பயமுடனவருளம்
திண்டாடிபகவறிவதுகெடுமே—பெண்ணயிங்குறவே
விண்டாயதைதயேதெனஓதிடுமே

மாதாதண்டாமரைமலர்நிகர் பாதாவதிவிரைவினிலெனையுன்முன்
வதாய்வரஅருளினையுரைநிரையே—எனதுடைய
ஆதாரமதாகியேவளர்துரையே

வசனம்—பொற்பிரகாசம்பொருந்தி யழகெறிக்கும்பிராணநாயகரே என்னை நின்சமுகத்துக்கழைத்த கருமத்தை விளக்கவேண்டும் அன்பரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போத்திப்பார் விருத்தம்.

இலவுற்றபஞ்சின்பாத மிலகுமென்றேவியேநான்
பலமுற்றசாதியார்கள் பகையுற்றுவிளைத்திடுகிற்கும்
கலகத்தையடக்குதற்குக் கடிதில்நான்போகவேண்டும்-
நலமுற்றமனையைநாடி நட்புடனிருந்திடாயே.

வசனம்—எனது நேசம்பொருந்திய காதலீ! நான் ஓர் கலகத்தை யடக்குவதற்காகப் போகவேண்டியிருப்பதால் நீ நமது சுந்தரமாளிகையில் வீற்றிருப்பாய் பிராணநாயகி.

### போத்திப்பாரும் காதலியுந் தரு.

(சிங்கத்திலுல்லாள்வருந்தி என்றமெட்டு)

காதலி அன்புறுபிராணநாதா அடுத்ததென்னநீதா
என்றனைப்பிரியிலெப்படி யிருப்பேன்சொலலாகாதா

போத். மின்பொலிமுகத்துமாதே விதனநீகொள்ளாதே
பொன்பொலியகத்திலிரு புகல்வார்த்தைதள்ளாதே

காதலி. போசனநானுண்ணுவேனோபொருதுயில்பண்ணுவேனோ
ஆசனத்தில்நண்ணுவேனோ அலங்காரமெண்ணுவேனோ

போத். மிக்கமனப்பரிவேன் வேண்டியதுபுரிவேன்
தக்கசன்மானந்தருவேன் சடுதியோடிவருவேன்

காதலி ஈருடலோருயிரெனநா மூலவிடுதல்பொய்யா
சாருதாமதங்கள்செய்யாச் சடுதிவருதல்மெய்யா

போத். புதியவிடந்தனைமருவேன் போந்தமனம்வெருவேன்
அதிகெதியதாய்வருவேன் அன்பாய்முத்தந்தருவேன்

போத்திப்பார்வசனம்—அவசியம் போகத்தான்வேண்டும். நீ மறுத்துப்பேசாதே. இந்த யோசேப்பை உனது பிள்ளையோல் நடத்துவாய் பிராணநாயகி.

காதலிவசனம்—அப்படியே செய்கிறேன் பிராணநாதா.

### காதலி தரு.

(என்னரூபலாவண்யமோ என்றமெட்டு)

பல்லவி

என்னசிங்காரமோ—இந்தவாலிபன்ரூபம்
என்னசிங்காரமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

புன்னகைசெய்வதைக்கண்டு புலன்கலைந்திடுதே
உண்ணஉண்ணஎன்றனது உணர்வதுசோருதே ... என்

மன்னவனிவனுடைய வதனஞ்சந்திரனோ
மயங்குதேஎனதுளம் வாய்த்தவித்திரனோ ... என்

வட்டத்திகிரியை ஒட்டும்புயமுள
இட்டன்தனதுடை மட்டற்றிடுமொயில் ... என்

மதியுங்கடையும் மலர்நேர்விழியும்
வதியுஞ்சுதியும் 'வதனத்தொளியும்' ... என்

## வேறு தரு.

(ஆறுமுகாவலர்போலே என்றமெட்டு)

என்னநினைக்கிறுயென் மனமே—பகல்
இரவாய்க்கலங்குகிறுய் மனமே
அன்னியனல்லவோவென் மனமே—பதி
அறிந்தால்மோசம்வருமே மனமே

பணிவிடைகாரனல்லோ மனமே—அவனைப்
பார்த்தால்மயங்குகிறுய் மனமே
துணிவாகக்கேட்கலாமோ மனமே—உடல்
துணுக்கமுறுகுதேயென் மனமே

கண்கள்கவருகுதே மனமே—முகக்
காந்திமயக்கிடுதே மனமே
பெண்கட்கிதுமுறையோ மனமே—ஒரு
பெரியோன்மனைநானல்லோ மனமே

என்னைமறந்திட்டேனே மனமே—இனி
எதுவரினுமவரட்டும் மனமே
பின்னறியப்போருர் மனமே—என்
பிரியந்தனைமுடிப்பேன் மனமே

## யோசேப்பு விருத்தம்.

தாயிறந்திட்டாளென்றன் தந்தையுமின்கேயில்லைப்
போயினர்பிறவூர்காடிப் பொலிவுறவளர்த்தந்தை
தாயினைப்போலேயெண்ணிச் சார்ந்தனன்றுயேயுன்றன்
சேயினைப்போலேயென்னைச் சேர்த்தினிதாளுவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—என்து அன்னையுமிறந்துவிட்டாள். அப்பரும் தூரதேசத்திலிருக்கிறார். என்னைத் தற்போது ஆதரித்துவரும் தந்தையும் பயணம்போய்விட்டார். இனி நீயே என்னன்னைபோலிருந்து என்மேற் றயைசேர்த் தாதரித்தாளுவாய் அம்மணி.

காதலி விருத்தம்.

சேர்த்திடநினைத்ததுன்மை சேயினைப்போலேயல்லப்
பார்த்திபன்போலேவைத்துப் பட்சமாய்நடத்திடுவேன்நான்
ஆத்திரங்கொள்ளவேண்டாம் அடுத்தவர்றியவேண்டாம்
காத்திராயோகம்பெற்றாய் கனபவுள்சடைகுவாயே.

வசனம்—உன்னையோர் பார்த்திபன்போல நடத்த யோசித்திருக்கிறேன் நண்பரே.

(யோசேப்பு அப்புறஞ்சென்று புலம்பல்)

விருத்தம்.

ஆலைவாய்க்கரும்பதானேன் அரவின்வாய்த்தேரையானேன்
காலைபுட்பட்டயானைக் கன்றெனம்புலம்பலானேன்
மேலைவானவனுக்கோரா வினைதனைக்கடக்கவெந்த
மூலையிலொதுங்குவேனோ முதல்வனேயருள்செய்வாயே.

வசனம்—இது என்னகொடூரம்! நான் பொறியிற்பட்ட எலிபோல அகப்பட்டுக்கொண்டேனே. இதைவிலக்கியருளும் பரமபிதாவே.

## யோசேப்பு தரு.

(என்னடா என்றனை என்றமெட்டு)

தேவநேசமில்லாத் தோகைதன்கண்ணியிற்
சிக்கிடவேவழிதேடுகிறாள்
பாவநினைவை நினைத்துபதியைப்
பறுவாய்பண்ணுதனம்வாடுகிறாள்

தீயிற்புழுப்பற்று மோவென்னுளத்தினிற்
றீயஎண்ணம்வந்து எதிடுமோ
தாயெனநான்நினைக் கவவள்துர்ச்சிந்தை
தன்னைவைத்தால்மனம்மாறிடுமோ

தலைவனைறக்குட் கருமமிருக்குது
தப்பாமலங்குசென்றிடுவேன்
பலபலயோசனை பண்ணியென்னையெட்டிப்
பார்க்கவந்தால்நானுமோடிடுவேன்

வசனம்—தாயே நான் உனதுபுத்திரன், என்னை அந்தநிலைமையில் நடத்திக்கொள்வாய் அம்மணீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலி தரு.

(என்னடா என்றனை என்றமெட்டு)

வாய்திறந்தேஉன்னைக் கேட்டதினுலென்றன்
மானத்தையுனக்குவிற்றுவிட்டேன்
நியாயமல்லவென்னை மோடிசெய்யாதேநீ
நில்நில்நானுனைப்பற்றிவிட்டேன்

பொது விருத்தம்.

போத்திப்பார் யோசேப்பில் நேசம்வைத்துப்
புகழ்ச்சியுடன் தன்மனைக்கா ரியஸ்தனுக்கிக்
காத்திரமா யெண்ணியங்கு வைத்துச்செல்லக்
காரிகையு மிவன்மேலே காதல்கொண்டாள்
வத்திகேர்த் தருக்கேற்கா தெனமறுத்தான்
இட்டசால் வையைப்பிடித்தாள் விட்டுப்போனான்
ஆத்திரமாய்ப் பாதவித்துச் செய்வதேதென்
றறியாம லகொந்தா ளரிவைதானே.

காதலி தரு.

[வசாங்கலமணியாடவாடா என்றமெட்டு]

பல்லவி

உளநைந்திடச்செய்து ஓடினனே

சரணங்கள்

ஊராரெல்லாருமதித்திடு ஒவியமென்றெண்ணு
உரத்துடனே மறுக்கதுட்ட
உத்தண்டனின் சித்தமென்ன ஓ கோ ... உள

மடமாதர்மாய்கைக்குட்படா மானிடனுமுண்டோ
வனிதைநாடக் குமானே
வந்ததுவோ இந்நாளில் ஆ ஆ ... உள

கரும்பானதை விரும்பாதகற்றிய பெரும்பாதகனிவனே
கண்மனமோ சின்னக்குணங்
காட்டிஓடுந் தாட்டிகமென் ஓ கோ ... உள

செத்தைதன்னி லிலைவிடுபல்லி மெத்தையிலேறிடுமோ
சித்தமிருந் பொத்தமிதாவித்
தியன்செய்த மாயமென்ன ஆ ஆ ... உள

வசனம் — நல்லது போனது போகட்டும், அந்த அடிமைப்பயலை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலி விருத்தம்.

மன்னவனில்லையென்று மனதிலேயோர்மங்கொண்டு
சொன்னமாளிகைதனக்குத் தொடாதிகாரியென்று
உன்னியேதுணிவுகொண்டு ஊழியனருகில்வந்து
என்னைச்சன்னைகள்புரிந்தா னென்னென்றுசொல்வேன்பாங்கி.

## காதலியுந் தோழிகளுந் தரு.

(ஆதிசிவமைந்தனேவர என்றமெட்டு)

காதலி--என்னசொல்வேன் பாங்கிகளே—இவன்சதியை
ஏதுசொல்வேன் பாங்கிகளே
உன்னமனம் நொந்திடுதே—நினைக்கும்போது
உள்ளச்சினம் வந்திடுதே
உரமோடு கருவமாக
மருவநினைந்து சருவினனே—என்ன.

தோழி—இவனைமனை யாற்றள்ளுவாய்—எங்கள்ராணியே
ஏதுன்சித்த மெனவிள்ளுவாய்
கவனித்திருந் தானேதுட்டன்—அவனைப்பார்த்தால்
காரியவா னெனசிட்டன்
களவுள்ளுளமும் வெளிநல்லெழிலும்
தெளிவும்பொலிவும் உளபாதகனும்—இவனை.

காதலி--பசுத்தோல்போர்த்தபுலியே—அவனைப்பார்த்தால்
பற்றுமேதம னக்கிலியே
அசுத்தநடை யுள்ளபயல்—அவன்செய்தது
அதிகதுணி வானசெயல்
அதிபன்வரஇச் சதியைபோதிக்
கெதியிலடக்கப் பதில்செய்வேனே—பசுத்.

தோழி—அதுவரைக்குங் காவல்வைப்பீர்—காவலரை
அச்சறுக்கை செய்யச்செப்பீர்
பொதுமகளென் றெண்ணினனோ—அத்துட்டன்மனம்
பொருந்திச்சேட்டை பண்ணினனோ
புலையன்கர்வங் குலையச்செய்யத்
தலைவன்வந்து நிலைசேருவரே—அதுவரை.

தோழி வசனம்—இத் துட்டனை எசமான் வரும்வரைக்கும் அறுக்கையில் வைப்பியுங்கள் அம்மா.

காதலி வசனம்—நமது காவலரைச் சீக்கிரம் அழையுங்கள் பாங்கிகாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலி விருத்தம்.

காவலசேர்ரீர்கேளீர் காரியகர்த்தனுக
ஏவலன்றன்னைவைத்து என்ப்ராணநாதர்போனார்
கேவலமாகவென்னைக் கிட்டிசீயசேட்டைசெய்தான்
கூவிநோடிறன்னீர் கொடுவந்துகாவல்செய்வீர்.

வசனம்—யோசேப்பென்னும் அடிமைப்பயலை மனைக்கதிகாரியாய் வைத்து எனது தலைவன்செல்ல அவன் கர்வங்கொண்டு என்னை யணுகிச் சேட்டைசெய்தான். நான் கூக்குரலிட இதோ இருக்குஞ் சால்வையையும்விட்டு ஓடிப்போனான். அவனைத் தேடிப்பிடித்துக் காவல்செய்வீர் காவலரே!

காவலர் வசனம்—அப்படித் தணிவா? அவனைப்பிடித்து அறுக்கையாய் அடைத்துவைக்கிறோம் அம்மணி!

## காவலர் தரு.

(வன்னமாதேபாங்கிகாள் என்றமெட்டு)

துட்டனெங்கேயெனத்தேடித் துரிதமாய்ப்பின்னுகவோடி
சட்டெனக்கைப்பற்றிடுவோம் சங்கதியைச்சொற்றிடுவோம்

பார்த்தாலோர்கூலமடா பாய்ந்தாற்சார்த்தூலமடா
ஆர்த்தோடிப்பார்த்திடுவோம் அவனையிங்குசேர்த்திடுவோம்

அதிகாரியானனடா அறிவிழந்துபோனனடா
கெதியிலாவடிமையடா கேட்டதுகொடுமையடா

அங்கவன்நடப்பதுபார் அவ்வரண்கடப்பதுபார்
தங்கிடாதோடிப்பிடிப்போந் தலைவியெண்ணத்தைமுடிப்போம்

காவலர் விருத்தம்.

அதிகாரியாகவந்த ஆணவத்தாலேசற்றும்
மதியாமற்போத்திப்பாரின் மாதினைச்சேட்டைசெய்தாய்
சதிகாராவுனதும்பாவித் தத்துவம்மெய்யென்றெண்ணி
மதிமோசம்போனுய்வாராய் மறிப்பிடப்போகிறோமே.

வசனம்—அடே யோசேப், நில்! நில்! உன்னை அச்சறுக்கையாய் வைத்துக் காவல்செய்வோம் வாடா,

## யோசேப்பு தரு.

(என்னசெய்வேனடா என்றமெட்டு)

தேவேயெனக்கிந்தத் தீமைவந்திடலாமோ
திருவுள மிதுதானே

ஆபிரகாமீசாக்கை ஆக்குபலியாற்காத்தாய்
அடியேனைக் கரைசேர்த்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணமார்தனைப்பார்க்க அப்பர்சமுகம்விட்டேன்
அவர்கொடுமைக் குட்பட்டேன்
போத்திப்பார்கண்களிற் பொருந்துந்தயவுபெற்றேன்
பூவையாற் சதியுற்றேன்

## காதலி தரு.

(போம்போம்இதுவுங்கனமா என்றமெட்டு)

பல்லவி

பார் பார் அவனைக்கெடுப்பேன்—அவன்
பதைக்கச் சிறைக்குள்விடுப்பேன்—பார்

அநுபல்லவி

நேராயென்சொல்மறுத்தான் நேசந்தனைவெறுத்தான்
பாராமலோடிவிட்டான் பாரிற்றன்னிலைகெட்டான் ... பார்

சரணம்

பின்னிதம்பேசிடாமல் என்னைவிரும்பிவாழப்
பிரியமுறுதமிகுமேபயன்—தன்
பேச்சுமழுகுங்கர விசுங்கதியென்றெண்ணிப்
பேடிபோலோடின தீயன்
தன்னுத்தியோகம்நிலை என்னநினைத்தான்பார்ப்பேன்
சணத்திற்றலைவன்முன்போய் நினைத்தகருமந்தீர்ப்பேன் ...பார்

வசனம்—நல்லதிருக்கட்டும், தலைவன்வருகிறார் வந்தவுடன் நான் இதற்கொரு யோசனை எடுக்கிறேன், அவனைத் தொடுக்கிறேன், சிறைக்குள் விடுக்கிறேன். தலைவனைக் காண்போம்.

## போத்திப்பார் விருத்தம்.

சுந்தரவடிவமுள்ள தோகையேஆகஞ்சேர்ந்து
சந்திரமுகமும்வாடித் தனித்திங்கேவந்ததென்ன
வந்ததீவினையுமுண்டோ வருத்தங்களேதுமுண்டோ
சிந்தைகூர்ந்தறிவதற்குத் திடமுடன்தெரிவிப்பாயே.

வசனம்—வாடியமுகத்துடனே அவசரகதியித்தமாய்வந்த காரியத்தைத் தெரிவிக்கவேண்டும் பிராணநாயகி.

## காதலி தரு.

(சாமிநீவருவாயிப்போ என்றமெட்டு)

பல்லவி

ஐயோ எனதுதுரையே—மா
அவமானம் வந்ததையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

மெய்யாயுமதுமிட்டுள் வினைமிருகத்தைதவிட்டீர்
பொய்யோசால்வையைப்பாரும் பொல்லாமுனையைநட்டீர் ...ஐ

இச்சித்தவ்வெபிரேயன் என்னைருகில்நாடினான்
சச்சரவுசெய்திட்டேன் சால்வையைவிட்டோடினான் ... ஐ

அன்னியவடிமையை அதிகாரியாக்கலாமோ
சின்னமனுடருக்குந் திறலறிந்திடப்போமோ ... ஐ

எருதுகொழுத்தபோது இடையனைமதியாது
கருதாமீனர்க்கறிவு கருத்தினிலுதியாது ... ஐ

வசனம்—இதென்ன அநியாயம், இந்த எபிரேயனுக்கு இத்தச்செருக்கா? உமது இடத்தைக்கண்டுதானே இப்படித்துணிந்தான், நான் போகிறேன், உமது சித்தப்படியேசெய்யுந் தலைவா.

## போத்திப்பார் தரு.

(ஆருநீயுன்பேரைக்கூறுவையே என்றமெட்டு)

பல்லவி

ஏது ஈனன் மாதை மோகித்தான்—ஓகோ
இன்னுமென்றன் றிறல்தன்னை
அன்னியன் அறிந்திடானோ—ஏது.

அநுபல்லவி

காதகனெனவறிந்தால் மோதுமென்றன்மனைக்குளோர்
போதும்புகவிட்டிடேன்றப் பாதுசிறையிடுவேன் ... ஏது

சரணம்

சிறியருணத்தையவன் மறைவினில்வைத்திருந்து
தெரிவைதனையிச்சித்திட்டானோ—ஐயோ
செருக்காலடிமையென்ற வருக்கம்மறந்துசெல்வப்
பெருக்காலிக்கர்வங்கொட்டானோ
செத்தைபுறும்பல்லிதனை மெத்தையில்வளர்த்தினதென்
புத்தியினம் ஆகாஅவன் சத்துவமடக்கிடுவேன் ... ஏது

போத்திப்பார் விருத்தம்.

நிறைசெல்வம்வந்தபோது நெஞ்சினில்நினையார்தெய்வம்
அறைவதுமறியமாட்டார் அஞ்சிடாரெவர்க்குமீனர்
இறைவனைமதியாவந்த வெபிரேயன்றனைப்பிடித்து
மறியல்வீட்டினிலடைத்து வைத்திடும்மதமும்போமே.

வசனம்—அந்த எபிரேய அன்னியன் தன்னைத் தானறியாமற் சென்னதக்கொண்டானே, எருதுகொழுத்தா லிடையனை மதியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்கொழுப்புப் பிடரியால் வடியவேணும், அவனை மறியல்வீட்டித் கொண்டுபோய் வைப்பீர் சேவகரே.

சேவகர் வசனம்—அப்படியே செய்கிறோம் மகராஜ்.

## யோசேப்பு தரு.

[பத்தினிகண்ணகையே என்றமெட்டு]

போறேன்சிறைச்சாலை இது பூங்கொடியாள்வேலை
ஆறேன்மனக்கடு மாறேன்காருமாறு
கூறேன்ஜெகதீசா விதி மீறேன்சருவேசா

ஆறுதெனதுஉளம் தோகை ஆகாமியத்தார்ச்சினம்
மீறிப்பொய்வார்த்தையைக் கூறிச்சிறைக்கேக
விட்டாளோவிஸ்பரா உனைத்தொழு திட்டேன்சர்வேஸ்பரா

வசனம்—அல்பாவும் ஓமேகாவுமாகிய ஆண்டவனே, எனக்கு நல்வழி காட்டியருள்வாய் சுவாமீ,

## சேவகர் தரு.

(உக்காவிற்ன என்றமெட்டு)

பசுத்தோல்போர்த்தவனுநீயே பாசாங்கினைக்காட்டினாயே
புசித்திட்டவீட்டினிற்றீயே போட்டாயோஅடடாநாயே

போத்திப்பாருடைவீட்டினுக்குபொருந்திவந்தாய்கேட்டினுக்கு
ஏற்றிராதுன்றன்பாட்டினுக்கு இழுக்குவைத்தாயேநாட்டினுக்கு

சற்றேனுநீசலிக்கவில்லைச் சாற்றுகின்றனங்கள்சொல்லை
அற்பமென்றெண்ணுகிறாய்தொல்லை அடைவாய்தப்பிடுதல்வல்லை

எருதுகொழுத்திட்டபோது இடையன்றனையுமெண்ணாது
வருகுவாய்தடைபண்ணாது மனதினில்மகிழ்ச்சியேது

சேவகர்வசனம்—உடம்புளைக்தகழுதை உப்புக்களஞ்சென்றதுபோலப் பிரதானிவீட்டுக் கருமம் பார்த்தாப்போலே கெறுவம் வந்துவிட்டதா? வாரும்பின்னாய் உன்னை மறியலில்வைப்போம்.

யோசேப்பு வசனம்—நன்மைசெய்யக் கன்மம்விளைதல் இயல்புதான். தலைவனுத்தரவுக்கமைகிறேன் வீரரே,

சேவகர் வசனம்—மெத்த யோக்கியனாய்ப் பேசாதே, வாய்பொத்து.

மறுவசனம்—சட்டெனவா, இதற்குள் புகுந்துகொள், பூட்டடா கபாடத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோசேப்பு விருத்தம். (தேவாரமும்மாம்)

மெய்மையேமூன்றும் பிறையென்பாரதுவே
வென்றிடும் வரவரா வளரும்
பொய்மையேபூர்ண சந்திரனதுவே
பொன்றியே வர்வரத்தேயும்
கைமெய்யாய்நடந்த கருமமென்றாலும்
கருதிய விசாரணையில்லையோ
துய்யனேமன்னர் அஞ்சாதுகாத்தாய்
சுகமின்னுமுறவருள்புரியே.

வசனம்—மெய் மூன்றாம்பிறையாய் வளரும். பொய் பூரணசந்திரன்போற் றேயும். எனது உண்மை உண்மையாய் முடியும். நடந்த கருமமானாலும் விசாரணையின்றி மறியவிடல் நீதிபரிபாலனமுறையா? கடவுளே! அநியாயமாய்ப் பாண்கிணற்றில் சாகாமல் என்னைக் கைதூக்கின நீர் இப்போதுங் கைதூக்கிக் காப்பீரென்று காத்திருக்கிறேன் சுவாமீ!

## பார்வோன் விருத்தம்.

இன்றெனதுணவுதன்னி லினர்கள்நஞ்சையிட்டுக்
கொன்றிடநினைத்தார்மந்த்ரீ குணமுற்றுப்பிழைத்துவிட்டேன்
தின்றிடுமுணவின்சேட்டன் திருந்துபானச்சிரேட்டன்
என்றவர்களையென்முன்ன ரிச்சணமழைத்திடாயே.

வசனம்—இராத்திரி நானுண்ட உணவில் நஞ்சிட்டிருந்ததாய் அனுமானிக்கிறேன். ஆதலால் பானபாத்திரத் தலைவனையும் சயம்பாகிகள் தலைவனையும் நமது சமுகத்தில் அழைப்பிப்பாய் பிரதானி.

மந்திரிவசனம்—அப்படியே அழைப்பிக்கிறேன் ராசனே.

மந்திரி மறுவசனம்—சயம்பாகித் தலைவனையும் மதுபானத் தலைவனையும் அரசன்சமுகத்துக்கு அழைத்துவருவாய் காவலா.

காவலன்வசனம்—அப்படியே செய்கிறேன் அமைச்சே.

## சயம்பாகி தலைவன் வருதல்.

(அங்குனானிருந்தவனை என்றமெட்டு)

கேக்குடனேவிட்டுவிட்டாய் கிரமந்தவறுநகெட்டாய்
சீக்கிரத்திற்செய்துவைப்பேன் திருந்தியாக்குதற்குத்தப்பேன்
விருப்பாய்மூர்த்திதேன்வாறுமைப் பப்புடனைநற்கோதுமை
அரைத்துச்சீனிசர்சேர்த்திடுவேன் பெருத்திடப்பஞ்சுடுவேன்
சிரமேலம்கொத்தமல்லி சேர்த்துச்செய்வேன்விவிதமெல்லி
ஆரெஞ்சுப்பல்பிளெங்கேக்கும் அரிதாய்ச்செய்திடுவேனுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலிற்பழவிரசம்விட்டுப் பருத்தகோழிமுட்டையிட்டு
ஏலம்சாதிக்காய்நற்சீனி யிட்டப்பஞ்செய்வேன்நிதானி

கொடிமுந்திரிபிளம்ஸ்பழம் கூட்டிவெண்ணெய்சேர்த்திட்டுளம்
படினமாகக்கேக்குக்செய்வேன் பார்வோன்றனக்கீந்துமுய்வேன்

இறைச்சியுடன்கோழிமுட்டை ஏலம்இஞ்சிகறுவாப்பட்டை
முறைப்படிசேர்த்திட்டஅப்பம் முதலாளிமார்க்குவிருப்பம்

வசனம்—ஆகா! பஞ்சக்கேக், பிளேம்கேக், றீஸ்கேக், பிளேன் கேக், பிரான்சபால், மக்ரம், எத்தனைவிதமான ஆரென்ஜபல்ஸ், ஜின்ஜர்பிரட், ஆட்டுஜெல்லி, கோழிச்ஜெல்லி முதலிய உணவுகள் எனக்குச் செய்யத்தெரியும், நம் பலகாரவகையைப் பார்வோனும் மெய்ச்சுகின்றாரே! அவருயிரும் என்கையிலென்றால் சந்தேகமா?

## பானபாத்திரத் தலைவன் வருதல்.

[கண்களுக்கேதடுகுதேசாமி என்றமெட்டு]

பல்லவி

மதுபானத்தலைவன்நானே—கிட்டி
வருவாரைப் பணந் தருவாரை நானுங்
கருவறுத்திடுவேவேனே

சரணங்கள்

புதிதாய்ப்பழகுவோரைப் புறஞ்செல்லாதழைப்பேன்
போந்தவரையடித்துப் புத்தியாய்ப்பிழைப்பேன்
போதையவர்க்குவிளைப்பேன் ... மது

பார்வோன்மதுபானப் பாத்ரசிரேட்டனுநான்
பார்த்திபர்விருதுறு பவர்கொப்பாட்டனுநான்
பரிசுபெற்றவன்பிட்டன்நான் ... மது

நல்லசாராயமென நடபடிகாட்டி
நனுகாதுநோயென நான்பொய்யைத்தீட்டி
நாசஞ்செய்வேனுனைசயூட்டி ... மது

கொஞ்சம்ருசிபாரென்று கூறியேகொடுப்பேன்
குடித்தாலடித்தடுத்துக் கொடுத்துநான்மடிப்பேன்
கூடினவர்களைக்கெடுப்பேன் ... மது

அரிசிவறுத்தபின்னை யதனுடன்சேர்ப்பேன்
அனைவர்களையும்வெறி யாக்கிடப்பார்ப்பேன்
ஆயாசந்தனைத்தீர்ப்பேன் ... மது

8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலன் விருத்தம்.

கடிதினிலப்பாங் கவனமாய்ச்செய்து
படிணமாயிருந்து பணைமீட்டுவோனே
முடியணியரசன் முன்னதாய்க்கூட்டி
கொடியில்வாவென்றார் நோக்கமாய்வருவாய்.

வசனம்—உன்னை அரசன் சீக்கிரமாய் வரும்படி அழைக்கிறார் சயம்பாகித்தலைவனே.

சயம்பாகித்தலைவன் விருத்தம்.

ஏதெனை அழைத்தார்ராசன் என்னநான்குறைசெய்திட்டேன்
வேதனைசெய்குவாரோ மிகமனம்பதறுதையோ
சூதுஞ்செய்யவில்லைச் சுத்தமாய்நடந்துவந்தேன்
நாதனேயென்னைக்காப்பாய் நானொன்றுமறிகிலேனே.

வசனம்—ஏது என்னை இராசன் சட்டென அழைக்கிறமாயந் தெரியவில்லையே! நானொருதப்பிதமுஞ் செய்யவில்லையே காவலரே!

காவலன் வசனம் ஓய்! உன்னையும் எங்கள் ராசன் அழைத்தார் வருவாய் பானபாத்திரத்தலைவனே,

பானபாத். வசனம்— அப்படியே வருகிறேன் காவலரே.

விருத்தம்.

சயம்பாகித்தலைவன்

இறைவனேபோற்றிபோற்றி எங்களைப்புரப்பாய்போற்றி
குறைவிலாதரசுசெய்யுங் கொற்றவாபோற்றிபோற்றி

பானபாத்திரத்தலைவன்

நிறைகொலுவின்முன்பாக நீரெமையழைத்ததேதோ
நறைகொளுமலர்ப்பூம்பாத நராதிபாநவிலுவாயே.

சயம்பாகி. வசனம்—கோடிநமஸ்காரம் கும்பிடுபோட்டேன் பார்த்திபனே.

மதுபாண. வசனம்—எங்களைத் தமது திருச்சமுகத்துக்கு அழைத்த கருமத்தைத் தெரிவிக்கவேண்டும் ஆண்டவனே,

பார்வோன் விருத்தம்.

வண்டார்களோநானின்று வழமையாயுணவுதன்னை
உண்டபின்வருத்தமுற்று உணவில்நஞ்சென்றுநன்றாய்க்
கண்டனனதனாலும்மைக் கடுஞ்சிறையதனில்வைத்துக்
கொண்டுண்மைதனையறிந்து கொடியனைக்கொல்லுவேனே.

வசனம்- இருவரும் பத்திரம்பார்த்துக்கொள்ளுங்கள். இராத்திரிக்கண் போசனஞ்செய்த உணவில் நஞ்சுகலந்திருந்தது அதன்நிமித்தம் உங்களிலே சந்தேகிக்கிறேன். நீர்க்கவிசாரணை செய்யும்வரையில் சிறைச்சாலைக்குப் போங்கள். குற்றஞ்செய்தவனைக் கண்டுபிடித்தால் அவனைக் கொல்வது நிச்சயம்! நிச்சயம்!! அறியுங்கள் நீசரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தம்

சுயம்பாகித்தலைவன்

கன்னத்திற்கரேவார்த்தை கடவுளேகேட்கலாமோ
தின்னத்தந்தெம்மைக்காத்த செம்மலிற்சினங்கொள்வேனே

பானபாத்திரத்தலைவன்

வன்மத்தையுடையேனானால் மனந்திடுக்கிடுவேனெல்லாம்
நன்மைக்கேதேவன்செய்வார் நமக்கொன்றும்வரவிடாரே.

சுயம்பாகிதலைவன் வசனம்- கடவுளே! நான் உண்டவீட்டுக்கு இரண்டகம்பண்ணுவேனோ? இதென்ன அநியாயமானபழி என்மீது வந்திருக்கிறது.

பானபாத்திரத்தலைவன் வசனம்—குற்றமுள்ள நெஞ்சல்லவா குறுகுறு என்னும். கடவுளே நீர் செய்வதெல்லாம் நன்மைக்கேயென விசுவசிக்கிறேன் சுவாமி!

இராசன் வசனம்—இவர்களைப் பிடித்துப்போய் அறுத்தையான சிறையில் அடைத்துவையுங்கள் வீரரே.

காவலர் வசனம்—அப்படியே செய்கிறோம் மகாராஜ.

## இருவருந் தரு.

(பாலனிறந்தவிடம் என்றமெட்டு)

சுயம். என்னசதிவந்தது ஈஸ்பரனே—எனக்
கேதுசதிவந்தது ஈஸ்பரனே
மன்னன்மறிப்பிட்டானே ஈஸ்பரனே—அவன்
மனதிற்சினங்கொண்டானே ஈஸ்பரனே

பானபா. தின்றநஞ்சேகொன்றிடும் எம்பரனே—ஏதும்
செய்தாற்கேடுன்றிடும் எம்பரனே
ஒன்றுமறிந்திடேனே எம்பரனே—சற்றும்
ஊனஞ்செறிந்திடேனே எம்பரனே

சுயம். வீரர்வெருட்டுகிறார் ஈஸ்பரனே—அவர்
விழியைப்புரட்டுகிறார் ஈஸ்பரனே
சீருஞ்சிறப்புமற்றேன் ஈஸ்பரனே—இந்தத்
தீயசிறையிலுற்றேன் ஈஸ்பரனே

பானபா. உண்மைநிறைவேறட்டும் எம்பரனே—எனது
உள்ளத்துயராறட்டும் எம்பரனே
வன்மைத்திடந்தருவாய் எம்பரனே—எனக்கு
மகிமைதரவருவாய் எம்பரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—ஆதியும் அந்தமுமில்லா அனாதீஸ்பரா அடியேனைக் காத்திரட்சியுஞ் சுவாமீ!

காவலர்வசனம்—இவர்கள் இருவரையும் மறியலில் அடைத்து வைக்கும்படி இராசா கட்டளையிட்டார் தலைவனே.

சிறை. தலைவன் வசனம்—அப்படியேசெய்கின்றேன். இங்கேவாருங்கள்.

சிறைச்சாலைத்தலைவன் யோசேப்புவுக்குச்சொல்
விருத்தம்.

உன்றனைப்பார்த்தாலேதும் ஊறுசெய்தவனாயில்லை
நன்றாகநடக்கின்றாய்நீ நல்லெண்ணமுன்னில்வைத்தேன்
என்றும்போற்சிறையிருந்து இட்டம்போல்நீநடந்து
இன்றுதொட்டிச்சிறைக்குள் ளிருப்போரைநடத்திடாயே.

வசனம்—நீ நற்குணசாலீபோற் காணப்படுகிறாய். இன்றுதொட்டிச்சிறைச்சாலையிலுள்ளவர்களை நடத்திவருவாய்; இப்போது கொண்டுவரப்பட்ட இருவரையும் நீயே விசாரித்துவா வாலிபனே.

யோசேப்பு வசனம்—அப்படியே மகாபாக்கியம் தலைவனே.

## சயம்பாகிதலைவன் மனைவி வருதல்.

மனைவி விருத்தம்.

காலையிலெழுந்துசென்ற கணவனையின்னுங்காணேன்
மாலையாய்விட்டதிங்கே வாராதனிதமேதோ
வேலையில்நிற்கிறாரோ வினையங்களேதுமுண்டோ
ஆலைவாய்க்கரும்புபோல ஆகமுங்கலங்கின்றேனே.

வசனம்—அதிகாலையிலெழுந்துசென்றதலைவன் இன்னும் வரவில்லையே சென்றுதேடுவேன்.

## மனைவி தரு.

(போறேனிதோ என்றமெட்டு)

கண்டீர்களோ கண்டீர்களோ காதலனைக் கண்டீர்களோ
மண்டலத்து மானிடரே மணவாளனைக் கண்டீர்களோ

புருவைமேய்க்கும் பாலியரே பூமான்றனைக் கண்டீர்களோ
எருதுசாய்க்கு முழவர்களே என்நாதனைக் கண்டீர்களோ

வலைவளைக்கும் மானிடரே மகிபதியைக் கண்டீர்களோ
சிலைதொடுக்கும் வேடர்களே செம்மல்தனைக் கண்டீர்களோ
சீலைசெய்யும் சேணியரே சீராளனைக் கண்டீர்களோ
சாலைகட்டும் தபதிகளே தலைவனைநீர் கண்டீர்களோ

முத்துப்போன்ற பல்லழகன் முதன்மைபெற்ற சொல்லழகன்
சித்திர முகவழகன் சிறீபதியைக் கண்டீர்களோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தலைவனைக்கண்டு தலைவிசொல் விருத்தம்.

ஐயையோதலைவாநீசெய் யநீதியதேதுமுண்டோ
மெய்யெல்லாம்பதறிமிக்க விதனமும்பெருகுதையா
செய்ததேதரசனுக்குச் சினமும்மேல்வைத்ததென்ன
துய்யனேஅடியாளுக்குத் துரிதமாய்ச்சொல்லுவீரே.

வசனம்—நீர் சிறையில் அடைபடுவதற்கு இராசனுக்குச் செய்த குற்றமென்ன? அதைத் தெரிவிக்கவேண்டும் பிராணநாயகா!

### சுயம்பாகி விருத்தம்.

அரசனினசனந்தன்னில் ஆரோநஞ்சிட்டதாலே
சிரசுபத்திரம்பாரென்று சிறையினிலடைத்துவைத்தார்
பிரசமாமொழிமின்னுளே பேசியிங்காவதென்ன
பரமனைப்பணிந்துவீட்டிற் பரிந்துசென்றிருந்திடாயே.

வசனம்—இராசனுக்கு உணவில் ஆரோ நஞ்சிட்டார்களாம். அதற்கு நீங்கள்தான் உத்தரவாதிகளென்று எங்களைப் பிடித்தடைத்திருக்கிறார். வேந்தன்சீறி லாந்துணையில்லை. ஆதலால் நீ வீட்டுக்குச்சென்று தெய்வார்ச்சனை செய்துவருவாய் பிராணநாயகி.

### சுயம்பாகியும் மனைவியுந் தரு.

(துரையேயுன்னைப் பறையனாக என்றமெட்டு)

மனை. நாயகாநீருந் தீயசிறையிலுற் றீரோ நலிவுற்று
துயமுகமும் மலங்கிடலாச்சுதே
தோகைமனது கலங்கிடலாச்சுதே—நாயகா.

சுயம். நாயகியீது நம்முடையூழ்வினை யாமே—நம்மாலென்றும்
போயிருந்துன்னுடை பூஸ்திதிகளைப்பார்
பூண்டபொறிவிட்டுப் போய்விடுமோநீதேர்—நாயகி.

மனை. உம்மைநான்பிரிந் தென்னவிதமிருப்பேனோ—ஓ!ப்ராணே
செம்மையுடனேயித் தேசத்திலுய்வேனோ (சா
சிந்தைவருந்திச் செகத்தினில் வைவேனோ—உம்மை.

சுயம். இந்தத்தீமையை எந்தேவர்நீக்கமாட்டாரோ·என்னன்ன
சிந்தையதாய்வேள்வி செய்தவரைப்போற்று (மே
தீர்த்தமாடிநோன்பு செய்தெனைக்காப்பாற்று—இந்த.

சுயம்பாகி. வசனம்—இனி என்னசெய்யலாம், தேவார்ச்சனைசெய்வதைவிட வேறுவழியில்லை. நீ மனையிற்போயிருந்து அவ்விதமே செய்துவருவாய் பிராணநாயகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைவிருத்தம்.

ஞானமுள்ள யோசேப்புச் சிறையிருக்கும் வீடதிலே
நராதிபன்றன்
பானபாத் திரத்தலைவ னுடன்சுயம்பாகி யின்தலைவன்
மேற்பாரித்த
ஈனமுறு குறைதனக்கா யிருவரையுஞ் சிறையிலிட்டங்
கிருக்கவெவ்வே
றானகன வுகளையிரு பேர்களுங்கண் டேதிதெனை
வங்கலாய்த்தார்.

வசனம்—இந்தப்பிரகாரம் யோசேப்புச் சிறைச்சாலை விசாரணைக்காரனு யக்கிருக்கும்போது அவனுடன் சிறையிலடைபட்டிருந்த பானபாத்திரத்தலைவனும் சுயம்பாகிகளின் தலைவனும் வெவ்வேறான இரண்டு கனவுகளைக்கண்டு பொருள்தெரியாமல் விசாரமுற்றிருந்தார்கள். அப்போது யோசேப்பு அவர்களையணுகி விசாரிக்கிறவிதங்காண்க.

## யோசேப்பும் சுயம்பாகித்தலைவனும் பானபாத்திரத்தலைவனுந் தரு.

(சிங்கத்தினுல் கான்வருந்தி என்றமெட்டு)

யோசே. இன்றுமுகம் வாடிநீங்கள் இருக்கின்றதேது
என்னகுறை யென்றனக்குச் சொல்லுமிப்போது

வசனம்—இன்று நீங்கள் முகவாட்டத்துடனிருப்பதேது சொல்வீர்.

சுயம். துன்றுமிரு சொப்பனத்தை இன்றிரவுகண்டோம்
தொடர்ந்தபொருளறிந்திடாமற்சோகமேகொண்டோம்

வசனம்—நாங்கள் இரண்டு கனவுகளைக்கண்டு அர்த்தந்தெரியாமல் மலைக்கிறோம் அன்பரே.

யோசே. சொற்பனத்தை விளக்குபவர் தற்பரனன்றோ
சொல்லுமதை நானறியத் துரிதமாயின்றே

சொற்பனத்தின் தாற்பரியத்தைப் பராபரனே தெரிவிக்கவேண்டும். அதேதென்றுசொல்லுங்கள் பார்க்கலாம்.

பானபா. தளிர்த்துப்பூத்துமுக்கவ்வாய்ச் செழித்ததிராட்சைப்
பழத்தைப்பிளிந்து பார்வோன்கையில் அளித்ததே
காட்சி

வசனம்—தளிர்கொண்டு முக்கவராய்ப்பிரிந்த திராட்சக்கொடியிருந்தன. அவைகள் அரும்புகளாய்ப் பூக்களாய்ப் பழங்களாய்வரவும் அப்பழங்களைப்பறித்து பாத்திரத்துட்பிளிந்து பார்வோன் கையிற் கொடுக்கவுந் தரிசனங்கண்டேன். இதன்பொருளைதையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசே. மூன்றுநாளிற்பார்வோனுன்னைமுன்போலவைப்பான்
முன்போலநீ பாத்திரத்தை முயன்றவர்க்குய்ப்பாய்

வசனம்—அதன் கிளைகள் மூன்று தினங்களாம், அம்மூன்று தினங்களின்பின் பார்வோன் உனது பணிவிடையைநினைத்து உன்னை முந்திய உத்தியோகத்திலவைப்பார். நீயும் அவருக்குப் பிரமாணிக்கமுள்ளவனாய்நடந்து அவருக்குப் பானபாத்திரத்தைக் கொடுப்பாய். இதுவே அதன்பொருள் தலைவனே.

பானபா. ஆண்டவனே ஆ! இதுமா ஆசீர்வாதமே
அப்படிநடப்பதுதான் அழியாநீதமே

வசனம்—அப்படியா அதுவேநீதி மிகுசந்தோஷம்ஐயா.

யோசே. வாழ்வடையும் போதிலென்றன் சூழ்வைக்கவனி
மன்னர்க்கென்னைப் பற்றிச்சொல்லு மாயமிவ்வவனி

வசனம்—உனக்கு நல்லகாலம் வந்தபின் என்னையுங்கவனி. நான் எபிரேயநாட்டிலிருந்து வஞ்சனையாய்க்கொண்டுவரப்பட்டு இச்சிறையிலடைக்கப்பட்டிருக்கிறேன். நீ முன்போல இராசமாளிகையில் பணிவிடையாயிருக்கும்போது என்னைப்பற்றியும் அரசர்க்கு அறிவிக்க மறந்துவிடாதே தலைவனே.

சயம். பலகாரஞ்சேர் கூடைமூன்றென் தலைமீதிருக்கப்
பட்சிகள்வந் துண்ணக்கண்டேன் அச்சமேபெருக்க

வசனம்—எனது கனவையும் சொல்லுகிறேன்கேளும். எம் சிரசின்மீது மூன்று கூடைகளிருந்தன. மேலாயிருந்த கூடையில் பலகாரங்களிருந்தன. அவைகளைப் பட்சிகள்வந்து பட்சித்துவிட்டன. இதன் தாற்பரியமென்ன தலைவனே

யோசே. வெட்டிக்கொல்வான் மூன்றுநாளில் வேந்தனுனையின்னும்
துட்டநாய்நரிகழுகாதியன தொடர்ந்துணவுண்ணும்

வசனம்—மூன்று கூடைகளும் பின்வரவிருக்கும் மூன்றுதினங்களாம். அதன்பின் பார்வோன் உன்னைச் சிரச்சேதஞ்செய்விப்பார். உனது மாமிசத்தைப் பட்சிகள் புசிக்கும் சயம்பகிரகன் தலைவனே.

சயம்பாகி வசனம்—இந்த உபகாரவார்த்தையை எனக்குச்சொன்னதேபோதும். இந்தவயசில் நீயுமெத்தனைபொருள்சொல்லிப் பலித்துப்போயிற்று. உன்னலுவலை நீபோய்ப்பார் களைத்துப்போனாய் தம்பி.

பார்வோன் விருத்தம்.

நிலைபெறமுன்னெனக்கு நேசனாம்பானபாத்ரத்
தலைவன்மேற்குற்றங்காணாச் சடுதியிற்சிறையில்வைத்தேன்
கலையுணரமைச்சேசயந்தக் காவற்கூடத்திருந்து
மலைவுறுதவனையிங்கே வரும்படிசெய்குவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—நான் சந்தேகத்தினிமித்தம் பானபாத்திரத்தலைவனைச் சிறையில்வைத்தேன். அவன் மாசற்றவனாய்க்காண்கிருன். அவனை நமது சமூகத்துக்கழைப்பிப்பாய் பிரதானி.

மந்திரி வசனம்—அப்படியே அழைப்பிக்கிறேன் பார்த்திபனே.

பானபாத்திரத்தலைவன் விருத்தம்.

படியினைப்புரந்து பரிந்தரசியற்றும்
கொடியமாணிக்கம் நீலம்வச்சிரஞ்சேர்
முடியணியரசே முன்னிலைதன்னில்
அடியனையழைத்த தறைந்திடுவீரே.

வசனம்—நவரத்தினங்களழுத்திய மகுடந்தாங்கும் இராசாதிராசனே என்னை அழைத்தகருமத்தைத் தெரிவிக்கவேண்டும் ஆண்டவனே,

பார்வோன் விருத்தம்.

உன்றன்மேற்குற்றமில்லை உன்னைநான்சிறையில்வைத்தேன்
என்றதைமனத்தெண்ணுமல் இராசநேசங்கொள்வாய்நீ
முன்றரும்வேலைதன்னை முறையுடனீந்தேன்நீயும்
குன்றுமலதைநடத்திக் குணமொடுவாழுவாயே

வசனம்—நான் விசாரணைசெய்தவரையில் உன்னைக் குற்றமற்றவனாகக் கண்டேன். ஆதலால் நீ முன்போல நமதுவேலையிலமருவாய் பானபாத்திரத் தலைவனே.

பானபாத்திரத்தலைவன் வசனம்—மகாபாக்கியம் ஆண்டவனே.

பார்வோன் விருத்தம்

நயம்பேசிவினையஞ்செய்த நாசமோசஞ்சேர்வஞ்சச்
சுயம்பாகித்தலைவனை துட்டனைக்கட்டிச்சென்று
வயஞ்சேரும்வீரரேநீர் வாளினாற்சிரசைவெட்டிப்
பயங்கொளமரத்திற்றூக்கிப் பற்றிவந்தறிவிப்பீரே.

வசனம்—வாருங்கள் மழுவர்களே, நமக்கு உணவில் நஞ்சிட்ட படுபாதகனான சுயம்பாகித்தலைவனை மறியல்வீட்டிலிருந்து பிடித்துக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோய் ஈவிரக்கமின்றி அவன்சிரசைத் துண்டித்துக் கொன்றுவிடும் வீரரே.

மழுவர் வசனம்—அப்படியே செய்கிறோம் பார்த்திபனே.

மழுவர் மறுவசனம்—அரசனுக்கு நஞ்சிட்ட படுபாதகா உன்சிரசைத் துண்டிக்கும்படி இராச கட்டளையாயிற்று. சட்டெனஎழுந்து வருவாய்.

சுயம்பாகி வசனம்—ஐயோ என்குலை பதறுதே! நான் எங்கேனும் ஓடித்தப்ப விட்டுவிடுங்கள் நல்லஉரங்கந்தருகிறேன் அண்ணமாரே!

மழுவர்வசனம்—நல்ல உரக்கமா தரப்போகிறாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழுவரும் சுயம்பாகிதலைவனுந் தரு.

[உக்காவிற்ன என்றமெட்டு]

மழுவர் பார்வோனுக்குநஞ்சிட்டாயோடா
பதைக்கச்சிரசையரியவாடா
பேர்போனவஞ்சகநிர்மூடா
பெருங்கொலைக்களம் நெருங்கிப்போடா

(என்னடாஎன்னைத்தோட்டி என்றமெட்டு)

சுயம்பா. ஐயோஅண்ணமாரே அடிக்கவேண்டாம் என்னை
ஆத்திரமாகவே இடிக்கவேண்டாம்
கையைச்சினத்துநீர் பிடிக்கவேண்டாம் அண்ணை
கடிதாயதன்னைநீர் ஒடிக்கவேண்டாம்

மழுவர் இன்றமண்ணுக்குத் தக்கசோகை
சேர்ந்திடும்வெற்றி விருதாய்வாகை
தான்றுமலர்மார் பணியுமோகைத்
துரைக்குச்செப்சதிக் கிதுநல்லீகை

சுயம்பா. கொன்றிடப்பிடித்தென்னை இடிக்கிறீரே ஐயோ
கூர்மையானபல்லைக் கடிக்கிறீரே
நின்றுநின்றுநீங்கள் அடிக்கிறீரே ஐயோ
நினைத்தகருமந்தன்னை முடிக்கிறீரே

### மழுவர் தரு.

(இங்கிலீஷ் நோட்)

நடந்துவாடாபைய நாங்களுன்சிரங்கொய்ய
நரபதிக்குநஞ்சிட்டாய் நாசகாலமேதொட்டாய்
நெருப்புடன்விளையாட நினைத்தாய்குருதியோட
சரிப்போமுன்றலைசாடச் சார்பரிநாய்கொண்டாட

எருதுகொழுத்தபோது இடையனைமதியாது
கருதினுய்மிகுதீது கத்தினும்பயனேது

### சுயப்பாகி தரு.

(என்னகாலம் என்றமெட்டு)

பல்லவி

என்னசெய்வேன் ஏதுசெய்வேன்
எவ்விதமா யினியுய்வேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபல்லவி

மின்னுள்மிக வேங்குவாளே விதனமதி லோங்குவாளே...என்

சரணங்கள்

உதவிபுரி வாரிலையோ உலகசெல்வ மோர்கிலையோ
அதிவிதனமாகுதையோ அருஞ்சிரசைக்கொய்தல்மெய்யோ...எ

மதுவருந்திச் சதிபுரிந்தேன் மதியுணர்ந்து நான்பரிந்தேன்
விதிவசமோ நானிறக்க மெல்லியல்தனைமறக்க ... என்

கால்கள் தடுமாறுகுதே கனதுயரம் மீறுகுதே
சேல்விழியாள் தேடுவாளே சிந்தைநொந்து வாடுவாளே...என்

வசனம்—சாணினிப் பிழைப்பேனே! என்தேவி என்னசெய்வா
ளோ தெய்வமே!

மழுவர் விருத்தம்

கட்டடாகைபைப்பின்னே காவலன்றனக்குநஞ்சு
இட்டடாகொல்லப்பார்த்தாய் இரக்கிடாதெழில்சேர்வாள்கை
தொட்டடாவிவன்றன்சென்னி துண்டாகிநிலத்தில்வீழ
வெட்டடாமீண்டுசென்று வேந்தனுக்கறிவிப்போமே.

வசனம் – இவனைப் பின்கட்டாய்க் கட்டி ஒரேவீச்சில் கொன்று
விடுவோம் தோழா.

## சுயம்பாகி தரு.

(திவ்வாந்திரி என்றமெட்டு)

ஐயோ இவர் என்னைக்கொல்ல அணுகின்றாரேசாமி
வையமீதுநான் செய்தசெயல் மறைத்திடுமோபூமி

கைகாலெல்லாம் பதறுகுதே கண்களுநக்கலங்கி
கண்ணீராறு போகுகுதே கருத்தழுமலங்கி

இனியாரெனைக் குருவிசெய்வா ரேக்கம்வருகுதையோ
எவதுமனைவி தனைப்பெண்ண இதயமுருகுதையோ

அந்யாயத்தை விளைத்தேன்வினை வறுக்கப்போகிறேனே
அவமாக நானுமின்று ஐயோசாகிறேனே

எவருமறி யார்களென்று இதயத்தெண்ணினேனே
எய்துந்தீமை யைபறியாம லினம்பண்ணினேனே

தவறுபுரிந் தானுமனதிற் றுங்கிடலாகாதோ
சதிக்கொலைபு ரியுந்தீர்வை தவறிப்போகாதோ

ஆவிதனை விட்டிழக்கும் பாவியானேனே
அவகடஞ்செய் திட்டவச னுவியாய்ப்போனேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூவியழுங் குரலொலியைத் தேவனேகேட்காயோ
கொன்றிடப்பார் கிருரித்தக் கொடுமைதனைநீக்காயோ

மழுவர் வசனம் — அவ்வளவில் நிறுத்து, இதோ விழப்போகிறது சிரசு.

மழுவர் விருத்தம்.

வன்மனேவெட்டிக்கொன்றேம் மரத்தினிற்சிரசைத்தூக்கிப்
புன்மைசேர்கழுகுகாக்கை புலிநரிவிருந்ததாகத்
தின்னவேவிட்டுச்சென்று செம்மலுக்கித்தச்செய்தி
தன்னையோதிடுவதற்குச் சட்டெனஎழுந்துவாராய்.

வசனம் — சண்டாளனின் சிரசை வெட்டிக் கொன்றுவிட்டோம் இச்செய்தியை அரசனுக்கு அறிவிப்போம் வருவாய் தோழா:

மழுவர் விருத்தம்.

மின்மணிக்கிரீடஞ்சூடி விளங்குசிங்காசனத்தில்
பொன்னணிபூண்டிருந்த பூமியாள்பூபாலாநாம்
உன்னுடைதயவுதப்பி யுருசுயம்பாகிதன்னைச்
சின்னமாய்வெட்டிக்கொன்று சிரசினைத்தூக்கினேமே.

வசனம் — நவரத்தின மணிமகுடம்பூண்டு அரசுசெய்யும் பூபதியே! உமதுசொற்படியே சுயம்பாகித்தலைவனைச் சிரச்சேதஞ்செய்து அவனது சிரசைக் கம்பத்தில் தூக்கிவிட்டோம் மகாராஜனே.

சுயம்பாகி தேவி விருத்தம்.

சுற்றினேன்கோயிலெல்லாந் தொழுதுபவாசஞ்செய்தேன்
பற்றினேனீசன்பாதம் பரிந்துநேராடிவந்தேன்
சற்றுமோவிரங்கிடாமல் தலைவனைக்கொன்றிட்டாராம்
அற்றதேயென்றன்வாழ்வு அறுதலிபாகினேனே.

தரு.

(சேதியிங்கில்லையே என்றமெட்டு)

பல்லவி

என்னசெய்குவேன் — இனிநான் — ஏதுசெய்குவேன்
எப்படிப்புவியிலுய்குவேன்

சரணங்கள்

உன்னுளநோகுதே ஒளியாத்துயராகுதே — நான்
உருகித்தவிக்கலானேனே ... என்ன

என்றன்பிராணநாதா இனியமொழிசொல்போதா — துயர்
எப்படிச்சகித்திருப்பேனே ... என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படபடக்குதேநெஞ்சம் பாரிலெனக்கார்தஞ்சம்—எனைப்
பார்ப்பவாருமில்லையே ... என்ன

சோகம்பெருகுகுதே தடித்துள்ளுருகுகுதே—இனித்
துணையெனக்கார்தெய்வமே ... என்ன

விருத்தம்.

அரசனைமதித்திடாமல் அநீதிசெய்திட்டானென்று
கரமதைவரிந்துகட்டிக் கடுஞ்சிறைதனிலிருத்திப்
புரமதிலடித்தலைத்துப் பொருந்தியதலைகொய்தாரோ
சிரமதைக்காணப்பெற்றேன் தெய்வமேதியங்கின்றேனே.

வசனம்—ஐயையோ உன் அமிர்தவசனம்பகரும் வெட்டுண்ட முகத்தைமாத்திரம் நான் காணப்பெற்றேனோ தலைவா.

## பார்வோன் கனவுகண்டு சொல்விருத்தம்.

ஒருவருமிணையில்லாத யூகசாமர்த்யத்தோடு
வருவனமுன்னறிந்து வழுத்திடவல்லமந்த்ரி
மருவுமின்றிரவுதன்னில் வாய்ந்துநான் துயிலும்போது
இருகனவுகளைக்கண்டேன் யான்விசாரங்கொண்டேனே.

தரு.

(கண்டுகொண்டேனே என்றமெட்டு)

பல்லவி

கனவுகண்டேனே! மந்த்ரீ
கனவுகண்டேனே

அநுபல்லவி

நினைவற்றநித் திரையில்நானிரு ... கனவு

சரணங்கள்

ஆழியில்நின்றெழுந்த ஏழுபலமிழுந்த
ஆக்கள்பலமுள்ள ஏழு ஆக்களைமெள்ள
அண்டிவிழுங்கக் கண்டுதுயரங் கொண்டேனேமந்த்ரீ ...கனவு

மீண்டுறங்கிடக்கேளு மெலிந்தகதிர்களேழு
மீறுபுஷ்டிக்கதிர் தன்னை விழுங்கிடவேயெதிர்
விள்ளமுடியா துள்ளமலைந்தேதன் விளக்குவாயித்தை ...கனவு

வசனம்—இன்றிரவில் நான் துயின்றபின்னர் இரு விபரீதமான கனுக்களைக் கண்டேன் அவையாவன:—சமுத்திரத்தினின்று எழுந்துவந்த மெலிந்த ஏழுபசுக்கள் கரையினின்று மேய்ந்த கொழுத்த ஏழு பசுக்களைப் பட்சிக்கக்கண்டு திகிலுற்றேன். மறுபடியும் நித்திரைசெய்தபோது ஏழு சாவிக்கதிர்கள் புஷ்டியான ஏழு கதிர்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்சித்துவிட்டன. இதைக்கண்டபின் என்மனம் வியாகுலமடைகின்றது. இதன்பொருள் என்னவென்று யோசித்துச் சொல்வாய் மந்திரி.

மந்திரி விருத்தம்.

ஆண்டவாவிதன்பொரு ளறியவல்லராய்க்
காண்டிடுமறிஞரைக் கடிதழைப்பியும்
கூண்டிடுமிதன்பொருள் குறித்துச்சொல்வரேல்
வேண்டியவெகுமதி விரும்பியீயுமே.

வசனம்—இதன்பொருள் எனது யுத்தியுளடங்கவில்லை. நம்மூரிலிருக்கும் சாஸ்திரிகளையும் மந்திரவாதிகளையும் குறிசொல்பவர்களையும் அழைப்பித்துக் கேட்டால் சொல்லவுங்கூடும். எவர் சரியான அர்த்தந் தெரிவிக்கின்றாரோ அவருக்குத் தக்க சன்மானஞ் செய்வீர் மகாராஜனே.

இராசன் வசனம்—அப்படியே தெரிவிக்கக்கூடியவர்களை அழைப்பிப்பாய் மந்திரி.

## சாஸ்திரிகள் மந்திரவாதிகள் குறிசொல்பவர்கள் வரவு.

[வர்தனம்தர்தோம் என்றமெட்டு]

சாஸ்திரிகள் பல்லவி

சாஸ்திரர்நாமே—சோதி
சாஸ்திரர்நாமே

சரணம்

சாஸ்திரர்நாமே சூக்திரங்களை
ஆஸ்தியாய்க்கொண்டெண்ணியே—சார்ந்து தேர்ந்து
தருபலாபலன் தெரிவிக்கும் ... சாஸ்

வசனம்—சாதகம், திதிநிலை, வாரநிலை, நாண்மீனிலை, யோகநிலை, கரணநிலை, ஓரைநிலை, கிரகநிலை, என்னும் எழ்வகையுறப்புகளினிலையைச் சோதிடநூலால் நன்குணர்ந்து சோதிடசாஸ்திரம், யோகசாஸ்திரம், மந்திரசாஸ்திரம், சகுனசாஸ்திரம், காருடம் நட்டம் முட்டி சிந்தனை என்பவைகளைத்தெரிந்து விபரிக்கவல்ல சோதிடர் நாமறிவீர் சபையோரே.

மந்திரவாதிகள் பல்லவி

பூதிகள்நாமே—மந்திர
வாதிகள்நாமே

சரணம்

சாதிகளுக்குத் தம்பனமாரணம்
சல்லி பெல்லி சூனியம்—சார்ந்து கூர்ந்து
தாறுமாறதாகச்செய் ... பூதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கினித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம் எல்லாம் கற்றுணர்ந்து வப்பமிடும் மந்திரவாதிகள் நாமே சபையோர்களே!

(குறிசொல்பவர் பல்லவி)

வல்லவர்நாமே - குறி
சொல்பவர்நாமே

சரணம்

எல்லையில்லாத சனங்கட்டமை
எய்த்துப்பாடு சாய்த்திடும்—ஏற்ற மாற்றம்
இயம்புந்திறமைமேவிய ... வல்ல

வசனம்—ரேகைசாஸ்திரம், வதனசாஸ்திரம், முகக்குறி, கைக்குறி, வரைக்குறி, நகக்குறி முதலிய குறிகளைப் பகுத்தறிந்து வகுத்துரைக்க வல்லவர் நம்மைவிட எங்குண்டோ சபையோரே!

## சாஸ்திரியாதியர் தரு.

(மருமலர்ப்பூ திருமலர்ப்பூ என்றமெட்டு)

சாஸ். தேசமன்னர் திறைபளக்கும் ராசனேசலாம்
செகத்தில்மிக்க எகிப்தையாளும் மகத்துவாசலாம்
ஆசைபெட்டும் போற்றிநிற்கும் அரசனேசலாம்
அவனியாளு மரசர்தங்கள் சிரசனேசலாம்

மந். உன்னருமுத் தண்டபார்வோன் மன்னனேசலாம்
உலகினர்கள் பரவிடுஞ்சம் பன்னனேசலாம்
சொன்னதான மன்னதானஞ் சொரிபவாசலாம்
தூய்மைகுன்று தேயரசு புரிபவாசலாம்

குறி. சாஸ்திரிக ளனையழைத்த காத்திரமென்னே
தறுகண்ணர்க ளாலுமக்குக் குறைவுண்டோமன்னு
நாஸ்திகர்கள் தொல்லைபோரா ளுவராலாதும்
காமதியப் பூவுலகாள் நாதனேகூறும்

வசனம்—சலாம் சலாம், எங்களையழைத்த கருமமேதென்று தெரிவிக்கவேணும் மகாராசனே.

இராசன் விருத்தம்.

சாஸ்திரவல்லுனர்களேயின் றிராவிற்
சயனத்திற்கரையதனில்நின்றுமேய்ந்த
காத்திரவேழ்பசுக்கட்டினை ஆற்றினின்று
கரையில்வந்தமெலிந்தவேழ்பசுக்கள்சூழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரையில்விழுங்கக்கண்டேனடுத்து
வலிமையுள்ள எழுகதிரைச்சாவியான
குத்திரமாமேழுகதிர்விழுங்கக்கண்டேன்
சோதித்தெனிதனர்த்தஞ்சொல்லுவீரே.

வசனம் — பலநூல்களையும் ஐயந்திரிபறவுணர்ந்தவர்களே, நான் இன்றிரவு துயிலும்போது நதியோரமாய் ஏழு புஷ்டியுள்ள பசுக்கள் மேய்ந்துகொண்டிருக்கவும் அவைகளை நதியில்நின்றுதோன்றிய ஏழு மெலிந்த பசுக்கள் விழுங்கவுங்கண்டு திகிலுற்றேன். நான் மறுபடியுந் துயிலுகையில் ஏழு புஷ்டியான கதிர்கள் ஒரேதாளில் நிமிர்ந்துநிற்க அவைகளை ஏழு சாவிக்கதிர்கள் பட்சித்துப்போட்டன. இதனால் நமக்கும் நமது இராச்சியத்திற்கும் ஏதாவது கேடுபாடுண்டாமோ தெரிந்துசொல்லுங்கள் கலைவல்லுனர்களே.

சோதிடர்வசனம் - யோசித்துச் சொல்லுகிறோம் அரசே.

சோதிடர்வசனம் — இதென்ன பாரஇழவாயிருக்கிறது. இதனர்த்தம் சோதிடசாஸ்திரம் சகுனசாஸ்திரம் மந்திரசாஸ்திரம் கனவுநூல்களிலுண்டோ? அறப்பாங்கழுதை கொண்டுவாடா அந்தப் பாரஇழவு நூல்களைப் பார்ப்போம். அப்படா ஒன்றும் விளங்கவில்லையே! பசுவைக்கண்டது நலம், கதிரைக்கண்டது பாபம். ஆனால் மெலிவு நலிவென்ற இரு அம்சங்கள் இடையில்வந்து இடறுகட்டையாயிருக்கின்றன. இதற்கு என்சொல்வது: உமக்கு நட்டமென்றால் வெட்டிப்போடுவாரே. இதென்ன சங்கடமாயிருக்குது.

மந்திரவாதிகள் வசனம்—மற்றவர்க்கானால் புருடாவிட்டுப்போய் விடலாமே! இராசாவுக்குக் கண்டபடி சொல்லிவிட்டுப் பின்பு விழிக்கவேண்டிவருமே! மந்திரசாஸ்திரம் ஆகாயகமனம் பரகாயப்பிரவேசம் அதிரிசயம் இந்திரசாலம் மயேந்திரசாலம் அக்கினித்தம்பம் சலத்தம்பம் வாயுத்தம்பம் திட்டித்தம்பம் வாக்குத்தம்பம் முதலியனவெல்லாந் தெரிந்திருந்தும் இதன்வகை சொல்லக்கூடவில்லையே ஈஸ்பரா.

குறிசொல்பவர் வசனம் — சும்மா ஏதுமொன்றைச் சொல்லுங்கள். அப்பால் பார்க்கலாம்.

மற்றவன் வசனம் - ஓய்! நமக்கொன்றுந் தெரியாதென்று சொல்லிவிட்டு ஓடிப்போவோம்.

சோதிடர் வசனம்—வாருங்கள் உபாயமாய் ஏதுஞ்சொல்லித் தப்பிக்கொள்ளுவோம்,

சாஸ்திரிகள் விருத்தம்.

நவக்கிரகங்கடன்னின் கட்டாட்சிஉச்சநீசம்
அவைப்பகைகளையாராய்ந்தும் அதிலொன்றுந்தோன்றவில்லை
தவத்தினர்கூடிவைகுஞ் சன்னிதானத்திற்சென்று
உவப்புடன்கனவின்சாரம் யோசித்துவிடைசொல்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—மகத்துவம்பொருந்திய அரசனே, நமது நவக்கிரக பலா பலங்களைக்கொண்டு உமது கனவின் குறைகுணங்களைச் சொல்லக்கூடியதாயில்லை. நமது சாஸ்திர கட்டிடத்திற்சென்று தக்கயோசனை செய்து பின்பு தெரிவிக்கிறோம் இராசனே.

குறிசொல்பவர் விருத்தம்.

மன்னனேகனவினர்த்தம் வாலைசொல்லாததாலே
இன்னதென்றறிவதற்கு எங்களாற்கூடவில்லை
இன்னுநாமெமதுவாலை யிடஞ்சிலநாளிருந்து
பின்விடைபகர்வதற்குப் பிரியவுத்தாரந்தாரீர்.

வசனம்—நாம் கற்ற பல மந்திரவித்தைகளாலும் இதனர்த்தம் விளங்கவில்லை அதனால் எமது தேவருக்குப் பலிசெலுத்தி அவர்களிடம் கேட்டறிவிக்கச் சிலநாளனுமதிதரவேண்டும் பெருமானே.

மந்திரவாதிகள் விருத்தம்.

வையிட்டவாழ்கையேந்தும் மன்னவுன்கனவினர்த்தம்
மையிட்டஞ்சனத்தைப்பார்த்தும் வந்தொன்றுந்தோற்றவில்லை
கையிட்டகருமமெல்லாங் கைகூடுமெந்தேவர்க்கு
நெய்யிட்டுப்பூசைசெய்து நின்னவாவைத்தீர்ப்போமே.

வசனம்—நாம் அஞ்சனம்பார்த்தும் தேவதையழைத்தும் தக்கபதில் தெரியவில்லை. இதனால் அபாயமுண்டாகாது இன்னும் நம் தேவர்களுக்குப் பூசைநைவேத்தியஞ்செய்து தக்க விடையறிந்தபின் தெரிவிக்கிறோம் மகாராசனே.

இராசன் வசனம்—அப்படியே சிலநாட்களுக்குள் தெரிவியாவிட்டால் தண்டிக்கப்படுவீர்கள். உங்கள் கௌரதாபத்திரமழிக்கப்படும். போய்வாருங்கள்.

பானபாத்திரத்தலைவன் விருத்தம்.

நாதனேசொல்லக்கேளீர் நான்முன்னர்சிறையிருந்த
போதிலோரெபிரேயன்றன் பொருத்தமாய்க்கனவைச்சொன்ன
ஓதிபடியேயெல்லா முண்மையாய்நிறைவேறிற்று (ன்
ஆதலால்மறியல்விட்டால் அவன்றனையழைத்திடீரே.

வசனம்—புரவலனே! நான் சிறையிருந்தபோதில் நானும் அப்பக்காரனும் இரண்டு கனவுகளைக்கண்டு அங்கிருந்த யோசேப்பு என்னும் எபிரேய வாலிபனுக்குச்சொன்னோம். அவன் பொருத்தமான அர்த்தத்தைத்தெரிவித்தான். அதின்படியே உண்மையாய் நிறைவேறிற்று; அவனை அழைப்பித்துக்கேட்டால் தப்பாது அர்த்தஞ்சொல்லுவான் ஆண்டவனே.

பார்வோன் வசனம்—மெய்தானா?

பானக்காரன் வசனம்—மெய்தான் ஆண்டவனே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வோன் வசனம்—சல்தியில் வாருங்கள், சிறைக்கூடத்திலிருக்கும் யோசேப்பு என்னும் எபிரேய வாலிபனைச் சீக்கிரம் அழைத்து வாருங்கள் வீரரே.

சேவகர் வசனம்—அப்படியே செய்கிறோம் ஆண்டவனே.

[மறியல்வீட்டிற்போய்]

சேவகர் வசனம்—அதாரப்பா யோசேப்பு என்னும் எபிரேயவாலிபன்? நீயா? உன்னை எங்கள் இராசா சீக்கிரம் வரும்படி அழைக்கிறார், சல்தியில் வருவாயாக.

யோசேப்பு வசனம்—அப்படியே வருகிறேன் வீரரே.

சேவகர் வசனம்—இதோ வந்துவிட்டார் ஆண்டவனே.

பார்வோன் விருத்தம்.

சொப்பனமிரண்டுகண்டேன் துலங்கவைகளினர்த்தத்தைச்
செப்பிடுவோரில்லாமல் திகைத்துளங்கலங்குகின்றேன்
இப்பொழுதவையினர்த்தம் இயம்பநீவல்லோனென்றார்
தப்பறச்சொன்னாயானால் சங்கைகள்மிகச்செய்வேனே.

வசனம்—இன்றிரவு நான் இரு சொப்பனங்களைக் கண்டு பொருளறிவிப்பாரில்லாமற் கலங்குகின்றேன் நீ அவைகளைத்தெரிவிப்பாயானால் மிகுந்த சங்கைசெய்வேன் வாலிபனே.

யோசேப்பு வசனம்—சொப்பனத்தின் அர்த்தத்தைத் தெரிவிப்பது கடவுளாலாகவேண்டும். ஆயினும் அச் சொப்பனமேதென்று நானறியும்படி தெரிவியும் ஆண்டவனே.

## பார்வோன் தரு.

(சொல்லச்சொல்லத் துன்பர்தொலையுமே என்றமெட்டு)

பல்லவி

இன்றிரவுநான் கண்டசொப்பன—அர்த்தம்
ஏதோவகை யாதோவதை நீதேர்ந்திட யானேதுவேன்...இன்

அநுபல்லவி

இன்றிரவு கண்டகாட்சி ஏதறியேன் கனவின்சூட்சி
நன்றாய்ச்சொல்வாயென்று நவின்றாரிதைநீயின்று
நல்லாய்ச்சொல்சோதிடரை வெல்வாய்மென்மேலுப்வாய் ..இன்

சரணங்கள்

நயிலாற்றி னண்டைநானிற்க—அந்த
நதினின்றுய ஏழுகுற்றிடு ஒயிலாசெழு பசுவர்க்கமும்
வயிறாரப்புல் மேயமேவி வசக்கெட்டவேழ் பசுவுந்தாவிப்
பயமாகவே பசுவேழையும் பட்சித்தன மனக்கோழையும்
படிதும்பெறு சோதிடர்சொல முடியாதுள பாவாயினர்...இன்

ஆலோசனை செய்தபின் மீண்டு—துயில
அழகுஞ்செழு மையுமுளவெழு கதிர்களுமொரு காளுலவியே
மேலோங்கியே வளரவேழு மெலிந்தகதிர்கள் தோன்றியேரும்
விறலாமெழு கதிருங்கெட மறமாயவை பட்சித்திட
விழித்தேன் தந் தளித்தேன் துயி லொழித்தேன்கிடை யளிப்பா
யினி ... இன்

வசனம்—நான் நயிலாற்றினருகில்நிற்கும்போது அழகும் புஷ்டியுமுள்ள ஏழுபசுக்கள் அதினின்று ஏறிவந்து புல் மேய்ந்துகொண்டிருந்தன. அவைகளை மெலிந்தஏழுபசுக்கள்வந்துபட்சித்துவிட்டன. நான் இதைக்குறித்து ஆலோசனைசெய்துகொண்டு துயிலுகையில் மீண்டும் ஓர் சொப்பனங்கண்டேன். அதாவது ஒருதாளிலே அழகும் செழுமையுமான ஏழுகதிர்கள் நிற்க, அதைச் சாவியாய்த்தீய்ந்த ஏழுகதிர்களும் பட்சிக்கக்கண்டு கண்விழித்தேன். இதைச் சோதிடருக்கும் மந்திரவாதிகளுக்கும் அறிவித்தேன். இதன் பொருளைச் சொல்லமாட்டாமற்போனார்கள்; நீ சொன்னாயானால் அதிக சங்கை செய்வேன் வாலிபனே.

## யோசேப்பு தரு.

(சாமிநீவருவாயிப்போ என்றமெட்டு)

பல்லவி

சொப்பன அர்த்தமறைவேன்—ஏகன்
துணையினைக் கொண்டுபறைவேன்

அனுபல்லவி

தப்பறக்கண்டவிரு சொப்பனமும்மெய்யாய்
ஒப்பிதமுள்ளதுதான் ஓர்பொருள்தானேஐயா ... சொப்

சரணங்கள்

ஏழுகடித்துக் கொழுத்தபசுக்களையும்
ஏழுசெழித்து வளர்ந்தகதிர்களையும்
ஆழியோசிக்கி லடர்ந்துசெழித்தேழு
ஆண்டென்றேறெ தன்பினுடனேவாழும் ... சொப்

அப்பால்மெலிந்திட்ட ஆவேழுடன்சாவி
ஆனகதிரேழுக்குந் தானேறெயர்த்தம்
செப்புவேனேழு வருடங்களும்பஞ்சம்
சேர்ந்திடுமிதனை நேர்ந்துபாருமெஞ்சம் ... சொப்

செழிக்கவேழாண்டினிற் சேருந்விளைவினிற்
சேகரிப்பீரைந்தி லோர்பாகமதனை
அளிப்பீரதைப்பஞ்ச காலத்தி லூரார்க்கையா
தானவனமைச்சனைத் தாமேற்படுத்தியையா ... சொப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம் — தேவன் திருவருளால் உமது சொப்பனத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறேன் கேளும். உமது தேசத்தில் ஏழுவருஷம் நல்ல விளைவுண்டாம். அந்த ஏழுவருஷமும் விளைவு குன்றிப் பெரும் பஞ்சமுண்டாகும். ஆதலால் முந்திய ஏழுவருஷ விளைவில் ஐந்திலோர்பாகத்தைச் சேர்த்து வைத்திருந்து பிந்திய வருஷப் பஞ்சகாலத்தில் உயிர்கள் மாளாமல் கொடுத்து உதவிசெய்யவேண்டும். அதற்கு ஞானமுள்ள ஒருவனை மந்திரியாக்கவேண்டும் ஆண்டவனே!

பார்வோன் வசனம்—ஆகா! சந்தோஷம்! வெகுசந்தோஷம்!!

பார்வோன் விருத்தம்.

மந்திரீ இந்தவாலன் மனதினிற்கடவுள்தானே
வந்தறிவித்தாரிந்தை மனுடருட்கக்கோனுை
இந்தவாலிபனைப்போல எவருண்டோ இந்நிலத்தில்
எந்தன்நாடு தனைக்காக்க இவனைத்தக்கோன்கண்டாயே.

வசனம் — இவனுடன் தேவன் கூட இருக்கிறார். இவனைப்போல் கடாக்கொருவருளரா? இவனை எத்தேசத்தைப் பரிபாலிக்க வல்லவனென்றெண்ணுகிறேன். உனது யோசனையென்ன மந்திரி.

மந்திரி வசனம் — அவ்வண்ணமே நானும் நினைக்கிறேன் மகராஜ்.

பார்வோன் தரு.

(உன்னிடத்தில்சொல்லாமல் என்றமெட்டு)

பல்லவி

தேசமுன்பீதுவைத்தேன் யோசேப்பேநீயேனது
தேசமதனை யாளுவாய்

அநுபல்லவி

மோசம்வருதல்பின்னாய் முழுதுமறிந்துரைத்தாய்
ஆசையுடனேசொன்னாய் அமைத்தேதனித்தேசமன்னாய் ... தேச

சரணம்

உனைப்போல்ஞானமுள்ளோனிங் குண்டோவரண்மனைக்கு
உன்அதிகாரிநீயே யாரும்
உன்கீழடங்குவார்கள் என்சிங்காசனத்திற்றான்
உங்கல்தானதிவாயே
எனதுமுத்திரை ஆழி இட்டேனுனதுகையில்
சுகேதமெல்லியவுடைப் பிதனையணிவாய்மெய்யில்
ஏற்றபொன் சரப்பணி யினையிதோவணிவாய்
இரண்டாம்ரதத்தேறு டாவரும்பணிவார்
சாற்றுமுந்தாய்மீறச் சனமெவர்துணிவார்.
சார்ந்துனைநிகர்ப்பவன் தரையினிலினியார் ... தேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம் - உன்னையன்றி ஞானமுள்ளவன் வேறார்? என் சிங்காசனத்தைத்தவிர மற்றெல்லாவற்றக்கும் உன்னை அதிகாரியாக்கினேன். எனது முத்திரை மோதிரத்தை இட்டுக்கொள். இந்த மெல்லிய அங்கியைத் தரித்துக்கொள். பொன் சரப்பணி ஆதியவற்றை அணிந்துகொள். இந்த இரண்டாம் ரதத்தில் ஏறி இந்தத்தேசத்தைப் பரிபாலிப்பாய் யோசேப்,

யோசேப்பு வசனம்— அப்படியே தேவகிருபைப்படி ஆகட்டும் மன்னனே,

## பார்வோன் விருத்தம்.

தயவுன்மேல்தேவன்வைத்தார் சாத்நாப்பன்னேயாவென்னும்
பெயரையுந்தரித்தேன்போத்திப் பிராவின்புத்திரியாளான
குயின்மொழியாளாஸ்நாத்தைக் கோதையாயுனக்களித்தேன்
வயமுடனிந்தவூரை வளம்பெறப்புரந்திடாயே.

வசனம்—உன்மேல் தேவன் கிருபைவைத்தார். உனக்கு சாத்நாப்பன்னேயா வென்னும் நாமந்தரித்தேன் ஆசாரியனாகிய போத்திப்பிராவின் புத்திரி ஆஸ்நாத்தை உனக்கு மனைவியாகக்கொடுத்தேன் நீ இந்தவூரை உன் ஞானத்தினால் ஆண்டு நடத்துவாய்.

யோசேப்பு வசனம்—மிகு பாக்கியம்! இவ்வித கருணைகூர்ந்ததற்காக நன்றியறிதலான வந்தனங் கூறுகிறேன் ஆண்டவனே,

## பார்வோன் விருத்தம்.

கட்டழகுறுயோசேப்பைக் கருதியஎகித்துநாட்டின்
அட்டதிக்கறியவென்கீழ் அதிபதியாக்கினேனாநான்
பட்டயர்த்தனர்கள்போற்றப் பரிந்துகட்டியங்கள்கூற
முட்டிட்டுத்தொழும்படிக்கு முறைப்பறையறிவிப்பாயே.

வசனம் எனது மனதுக்கேற்றவனும் எம்தேசத்தைக்காக்க வல்லனுமான இப்பூபாலனை இவ்வூருக்கதிபதியாக்கினேன். எல்லாரும் இவரை இறைஞ்சிப் போற்றும்படியும் கட்டியகாரர் முட்டிட்டிறைஞ்சிக் கட்டியங்கூறும்படியும் இவர் பவனிசெல்லுகையில் வீதியலங்காரஞ்செய்யும்படியும் நான் கட்டளையிட்டேனென்று பிரசித்தப்படுத்துவிப்பாய் மந்திரி.

மந்திரி வசனம்—அப்படியேசெய்கிறேன் மகராஜ்.

## மந்திரி விருத்தம்.

நிறைகொளுமுன்னர்நிற்கும் நேசசேவகனேயார்பில்
நறைகொளுவாகைமாலை நனியுறவணிபூபாலன்
அறையுரைப்படியேயெங்கும் அறிந்திடநிருபங்கூறிப்
பறைபறையுஞ்சாம்பானைப் பண்பொடுவரச்செய்வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—இராசகட்டளையைப் பிரசித்தஞ்செய்யுஞ் சாம்புவனை கடிதிலழையும் சேவகரே.

சேவ. வசனம்—அப்படியேசெய்கிறேன் அமைச்சே.

## சாம்புவன் வருதல்.

சாம்புவன் விருத்தம்.

சாதியில்முதலாஞ்சாதி சங்கத்தைவென்றவன்நான்
ஆதிஸ்திரிபறைச்சி அவள்வயிற்றதிகமானும்
நீதியோதவ்வைவள்ளி நிறைந்தவள்ளுவர்கபிலன்
கோதிலாவுருவைமாரி குவலயத்துதித்தாரன்றோ?

## தரு.

(அக்குராணிருந்தவனை என்றமெட்டு)

பந்தியில்நான்முந்தினவன் பராசரெங்கள்சந்ததியான்
எந்தன்குலங்கபிலனல்லோ இழிதகமையானசொல்லோ

ஞானவையொடுதிருவள்ளுவர் அதிகலைஞராய்க்கொள்ளுவர்
வெளவிநந்தன்சீர்விள்ளுவர் மதிக்காதெங்களைத்தள்ளுவர்

விடையோன்சுடலையில்மதங்கி வேட்டிச்சியைச்சேர்ந்ததேது
தடையறவள்ளிநம்பனைச் சாமியெனலாமோவோது

அரிச்சந்திரமகாராசனை அடிமையாகக்கொண்டவனார்
விருத்தச்சிலைநந்திதனை விலகிநிற்கக்கண்டவனார்

கோரோசனைபால்நெய்ஸ்வாமி கூட்டிச்சேர்த்துக்கொள்ளுவதே
னாதுமாட்டிறைச்சிதனை ஈனமென்றுதள்ளுவதேன் (ன்

மந்த்ரஞ்சொல்லிஆட்டைக்கொன்றுமறையவர்கள்யாக்யமென்று
தந்த்ரமாகச்சாப்பிடுவார் சண்டாளராய்க்கூப்பிடுவார்

மரக்கறியின்புழுவைத்தின்பார் மச்சமாம்சங்குற்றமென்பார்
துலைத்ததேனீநோக்கிப்பாரார் துணுக்கம்பேசவருபவரார்

இன்னுமிழிகுலத்தரென எங்களைநீர்சொல்லுவீரோ (சொ
முன்னும்பின்னுமாராய்ந்தபின் முறையோடெம்மைவெல்லுவீ

வசனம்—எங்கள் குலத்தின் மேன்மையை எவரறியப்போகிறார். ஆண்டைகளைக்கேட்டுப்பார்த்தால் சீண்டவாரார் குறுத்தவாரென்று தெரியும். அதெல்லாமிப்போது விபரிக்கநேரமில்லை. இராசன் சமுகத்துக்குப் போகவேண்டியிருக்கிறது, நான் சமுகத்தைப் போய்வருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறு வசனம்—வயவரையடக்குந் திறலுடைய பார்வோன் அரசனின் மதிமந்திரியான நானேயே அடியேனை அழைத்தகருமத்தைத் தெரிவிக்கவேண்டுஞ் சுவாமீ!

மந்திரி விருத்தம்.

சீர்சேரும்யோசேப்பென்னும் செம்மலையதிபனாகப்
பார்வோனுந்திருபித்திட்டார் பணிந்தகிழடங்குமென்றும்
பேர்போந்ததெருக்களெல்லாம் பெருமலங்காரஞ்செய்து
நேர்மேனியறைந்சுமென்றும் நிறைபறைபறைகுவாயே.

வசனம்—யோசேப்பு என்னும் ஒரு ஞானவானை பார்வோன் இவ்வூரின் பரிபாலகனாக்கினார். அவரை யாவருமடிபணிந்து இறைஞ்சும்படியும் அவர் சொற்கமையும்படியும் தெருக்களை அலங்கரித்து அவரை எதிர்கொண்டு வணங்கும்படியும் யாவர்க்கும் பிரசித்தப்படுத்துவாய் சாம்புவனே.

சாம். வசனம்—அப்படியேசெய்கிறேன் துரையே.

வசனம்—தேசத்தயர்ந்த பரிபாலன் யோசேப்பென்னும் பூபாலன் இவ்வூரதிபனானார். டொம்! டொம்! டொம்!!

## சாம்புவன் தரு.

(இக்கிங்கும் பத்தாவே என்னும் தவிலைப்பாட்டுப்படின்)

பல்லவி

டொண் டொம் டொம் ஆண்டைகளேசாமி—டொண்.

அநுபல்லவி

மண்டலாதிபனார்சாமி வந்தார்யோசேப்பெருமான் ...டொ

சரணங்கள்

பார்வோன்கீழ் மூனுமப்புசழ்ந்தொம்
பார்த்திபனை எத்துங்கள்போற்றுங்கள்
வைராரே கூடுங்கள்பாடுங்கள்
உற்றதுதி கூறுங்கள்தேறுங்கள் ... டொண்

தோரணங்கள் ஆக்குங்கள்தூக்குங்கள் ...
துவசமதை ஏற்றுங்கள்போற்றுங்கள்
சேருமலர் சிந்துங்கள்முந்துங்கள்
தென்னம்பாளை வெட்டுங்கள்கட்டுங்கள் ...டொண்

ஆடவரே ஆடுங்கள்பாடுங்கள்
அரிவையரே நாடுங்கள்கூடுங்கள்
சேடுறையும் பாலரேவாலரே
தெருவில்மலர் சிந்திடமுந்துவீர் ... டொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டலாதிபதி வாசற் கட்டியகாரன் வரவு.

(அன்னமேசானென்செய்வேன் என்றமெட்டு)

பல்லவி

தேசநேசன் யோசேப்ராசன்
சிட்டபூபாலனின் கட்டியகாரர்நாமே

சரணங்கள்

காசினியாள் ராசன்பார்வேோன்
கட்டளை சிரசணிவோமே முட்டிட்டடி பணிவோமே ...தேச

தேவநேசன் திகழுல்லாசன்
இட்டமுறை கேட்டிடுவீர் நாட்டினர்நெறி காட்டிடுவீர்...தேச

யாவரும்வந் தவரடியை
எண்ணமுடன் போற்றிடுவீர் தன்மலரைத் தூற்றிடுவீர்...தே

### வேறு தரு.

(கள்ளுக்குடியாதேயடா என்றமெட்டு)

சோதிவதனமுறுதாரன் யோசேப் துரைசகலர்க்குமுபகாரன்
வீதிவலம்வருமிவ்வேளை யாரும் விழுந்து வணங்குமவர்தாளை

நிருபனுத்தரவுதேடாது கரம் நீட்டமுடக்கிடக்கூடாது
ஒருவருமிணையற்றஞானி அவர் உன்னதமாமவெகுமானி

எல்லையில்லாவதிகாரன் யார்க்கும் இல்லையென்னுதவுபகாரன்
சொல்லைக்கேளாதவருப்பார்வண்டர் துடுக்கினிலேபெறவையார்

நிரைநிரையாய்வந்துபோற்றும் யாரும் நீண்டவிஸ்தோத்திரம்சாற்றும்
விரைமலர்மாலையைத்தூக்கும் வீதி விசித்திரமாய்வடிவாக்கும்

வாழைகள்பாளைகள்வெட்டும் எங்கும் வடிவுறநிறுத்தியேகட்டும்
காளைகள்சோபனம்பாடும் பல கனவான்களும்வந்துகூடும்

பல்வரிந்துகில்களைத்தூக்கும் நல்ல பத்தர்கள்சந்திரிலாக்கும்
உன்னருமபிளைகள்மீட்டும் இராசர்க் குரியஆசாரங்கள்காட்டும்

வசனம்—எண்டிசைபுகழும் மண்டலாதீஸ்பரன் சிங்காசனத்தவிசில் ஆங்கெழுந்தருள்கிறார் யாவரும் போற்றுங்கள், ஸ்துதிசாற்றுங்கள், ஜெய சுவாமி பராக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டலாதிபதி கொலுவிருத்தல்.

மண்டலாதிபதி விருத்தம்.

அன்றென்னை அண்ணமாரின் அநியாயத்தாலேகாத்தாய்
புன்னெறியில்செயநினைத்த பூவையின்கரத்தால்மீண்டாய்
நின்றிடுசிறைச்கூடத்தின் நெருக்கிடைநீக்கிவைத்தாய்
இன்றென்னை இவ்வூராளும் இறைவனாய்வைத்தாய்ஸ்வாமி.

தரு

[அமலாஎனக்கனுக்கிரகம்செய்தருளும் என்றமெட்டு]

பல்லவி

பரனே என்னைப் பரிந்துபுரந்தாள்தயா கரனே

அநுபல்லவி

திருவருளதுசெய்து வருவோனே
திடமன தடியற்குத் தருவோனே ... பர

சரணம்

வருவினைகெட வரிசைகள்பெருகிட
மருவிடரற வுறுபகையருகிட
பெருமுதவிக டரைமிசைபுரிபர
குருவெனவருமருபனேபிருவர ... பர

தேவாரம்.

இடத்துடனென்றந்தைக்கு வணியாற்காட்சிகாட்டிக்
கடற்கரைமணல்போலுன்றன் கருதுசந்ததியாமென்று
திடத்துடனேநல்வாக்குத் திட்டியதேவாவென்னை
நடத்தியாதரித்தேயாள்வாய் நமஸ்காரஞ்செய்திட்டேனே.

வசனம்—எங்கும் வியாபகமாகி எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமான யேகோவாவே! என்னை இதுவரையும் வழிநடத்தியதுபோல இன்னும் என்னுடன் கூடவிருந்து என்னை நடத்தியருளுஞ் சுவாமி!

மந்திரி போற்றி விருத்தம்.

கொண்டலானதங்கர்த்த கூந்தலையுடையமாதர்
வண்டலாடிடுபூஞ்சோலை வளர்ந்திடக்கழனியெல்லாம்
விண்டலர்பொழியகல்ல விளைவுறமெசித்துநாட்டின்
மண்டலாதிஸ்பராநின் மலரடிபரவினேனே.

வசனம்—எகித்துநாட்டின் மண்டலாதிஸ்பரனைப் பார்வோன் அரசால் தெரிவுசெய்யப்பட்ட பூபதி! நின் பாதாரவிந்தம் நமஸ்காரம் பெருமானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோபனகாரர் சோபனஞ்சொல்லுதல்.

(சிறிராமசந்திரனே என்றமெட்டு)

மண்டலாதீஸ்பரனே அண்டினோம்பாஸ்கரனே
கொண்டாடவந்தோமெமைப் பார் பார் பார்
கூடினோம்புகழ் பாடினோமே—மண்ட.

தொண்டருமதுபாதம் தெண்டனிட்டோமேசேதம்
உண்டாகாதெங்கள்குறை தீர் தீர் தீர்
தோத்திரஞ்செய்து ஏற்றினோம்—மண்ட.

வேறு.

[வர்த்தனமே மிகு வர்த்தனமே என்றமெட்டு]

சோபனமேமிகு சோபனமேநற்
சுகுணசுசீலற்குச் சோபனமே
மாபிரதாப வதிபதியாய்வந்த
மன்னவற்குச்சொல்வோம் சோபனமே
மட்டற்றிடு சிட்டக்குண இட்டத்தொடு வரும்அதிபனை
வாழ்த்திச்சொல்லுவோம் சோபனமே ... சோப

எண்டிசையும்புகழ் கொண்டிடுமுன்னத
மண்டலாதீஸ்பர மன்னவனை
கண்டுஅவர்பதந் தெண்டனிட்டேகளி
கொண்டிடஇத்தினம் அண்டினமே
கடகரடக் கரிகாலாள் புடைமருவுற் றிடவுலகாள்
காவலன்சொற்படி மேவினமே ... சோப

திண்டிறல்சேருமுத் தண்டகெம்பீர
சிகாமணிபாதந் தெரிசிக்கவே
அண்டிவந்தேயுமைத் தெண்டனிட்டோமெமை
ஆளுவையேஎன்றும் வாழுவையே
அடலரியே றெனமருவித் திடமணமா யரிசுபுரிந்
தாற்றுவையேயெமைத் தேற்றுவையே ... சோப

வேறு.

(பொன்னே மின்னே சேடியரே என்றமெட்டு)

மண்டலாதீஸ்பர மகிபதியே
மதித்திங்கு வந்துசொன்னேந்திதியே
வருத்துபர்ந்திடு மெகித்துநகரினை
வளமுடனரசுசெய் தருணிதியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருபா கிருபா கரதுரையே
நீதிழி வாழுவீ ரித்தரையே
நிறைந்தவல்லப முறைந்துபுகழ்பெற
நீணிலமரசுசெய் வீர்நிரையே

## தேசவிசாரணை.

(அகிலப்ரபஞ்சம் என்றமெட்டு)

மன். எகித்துநகர் தன்னிலுள்ள மகத்துவப்பழமை
இங்கறியக் கூறிடுவா யிந்நகர்வளமை

மந். தொகுத்துரைக்கிற் புராதனவள மிருக்கதிவ்வூரே
சொல்லிலிவ்வூர்க் கிணையாய்வேறா ரில்லையென்பாரே

மன். மாசந்தோறும் மாரிபெய்து வருகுதாமந்திரி
வருஷிக்கும்மழை யால்விளைவு பெருகுதாதந்திரி

மந். தேசம்நில நதியினாலே செழிக்குதேயையா
சோரய்மழையும் பெய்வதாலே தீங்கில்லைமெய்யாய்

மன். எப்பயிர்க ளிந்நிலத்தில் செப்பமாய்வருது
இந்நகரின் தேவைக்காம்பல னெப்படித்தருது

மந். தப்பறக்கோ துமைநற்சோளத் தருபலன்மிகுதி
தவறாததன் செழிப்பினாலே தழைக்குதிப்பகுதி

மன். தக்கமழைத் தாழ்ச்சியுற்றால் சலங்குறைபாதோ
சலங்குறைந்தா லூரிற்பஞ்சந் தான்நிறையாதோ

மந். இக்காலவ ரையப்படி யெய்திடவில்லை
எற்றகாலந் தன்னில்மழை யில்லையேல்தொல்லை

மன். இன்றுமுதல் விளைவிற்பத்தி லீர்பங்குசேர்ப்பாய்
இதன்னப்பஞ்ச காலத்துவைத் திடவகைபார்ப்பாய்

மந். வென்றிகொள்பூ பாலாநீரும் விருப்பொடுகூறும்
விதிப்படியே நடப்பாருன்றன் விதிநிறைவேறும்

மண்டலாதிபதி விருத்தம்.

இந்தநாட்டிடப்புதன்னை இயம்புமந்திரியேயென்னை
முந்தவேகாத்துவந்த முதல்வனினருளினாலே
சந்தகமிவ்வூரோங்கித் தழைத்திடக்கிரியைசெய்யச்
சிந்தையாயிடங்கடோறும் சென்றுபார்த்திடுவோம்வாராய்.

வசனம்—எமக்கு ஒப்புவிக்கப்பட்ட இப்பகுதியைச் செழிக்கச் செய்யவேண்டும். ஆதலால் எங்குஞ்சுற்றித் தேசத்தின் நிலையைப் பார்த்துவருவோம் மந்திரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டலாதிபதியும் மந்திரியும் நகர்வளப்பார்த்தல்.

(மாவுங்கொய்யாவும் என்றமெட்டு)

மண். தெரும்பார்வோனின்போர்வல் லாருங்குடிசனரெல்
லோருங்குழுமியேயவந் தெய்தியபார்
ஊருந்தெருவுந்தங்குஞ் சேரியிடங்களெங்கும்
நேருந்தோரணங்களை நிரைத்தனர்பார்

மந். அட்டதிக்குமதிக்கக் கட்டியகாரர்துதிக்கக்
கட்டளைபோல்வணக்கங் காட்டினரே
திட்டத்துடனுவந்து பட்டவர்த்தனர்வந்து
சட்டப்படியேதலை சாய்த்தனரே

மண். திரண்டதுரகவீரர் மருண்டநடனகாரர்
திரடிரளாய்முன்னே செல்வதுபார்
பிரண்டபரிமீதேறி யுருண்டபரிசைதாங்கி
வீரசூரரும்பக்க மேவுதல்பார்

மந். மந்திரதந்திரர்கூடி அந்தச்சமூககாடி
வந்துகுழுமிக்காட்சி தந்தனரே
கொந்தளகத்துப்பதி னைந்தொடிமார்கள்சதி
கூட்டித்தம்வினைவை மீட்டுகின்றார்

மண். தாரைதப்பூருகவில் பேரிகையோடுதவிற்
காரர்கூடித்தந்திறல் காட்டுதல்பார்
சேருப்வாணக்களிடி நேரும்பிரங்கிவெடி
ஊரெங்குமதிர்ந்திட வொலிப்பதுபார்

மந். குடிகள்புடையினீட நடனமாதர்களாட
கூடிநடந்தானந்த நீடினரே
படைகள்பெரியர்புடை பரவிக்கரிபினடை
பற்றிராசாங்கபத்தி யுற்றனரே

### பஞ்சம் அதிகரித்தலும்
### யாக்கோபு புத்திரர் தானியங்கொள்ளவரலும்.

சபைவிருத்தம்.

பார்வோனல் யோசேப்பு மிகவுயர்த்தப்
பட்டபின்பு சொப்பனம்போற் பலிதமுண்டாய்
ஓரேழு வருடமுந்தா னியத்தைச்சேர்த்தான்
உதுபலித்த வருடமுத லுயர்ச்சிகுன்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்மேகம் மறுத்துவிட விளைவில்லாமல்
கடினமஞ்ச மேவியதால் கலக்கமுற்றுப்
பாரோர்கள் பரிதவிக்க யோசேப்பங்கே
படியளந்து மிடிமையறப் பாலித்தானே.

வசனம்—இந்தப்பிரகாரமாக யோசேப்பு அதிபதியாய்ப் பார்வோனால் உயர்த்தப்பட்டபின்பு ஏழுவருடங்களாக நல்ல விளைவுண்டாயிற்று, அவ்விளைவில் ஐந்திலோர்பாகத்தை அரசாங்க பொக்கிஷசாலையில் சேமித்து வைக்கப்பட்டது. அப்பால் அடுத்த வருஷத்தொடங்கிப் பெரும் பஞ்சமுண்டாக அந்தேசமும் அடுத்தகிராமங்களும் பஞ்சத்தினால் மிக வருந்தின. அதனால் பொக்கிஷசாலையைத் திறந்து யோசேப்புச் சனங்களுக்கு உதவியாய் விக்கிரயஞ் செய்தான். அதைக் கேள்வியுற்றுச் சகோதரருந் தானியங்கொள்ள வருகிறவிதங்காண்க.

## யாக்கோபு தரு.

(அதிபதிஅரிச்சந்திரன் என்றமெட்டு)

பஞ்சமப்பாமக்காள் பாரந்தபஞ்சம்முன்னர்
பார்த்திராதகொடிய பஞ்சமப்பா

தஞ்சமற்றோர்க்காகத் தானியங்கள்ளகிப்துத்
தலைவனங்கேதிறந்து விற்கிறாராம்

பத்துப்பேருமங்கே பரிந்துசென்றுஇந்தப்
பணத்துக்குத்தானியம் பற்றிவாரும்

எத்துக்காரருண்டு சனருண்டுபணம்
பத்திரம்நீர்சென்று பண்பாய்மீளும்

பிரியமக்காளிந்தப் பெஞ்சமீனைஎன்றன்
அருகில்விட்டுச்சென்று விரைவில்வாரும்

கருமமின்றிவீணைக் கதைக்கவேண்டாம்மக்காள்
கர்த்தன்துணைசெய்வார் கடிதில்வாரும்

வசனம்—அ! ஆ! என்வயதிலே இதுபோன்ற கொடியபஞ்சத்தைக் காணேனே! தானியமின்றிச் சாகப்போகிறோமே! பிள்ளைகளே! எகிப்தில் அதிகாரி ஏழைகளுக்குத் தானியக் களஞ்சியத்தைத்திறந்து விற்கிறாராம், பெஞ்சமீனொழிந்த ஏனைய பத்துப்பேரும் அங்குபோய் இந்தப் பணத்துக்குத் தானியத்தை வாங்கிவாருங்கள். பத்திரம், பணம் ஆட்சொல்லியல்லவா? தேவன் உம்முடனே இருப்பாராக.

பிள்ளைகள்வசனம்—அப்படியே செய்கிறோம் பிதாவே!

## சகோதரர் தரு.

[போவோம்வாரீர்சகிகாள் என்றமெட்டு]

வாரீர்போவோம்நாங்கூடி வளருகின்றஎகிப்தைநாடி
சேருந்தானியங்கள்வாங்கித் திரும்புவோமவ்வூரைநீங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கபணமெடுக்கிறாராம் தானியங்கள்கொடுக்கிறாராம்
இக்கணமேநாங்கள்போவோம் இல்லையேற்பசியாற்சாவோம்

கோனுறையெகிப்துநாடு குறுகிக்குழந்தைகளோடு
தானியப்பஞ்சம்விள்ளுவோம் தக்கதானியங்கொள்ளுவோம்

ஐயர்சொன்னதெல்லாங்கேட்டோம் அவருரையைத்தட்டமாட்டோம்

மெய்யாய்நடந்தால்மதிப்பார் விளங்கிடஆசீர்வதிப்பார்

வசனம்—நெடுந்தூரப் பிரயாணத்தால் அலுப்படைந்தாலும் எகிப்துதேசத்திற்குச் சேமமே வந்துசேர்ந்தது பெரிய சந்தோஷம். வாருங்கள் அதிபதியிடம் போவோம்.

சகோதரர் விருத்தம்.

தலைவனேசரணமையா சார்கானான்தேசந்தன்னில்
நிலையுறுபஞ்சமுண்டாய் நீள்பசியால்வருந்தி
சிலபணங்கொண்டுவந்தோம் செம்மலேதானியத்தின்
விலையைநீர்வாங்கிக்கொண்டு மெலிந்தவர்க்கிந்திடுமே.

வசனம்—மகாப்பிரபு நமஸ்காரம்! நமஸ்காரம்!! நாங்கள் பஞ்சமிகுதியால் கானான்தேசத்திலிருந்து தானியங்கொள்ளவந்தோம். கிருபைசெய்து தந்தனுப்பவேண்டும் ஆண்டவனே.

சபைவிருத்தம்.

கண்டவுடன் யோசேப்புச் சகோதரரென்
　　றறிந்துகண்ட கனவையெண்ணிக்
கொண்டிரக்க முள்ளடக்கிச் சகோதரரை
　　விழித்துவெளிக் கோபங்காட்டித்
திண்டிறலாய் வருத்தியபின் செய்யுநன்மை
　　செய்யவெண்ணித் திவ்யதேவ
தொண்டன்மின் டெனவரோ டார்ப்பரித்துச்
　　சீற்றமுடன் சொல்லுவானே.

வசனம்—யோசேப்பு சகோதரரைக் கண்டவுடன் மட்டிட்டும் தனக்குச்செய்த குற்றத்தை மனதிருத்தாமல் நேசத்தை உள்ளடக்கிக் கோபித்துப்பேசும் விதங்காண்க.

## யோசேப்பும் சகோதரருந் தரு.

(ஆருசீயுல் பேரைக்கூறவையே என்றமெட்டு)

யோசேப்பு

பல்லவி

வேவு பார்த்திட மேவி வந்தீரோ—நீங்கள்
மெள்ளமெள்ள வுட்புகுந்து கள்ளவாயில் பார்க்கிறீரோ—வே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபல்லவி

தாவிமிக்க ஆவலுடன் மேவியெங்கள் கோவினுரைப்
பாவிகாள்நீர் கொள்ளைகொள்ளக் காவையுங்குன் றையுந்தாண்டி
வேவு

சகோதரர்

(என்னடாஎன்னைத்தோட்டி என்றமெட்டு)

வேவாளரல்லநாமூர் மிளிர்கானன்தேசம்நீர்
விசாரித்துப்பார்த்திடும் ஐயா—நாங்கள்
மிருபன்னிருபுத்ரர் மெய்யாய்
பூவில்ஒருவன்மாண்டான் புனிதகனிஷ்டனூரில்
பொய்யல்ல அறிவீர் துய்யா

யோசேப்பு

சரணம்

உங்களையதார்த்தரென இங்கெனக்குக்காட்டிடவே
அங்கொருவனுண்டெனநீர் சாதிக்கிறீர்
எங்களைமடிப்புச்செய்ய இங்குவந்ததில்லையென்று
சங்கையாளர்போலநின்று வாதிக்கிறீர்
வெங்குணரைமட்டிடுமென் சங்கைசேர்சமூகத்தினில்
துங்கமுள்ளோர்போலநின்று போதிக்கிறீர்
இங்குநீர்சொன்மொழிதனிற் றங்குமுண்மைகண்டறிய
பொங்குமென்சமூகத்துங்கள்தப்பியையழைத்தாலுய்வீர் .வே

வசனம்—உங்கள் இளையசகோதரன் இங்கேவந்தாலன்றி நீங்கள் இங்கிருந்து புறப்படுவதில்லையென்று பார்வோன் நாமத்தைக்கொண்டு சத்தியஞ்செய்கிறேன். அதுவரைவும் இவர்களை மறிப்பிலடைப்பீர் சேவகரே!

சேவகர் வசனம்—அப்படியே செய்கிறோம் மகாராசனே!

சேவகர் மறுவசனம்—உரலுட்பட்டது உலக்கைக்குத்தப்புமா? இனி யோசனைசெய்தாவதென்ன? வாருங்கள் மறியல்வீட்டிற்கு, இதற்குட் புகுங்கள் பூட்டடா கபாடத்தை.

## சகோதரர் தரு.

(என்னவிதிவந்தது என்றமெட்டு)

பல்லவி

என்னசதிவந்தது—மறிப்பி—லிருக்கவிதிவந்தது

அநுபல்லவி

அந்நியநாட்டினில் நாமெல்லோரும்வந்
தவதிப்படலாச்சே ... என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

பஞ்சத்தினால்வருந்தி—வந்தோர்க்கிந்தப்—பாடுவரலாமோ
பெஞ்சமீனைச்சுட்டிப் பேசியதாலிந்தச்
சஞ்சலம்வந்ததையோ ... என்ன

தம்பிக்குச்செய்தபழி—எமது—தலைமேலிருக்குதையோ
நம்பிக்கைத்துரோகத்தை நாஞ்செய்ததாலிது
நண்ணினதோதெய்வமே ... என்ன

சிறையிலிருந்ததென்று—லெவருஞ்—சிரித்தேயிகழ்வாரே
துறைதெரியாம லிறங்கினவர்போலத்
துன்பத்துள்ளானேனே ... என்ன

யோசேப்பு விருத்தம்.

பொறுக்கருங்குற்றஞ்செய்த புல்லரையடக்கிநாளும்
அறுக்கையாய்க்காவல்செய்யும் அதிபராக்கிரமத்தோரே
வெறுப்புடன்சிறையில்வைத்த மிளிர்கானான்தேசத்தாரைச்
சுறுக்கிலென்சமுகந்தன்னிற் றோன்றிடஅழைத்திடீரே.

வசனம்—மூன்றுநாளின்முன்னே சிறையிடப்பட்ட கானானியரை இங்கே அழைத்துவாருங்கள் வீரரே.

சேவகர் வசனம்—அப்படியே செய்கிறோம் மகாராஜ்.

சேவகர் மறுவசனம்—நமது அதிபதி உங்களைத் தம்மிடம் அழைத்துவரும்படிசொன்னார் சல்தி வருவீராக.

சகோதரர் வசனம்—அப்படியே வருகிறோம் வீரரே.

சேவகர் வசனம்—இதோ வந்துநிற்றார்கள் மகாராஜ்.

யோசேப்பு விருத்தம்.

தேவனுக்குப்பயப்படுகிறேனீங்க
ளுயிருடனேசெல்லவேண்டும்
ஆவலுடனீங்கள்சொன்னதுண்மையெனி
லொருவனைநீர்விட்டகன்று
மேவுமிளையவன்றன்னைக்கூட்டிவந்து
உங்கள்சொல்லைமெய்ப்பித்திட்டால்
சாவதில்லையாவர்களுஞ் சேமமாய்ப்
போகலாந்தவறிடீரே.

வசனம்—நான் தேவனுக்குப் பயப்படுகிறேன் உங்கள் சொல்லு உண்மையென நான் அறியும்வரையும் ஒருவனைச் சிறையில்வைத்து மற்றவர்கள்போய் இளையவனைக் கூட்டிவாருங்கள். இவன் பேரென்ன?

சகோதரர் வசனம்—சிமியோன் ஆண்டவனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசேப்பு வசனம் சிமியோனைப் பிடித்துக் கட்டிச் சிறையில் வையுங்கள் வீரரே.

சேவகர் வசனம் — அப்படியே செய்கிறோம் மகாராஜ்.

ரூபன் வசனம் — இளைஞனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதிருங்களென்று நான் சொல்லவில்லையா? அவன் இரத்தப்பழியல்லவா நம்மிடம் வாங்கப்படுகிறது.

யோசேப்பு வசனம் - சற்றுநில்லுங்கள், நான் உள்ளறையிற் போய்வருகிறேன்.

## யோசேப்பு தரு.

(பத்தினிகண்ணகையே என்றமெட்டு)

என்னசெய்வேன்நாதா இதற் கேதுசெய்வேன்போதா
முன்னமேசெய்வினை முற்றும்மறந்தாலும்
முற்கோபங்காட்டுகிறேன் நானும் முற்கோபங்காட்டுகிறேன்

அப்பனைத்தம்பியனை நானும் எப்போகண்டாறுவேனோ
தப்பிதஞ்செய்தும் தமையன்மாரல்லவோ
சஞ்சலம்நீங்கிடுமோ இந்தச் சஞ்சலம்நீங்கிடுமோ

அபிராமுடைதேவனே செய்குற்றத்தை அன்னருணருகிறார்
எபிரேயபாஷை எனக்குத்தெரியாதென்
றெண்ணியிரங்குகிறார் அவர் எண்ணியிரங்குகிறார்

வசனம் — என் மனதடக்கக்கூடாத விதனம் வருகிறதே! எப்படியும் துக்கத்தை மனதிலடக்கி இவரை வருத்தித் திருத்தக் கிருபை செய்யவேண்டும் ஈஸ்பரனே!

## யோசேப்பு விருத்தம்.

வேவாளரல்லவென்றும் மிருசமாதானரென்றும்
நாவாலேநீர்சொன்னாலும் நம்பிடக்கூடவில்லை
போவீர்தானியங்கள்வாங்கிப் புகன்றதம்பியையழைத்து
மேவீர்அப்பாலுங்கட்கு மிருசங்கைபுரிகுவேனே.

வசனம் — நீங்கள் அங்கேயிருக்கிறானென்று சொன்ன உங்கள் தம்பியைக் கூட்டிவந்தாற்றான் சங்கைபெறுவீர்கள். அதுவரையும் இவன் சிறையிலே இருக்கவேண்டும். சீக்கிரம் புறப்பட்டுப் போங்கள் பிரயாணிகளே.

## சபைவிருத்தம்.

இவர்களைவிடுத்தபோது ஏவலாளர்களையேவி
அவரவர்கட்குத்தானிய மளந்தபின்னடைப்பத்துள்ளே
எவர்களுமறியாவண்ணம் இவர்பணமறைத்துவைத்துக்
கவனமாய்வழிக்குத்தீனும் கருதியீந்திடுமென்றனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம் — இவர்களைப் போகவிட்டபோது ஏவலாளரை இரகசியமாய் அழைத்து அவரவர் பணங்களை வாங்கி அவரவர் பைகளைத் தானியங்களால்நிரப்பி அவரவர்கள் கொண்டுவந்த பணங்களையும் அவர்களுக்குள் வைத்து வழிக்கு உணவுங்கொடுத்து அனுப்பும்படி கட்டளையிட்டான் என்றறிக.

சகோதரர் விருத்தம். (ல

கும்பிடப்போனவர்தலையிற்கோயிலிடிந்தேவிழுந்தகொடுமைபோ
வெம்பசியினால்மெலிந்துவந்தவெமைவேவாளரென்னவெந்தன்
தம்பியைசிறையிலிட்டும் நற்காலத்தால்தப்பி நமதுதம்பி
வெம்பிடவேசிறையிருக்க விதியாச்சேயப்பருக்கென்விளம்புவோ
மே.

வசனம்—சாரைவாய்ப்பட்ட தேரை தப்பினதுபோல நாம் தப்பினோம். தம்பி தனியே சிறையிருந்து புலம்பநேரிட்டதே! அப்பருக்கென்னசொல்லுவோம், பென்சமீனையும்விடச் சம்மதிப்பாரோ தெரியவில்லையே கடவுளே!

## சகோதரர் தரு.

(ஆனைகக்காதானே என்றமெட்டு)

கெட்டகாலம் நட்டகோலம் கிட்டினதோ தேவே
கட்டழகன் யோசேப்பினைக் கடத்திவிட்ட பவமோ
அப்பர்சிமோ னுக்காய்ச்சோபம் அடைவார்பரி தாபம்
எப்படியுந் தேவகோபம் இருக்குதெம்மேல் ஐயோ
சிமியோனில்லை யென்றுந்தந்தை சினப்பாரென்ன புத்தி
அமைவாகநா மவரையெந்தி அழைப்போம்பென்ச மீனை

ரூபன் வசனம்—இச்சத்திரத்திற் தாமதித்துப்போவோம் பொதிமிருகங்களுக்குத் தீனிடவேண்டும். அடப்பங்களை அவிழுங்கள்,

யூதா விருத்தம்

பட்டகாலேபடும் கெட்டகுடியேகெடும் பைக்குள்ளேபணமிட்ட
தார் (யோ
நட்டமெய்திடுவேளை வந்ததோமுந்தவே நாய்புரிபவச்செ[illegible]
மட்டிட்க்கூடாத மாயமிதுபாயமெது மாவிரைவதாய[illegible]
இட்டமாயினைவபெலா மெமதுதந்தையருக் கியம்புவோமெழுவி
ர்களே.

வசனம் — இதென்ன பொல்லாங்கு, நாங்கள் கொடுத்தபணம் இந்தச் சாக்குகளுக்குள் வந்ததெங்ஙனமோ? ஏது கெட்டகாலத்தால் இதிலும் ஏதும் விக்கினம்வருமோ தெரியாது. இவைகளை அப்பருக்குப் போய் அறிவிப்போம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாக்கோபின் சமூகத்தில் சங்கதி தெரிவித்தல்.

### சகோதரர் அகவல்.

துதிபெறுதந்தாய் தொடர்ந்துநாமெகிப்தின்
அதிபதியிடம்போய் அடிபணிந்திட்டோம்
எமைவேவுகாரரென் றெண்ணியேகோபித்
தமைவறலூர்பெய ரனைத்தையுங்கேட்டான்

எல்லாஞ்சொன்னோம் எம்பிலோர்சிறுவன்
வல்லகானானில் வசிக்கிறானென்றோம்
அதனைநம்பாமல் அருஞ்சிறைதன்னில்
விதனமுற்றிடவே மேவிடச்செய்தான்

மூன்றாம்நாளழைத்து மொழிந்திடுமுண்மைச்
சான்றினையறியத் தம்பியையழையும்
என்றதன்பிணையாக வெழிற்சிமியோனை
அன்றவன்சிறையி லடைத்துவைத்தான்

வேண்டியதானியம் விருப்பொடுதந்து
மீண்டெமையனுப்ப மேவிடும்வழியில்
பொதியினையவிழ்க்கப் புத்தியாய்நாங்கள்
விதனமுறும்படி மேவிமுன்கொடுத்த

எம்பணமுடிப்புக ளிருந்திடக்கண்டு
தப்பித்துநின்று தம்மிடம்வந்தோம்
உண்மையையுரைத்தோ முமதுகட்டளைபோல்
வண்மையாய்நடப்போம் மதித்தறிவீரே.

வசனம்—எகிப்தின திபதி எங்களை வேவுகாரரென்று சிறையிலிருத்தினான். நாங்கள் எங்கள் வரலாற்றைச்சொன்னபோது தம்பியொருவன் ஊரிலிருக்கிறானென்றுசொன்னமையால், எங்களை மூன்றாம்நாள் அழைத்து, தம்பியை எனக்குக் கூட்டிவந்து காட்டினீராகில் நான் உங்கள் பேச்சைநம்பி யாவரையும் விடுதலைசெய்வேன் அதுவரையும் இவன் பிணையாயிருக்கட்டுமென்று சிமியோனை மறிப்பிலிருத்தி எங்களை விடுவித்தான். வழியிற் பார்க்கையில் நாங்கள்கொடுத்த பணமுடிப்புகளும் எங்கள் பைக்குள்ளே இருந்தன. அதன் மாயமேதென்றறியோம் பிதாவே.

பிதா வசனம் - ஆ! ஆ! இதென்ன அநீதி. வயிற்றுக்கொடுமைக்காய் உம்மையனுப்ப வேறொரு கொடுமையைச் சம்பாதித்துவந்தீர்களா தெய்வமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார்கோபு தரு.

(இந்திரனே என்றமெட்டு)

என்னசெய்வேன் ஐயையோநா னேதுசெய்வேன்
இருந்தபுத்தி யனும்போகவோ
முன்னொருவன் போனதுக்கம் முடியுமுன்னே
இன்னுமொரு வனையிழக்கவோ

வஞ்சனையாய்ப் பையிற்பணம் வைத்ததாரோ
வானவனருள் நானறியேனே
பென்சமீன்பேர் சொன்னதுங்கள் பெருமடமை
பிதாவையுடலகாற் பிரிக்கச்சொன்னீரோ

திருமகன்முன் என்னைவிட்டுச் சிதைந்துவிட்டான்
சிமியோனையும் சிறையில்விட்டீரோ
உருகுகுதே எனதுள்ளம் உலைமெழுகாய்
உள்ளதையும் பறிகொடுப்பேனோ

வசனம்—பென்சமீனையும் தொலைக்கப்போகிறீர்களா? உங்கள்பாட்டிற்போங்கள். இத்தள்ளாமையான காலத்தில் ஒன்றின்மேலொன்றாய்த் துக்கசம்பவம் வருதே ஜெகதீசா.

சபைவிருத்தம்.

யாக்கோபு மனங்கலங்கிப் பென்சமீனை
இழக்கவரு மென்றுபயந் திருக்குநாளில்
சாக்கினிலே புத்திரர்கள் கொண்டுவந்த
தானியங்கள் குறைவுபட்ட தன்மைகண்டு
வாக்கினுற் சொல்லரிய துக்கமுற்று
மறுபடியுந் தானியம்போய் வாங்காவிட்டால்
நீங்கரிய பஞ்சத்தாற் சாவோமென்று
நேசமைந்த ரையனுப்ப நினைத்திட்டானே.

வசனம்—யாக்கோபு துக்கித்திருக்குமாளவில் மறுபடியும் தானியங் குறைவுபட்டது. அதனுல் மீண்டும் புத்திரரை எகிப்துக்கு அனுப்ப நினைத்துச் சொல்லும் விதங்காண்க.

## யாக்கோபும் யூதாவும் ஒருபனுந் தரு.

(அப்பாமகனேபாம்பு என்றமெட்டு)

யாக். பஞ்சங்கொடியதாச்சே பற்றுந்தானியம்போச்சே
பரிந்தெகிப்துக்குச்செல்லுவீர் மக்காள் மக்காள் மக்கா.

யூதா. பென்சமீன்தனைக்கூட்டிப் பெயராமல்கால்நீட்டிப்
பிரிந்தெகிப்துக்குச்செல்லேன் அப்பமே அப்பமே அப்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக். இவன்போய்ச்சொல்லுவானேன் இவனுப்பிரியில்லாதேனே
இறந்திவன்குழிதனிலே மக்காள் மக்காள் மக்காள்

யூதா. சாகாதிருக்கில்வேண்டும் தனியங்கொள்ளவேண்டும்
தம்பிவருவான்சத்யம் அப்பரே அப்பரே அப்பரே

யாக். யோசேப்பிறந்துவிட்டான்உயர்சிமோன்சிறைப்பட்டான்
உடன்பென்சமீனும்போகவோ மக்காள் மக்காள் மக்கா.

ரூபன் நசாபென்சமீனன்றேன் இங்குறுவிடிலென்றன்
இருபுதல்வரையுங்கொல்லும் அப்பரே அப்பரே அப்ப.

யாக். இத்தேசக்கந்தவஸ்தும் ஏற்றவாதுமைவித்தும்
இனியதேனுங்கொண்டுபோம் மக்காள் மக்காள் மக்கா.

ரூபன் பத்திரமாகச்செல்வோம் பார்த்திபர்க் குன்மைசொல்வோம்
பாமைமைக்காப்பாரையா அப்பரே அப்பரே அப்பரே

யாக் வெந்தனிப்பணமுண்டு வேறுபணமுங்கொண்டு
விரைவினிற்போயமீளுமே மக்காள் மக்காள் மக்காள்

யாக்கோபு வசனம் — வேறு வழியில்லமையால் பென்சமீனையுங் கூட்டிப்போங்கள். பத்திரம், இவன் திரும்பிவர விட்டால் என்னைக் குழியிலிறக்கப்பண்ணுவீர்கள் போகும்போது கந்தவர்க்கம், பிசின் தைலம், தேன, வாதுமைக்கொட்டை ஆகியவைகளைக் காணிக்கையாகக் கொண்டுபோவதுடன், முன் உங்கள்கையிற் காணப்பட்ட பணங்களையும் புதிதாய்த் தானியம்வாங்க வேறுபணங்களையுங் கொண்டுபோங்கள். ரூபனே பென்சமீனுக்கு நீயே உத்தரவாதி.

ரூபன் வசனம் - அதற்குத் தடையா? இவனைக் கொண்டுவாராமல் நான் இங்கே வரமாட்டேன் பிதாவே!

யாக்கோபு வசனம் - ஆசீர்வாதம், போய்வாருங்கள் மக்காள்.

யூதா வசனம் - வாருங்கள் கழுதைகளை ஓட்டுங்கள், பணங்கள் பத்திரம்.

## யாக்கோபும் பென்சமீனுந் தரு.

(எங்குபோயினுஞ்செயனே என்றமெட்டு)

பென். அங்குசெல்லஅஞ்சுறேன் ஆதலாலுன்னைக்கெஞ்சுறேன்
அங்கஅண்ணனுங் அடித்துமாண்டான்
சொல்லிற்சிமியோன் துபரிற்பூண்டான் — அங்கு.

யாக். அஞ்சவேண்டாம்பாலனே ஆண்டவரனுகூலனே
பென்சமீனேநீ சென்றுற்சிமியோன்
பெயர்ந்துவருவான் அயர்ந்துநீதான் - அஞ்ச.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பென், என்னையும்மறிப்பிருத்திஞல் என்செய்வேன்மிகவருத்தி
அன்னையும்மிகக் கலங்குவாள் [ஞல்
ஆருத்துயரால் மலங்குவாள்

யாக். வேவுகாரரென்றென்னிஞன் விவிதயோசனை பண்ணிஞ
மேவுமுண்மையும் வெளிப்படிப்போக (ன
வேண்டுமிதுவெம் மாண்டவன்செயல்—வேவு.

பென். உரைப்படியப்பக்குச்செல்கிறேன் உண்மையவர்க்குச்சொல்கி
தரைக்குமிளயுண்மை தான்மறையுமோ (றேன்
சத்தியத்துடை சித்திகுறையுமோ—உரைப்.

## சகோதரர் தரு.

(பத்தாதேசகி என்றமெட்டு)

பல்லவி

செகத்தினில் மிருத்தள வெசித்துக்கேகுவோம்

அனுபல்லவி

மிகத்தயவாய் மகத்துவத்தை வகுத்தவண்ணமே ... செக

சரணங்கள்

பெரியகழுதைகளைப் பின்னமில்லாமலோட்டிப்
பென் சமீனையுங்கூட்டி ... செக

அரிபகம்புண்மைதனை அதிபதியுங்காண்பார்
அடங்காமகிழ்ச்சிபூண்பார் ... செக

அதிகபஞ்சத்தினுலே அப்பருமுடன்பட்டார்
இவையோகவலைதொட்டார் ... செக

மதியுடன்காட்டிடை மலைகளெல்லாங்கடப்போம்
மனதஞ்சாமல்நடப்போம் ... செக

யூதா வசனம்—நமஸ்காரம் அதிபதியே! உமது உத்தரவின் பிரகாரம் எங்கள் தம்பியைக் கூட்டிவந்திருக்கிறோம் மகாராஜ.

யோசேப்பு வசனம்—நல்லதும் இந்த ஆளுடன் கூடிப்போங்கள்.

## யோசேப்பு விருத்தம்.

இயம்பியபடிவந்தார்கள் இவர்மீதுகுற்றமில்லை
பயஞ்செறிகிலைறயிருக்கும் பையனையழைத்துவந்து
செயம்பெறுமிவர்களோடு சேர்த்தென்றன்மனையில்விட்டுச்
சுயம்பாகிதன்னையென்முன் சமுகத்தினில்வரச்செய்வாயே.

வசனம்—இவர்களைக் கூட்டிப்போய் எனதுமாளிகையி லிருக்கும் படிவிட்டுச் சுயம்பாகியை வரும்படிசெய்வாய் காரியஸ்தனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியஸ்தன் வசனம் — அப்படியே செய்கிறேன் மகாராஜ.

சயம்பாகி வசனம் — நமஸ்காரம் மண்டலாதிஸ்பரா,

யோசேப்பு விருத்தம்.

அன்புடன்பணிகள்செய்யும் அருஞ்சயம்பாகிவாராய்
முன்பாகவந்குவந்த மூபற்சிசேர்மணிதருச்கு
இன்பாகவிருந்தளிக்க எண்ணினேனுயத்தஞ்செய்
பின்பவருடனிருந்து பெருவிருந்துண்பேன்நானே.

வசனம் — அடே சயம்பாகி விருந்துக்கு ஆயத்தஞ்செய் இவர்களுடன் இன்று நான் மத்தியானம் விருந்துண்ணவேண்டும். சல்தியில் போ.

சயம்பாகிவசனம் — அப்படியே செய்கிறேன் மண்டலாதிஸ்பரா.

யூதாவசனம் — ஏன் எங்களை வீட்டுக்கனுப்பினுர்? முன் நம்மையுட் காணப்பட்ட பணத்தைப்பற்றியோ தெரியவில்லையே!

அரண்மனைக்காரியஸ்தனுக்கு
யூதா சொல் விருத்தம்.

முன்வந்து தானியத்தை வாங்கிப்போனேம்
முறைமையாய்க் கொடுத்தபணம் எம்பைக்குள்ளே
என்னவித மாகவோ விருக்கக்கண்டோம்
எடுத்ததையுங் கொண்டுவந்தோம் யாமென்செய்வோம்
பின்னுந்தா னியம்வாங்கப் பணமுங்கொண்டு
பிசகாமல் வந்திட்டோ மிதைகீர்பாரும்
இன்னுந்தா னியந்தாரு மெங்கள்மீதில்
எள்ளளவுங் குற்றமில்லை இதையேற்பீரே

வசனம் — அரண்மனைக்கதிபனே! நாங்கள் முன்னர் தானியத்தை வாங்கிப் போகும்போது அவரவர் கொடுத்தபணம் அவரவர் பைக்குள்ளே காணப்பட்டது. அதென்ன மாயமோ அறியோம். நாங்கள் அந்தப் பணத்தையும் புதிதாய்த் தானியம்வாங்க வேறுபணத்தையுங் கொண்டுவந்திருக்கிறோம். இவைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும், நாங்கள் குற்றவாளிகளல்ல ஐயா!

அரண்மனைக் காரியஸ்தன் விருத்தம்.

அமைவாகவிருங்களுங்க ளரும்பணம்முன்னர்பெற்றேன்
உமதாதிதேவனுங்கட் குப்த்தனர்பணத்தைப்பைக்குள்
சமதானமாயிருப்பீர் தவறுநீர்செய்யவில்லைச்
சிமியோனுஞ்சிறையால்வந்து சேர்ந்தனன்மகிழுவீரே.

வசனம் — பயப்படவேண்டாம், உங்கள்பணத்தை நான் முன்னர் பெற்றுக்கொண்டேன். பைக்குள்ளிருந்த பணங்களைத் தேவன் உங்களுக்குத்தந்தார். மறிப்பிலிருந்த சிமியோனும் இதோ வந்திருக்கிறுன். யாவருஞ்சேர்ந்து சந்தோஷத்துடன் அவ்விடத்திலே பேசியிருங்கள் பிரயாணிகளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதாவசனம்—வெகு உபகாரம் காரியஸ்தனே!

## யோசேப்பு வீட்டில் சம்பாஷித்தல்.

யூதா வசனம்—இதோ மண்டலாதிபதி வருகிறார் எல்லோரும் எழுந்திநில்லுங்கள் நாம் கொண்டுவந்த சந்திப்புக்களை அவருக்குச் செலுத்துவோம்.

மகா மகிமைதங்கிய மண்டலாதீஸ்பரனே உமக்கு நமஸ்காரம், எங்கள் வயோதிப தந்தையாரவர் இந்தக் காணிக்கைகளை உமக்குச் செலுத்தும்படி கற்பித்தார் இவைத அன்பாய் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம் ஆண்டவனே.

யோசேப்பு வசனம்—ஆ! ஹா! மிகு சந்தோஷம்.

## யோசேப்பும் சகோதரருந் தரு.

(தெரியம்சொ என்றமெட்டு)

யோசே. உங்கள்சுக சேமமென்ன
உமதுடை முதியதந் தையர்சுகமாய்
ஓங்கிவாழ்ந்தவ ராங்குறைகின்றாரா
உரைத்திடு மலர்செய்தி திடத்துடனே

சகோ. எங்களுடை யாண்டவனே
எமக்கொரு குறையில்லை எங்கள்தந்தை
ஏற்றதேவனின் மாற்றமில்கிருபையால்
இலங்கியே வாழ்கின்றார் நலம்பெறவே

யோசே. இக்குறைவோன் இளையவனோ
இவனோ தந்தையோ டிருந்தமகன்
ஏற்றதந்தையும் போற்றிவளர்த்தவன்
இவன்றானோவெனப் புகன்றிடுமே

சகோ. சந்தைகசெதி பார்த்திபனே
சாற்றிய சகோதரன் றனிவனே
சார்ந்ததந்தையின் கூர்ந்தபட்சம்
தங்கினோ னிவன்றான் றராபதியே

யோசேப்பு விருத்தம்.

சொன்னவார்த்தைதபைநம்பாதுன் தோற்றத்தைத்காணுதற்குப்
பின்னமில்லாதழைத்தேன் பிழையொன்றுமில்லைஉம்மேல்
என்னன்பனேயோராய் ஏகனுங்கிருபைசெய்து
உன்னைஎந்நாளுங்காத்து உதவிசெய்திடுகுவாரே.

வசனம்—என்னேசபிள்ளாய்கிட்டவா, உன்னைக்கடவுள்காப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோசேப்பு உள்ளறையிற்போய்ப் புலம்புதல்.

[காதன்முடிமேலிருக்கும் என்றமெட்டு]

எப்படித்தாங்கிடுவேன் இத்துயர்நீக்கிடுவேன்
எனதாசஞ்சலம்போமோ இன்றுன்பப்படலாமோ

சப்ரமஞ்சத்தில்மெள்ளச் சார்ந்துநான்துயில்கொள்ள
சகோதரர்கலங்கவோ தவித்துளமலங்கவோ

பந்தமாய்கலிந்தாரோ பசியினல்மெலிந்தாரோ
தந்தையைக்காண்பேனே சந்தோஷம்பூண்பேனே

உதிரமுள்ளுருகுதே உறைகண்ணீர்பெருகுதே
அதிதுயர்தருகுதே அடர்சோகம்வருகுதே

வசனம்—பிரலாபித்துக்காரியமில்லை முகத்திற்கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வெளியிலேபோவோம். சுயம்பாகி! விருந்து ஆயத்தமா?

சுய. வசனம்—ஆம் ஆண்டவனே.

யோசேப்பு வசனம்—அதோ இருக்கிற அவரை முதலிலும், மற்றவரை அதற்கடுக்கவும், மற்றஇருவரையும் முறையே அடுத்தடுத்தும் அதோவிருப்பவரை அதற்கடுக்கவும் இப்புறத்திருப்பாரை அதற்கடுக்கவும் அப்பாலிருப்பவரை அதற்கடுக்கவும் அதோ இருப்பவரை அதற்கடுக்கவும் மற்றவரை அதற்கடுக்கவும் இச்சிறுவனை சுற்றிலும் வைத்துப் பக்கியமாச்செய்வாய். அந்தச்சிறுவனுக்கு மற்றவர்களிலும் ஐந்துமடங்குபோசனம் வைப்பாய் எனக்குத் தனியாசனத்தில் போசனந் திட்டஞ்செய்வாய் சுயம்பாகி.

சுயம்பாகி வசனம்—தங்கள் உத்தரவுப்படியே செய்திருக்கிறேன் ஆண்டவனே.

மறுவசனம்—போசனம் ஆயத்தமாயிற்று எழுந்திருங்கள். அவரவருக்குக் குறித்த இடத்திற்போயிருங்கள் பிரயாணிகளே.

யூதா வசனம்—இதென்ன வயதுக்கிரமப்படி அடுக்கடுக்காய் வைக்கப்பட்டிருக்கிறோமே! இதெப்படி அவர்களுக்குத் தெரியும்?

ரூபன் வசனம்—எல்லாம் இறைவன்செயல். அவர்க்கு ஸ்தோத்திரம். சாப்பிடுவோம்.

### சுயம்பாகி தரு.

(போச்சே போச்சே என்றமெட்டு)

அன்பாயளிக்கும் விருந்தையருந்தும்
அருந்திலரசன் ஆசந்திருந்தும்
என்போற்சண்டைபற் காரனுண்டோ
இராசன்நேசித்த தென்னகண்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழியைநான் பிடித்துரித்துக்
குடர்முதலா னதைப்பிரித்து
தாளித்தசரக் குகள்திரித்துச்
சமைத்திட்டேன்நெய் யினிற்பொரித்து

வாழைமுருங்கை புடோல்கத்தரிக்காய்
வருக்கைவென்றியா சினிக்கக்கரிக்காய்
தாளிபூசணி பாகல்சுரைக்காய்
சமைத்திட்டேனத னோடவரைக்காய்

பதினெட்டுவகை யாம்பச்சடியும்
பரிந்திட்டேனருந் தியேபொச்சடியும்
அதியுருசி ரசத்தைக்குடியும்
அடுத்தவர்க்குவா னீசேவடியும்

ஏலங்கறுவா விட்டதிற்கேக்கு
இஞ்சியுஞ்சேர்த்திட் டேனேஜோக்கு
பாலுஞ்சீனியுஞ் சேர்த்துநாக்குப்
படிந்துருசிக்கச் செய்தேன்நோக்கு

அரியசீனி சர்க்கரையிட்டாய்
அண்ணனுக்கேற்றது உண்ணும்மட்டாய்
விரியுந்தேன்குழல் மிகுந்தசெட்டாய்
விரும்பிச்செய்திட் டேனருந்தும்மெட்டாய்

வெள்ளாட்டுமூ ளையிற்செய்சூப்பு
வெண்காயம்மல்லி சோம்புசேர்ப்பு
தள்ளாப்பார்லி சேர்த்தால்வாய்ப்பு
தருகாம்புசேர்த் திடுகிற்கார்ப்பு

உயர்ந்தஜம்பாயின் ஜின்பிராந்தி
உவப்பாயுண்ணும் மிகுத்தால்வாந்தி
சுயவையினிது தாகசாந்தி
துள்ளுந்தம்பிநு சொல்லிற்காந்தி

திருத்தியாயிவை யாவுமருந்தும்
சிராயருந்திற் சிறக்கும்விருந்தும்
பெருத்தமனத்தர்க் கெல்லாம்பொருந்தும்
பேஷென்றலண்ணா னுளமுந்திருந்தும்

சுயம்பாகி வசனம்—சாப்பிட்டாயிற்று ஆண்டவனே.

யோசேப்பு வசனம்—நல்லது காரியஸ்தனே இங்கேவா ஓர் இர
சியம். இவர்கள் பைகளில் தானியம்நிரப்பியபின் முன்போல அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர் பணத்தையும் அதற்குட் போட்டு இளையவன் பைக்குள்ளே பானபாத்திரத்தையும் வைத்துக் கட்டியனுப்பிவிட்டுச் சற்றுத்தூ ரஞ் சென்றபின் போய்ப் பிடித்துவருவாய்.

காரியஸ்தன் வசனம்—அப்படியே செய்கிறேன் ஆண்டவனே.

யோசேப்புவசனம்—உங்கள் பைகளில் தானியம் நிரப்பப்பட்டிருக் கிறது, எடுத்துக்கொண்டுபோங்கள்.

ரூபன்வசனம்—அப்படியேயாகட்டும், பெரிய உபகாரம் போய்வ ருகிறோம் ஆண்டவனே.

யோசேப்பு வசனம்—சுகமாய்ப் போய்வாருங்கள்.

யூதா வசனம்—கழுதைகளின்மேலேற்றுங்கள் நடப்போம்.

பைகளைச்சோதித்தல்.

அரண்மனைக் காரியஸ்தன்வசனம்—அதோ எபிரேயர் செல்லுகிறா ர்கள், அவர்களை விரைந்துசென்று மறியுங்கள் காவலரே.

அரண்மனைக் காரியஸ்தன் விருத்தம்,

உபகாரஞ்செய்திட்டோருக் கொருநொடிப்பொழுதினுள்ளே
அபகாரஞ்செய்யலாமோ அரசனின்பானபாத்ரம்
விபரீதமாய்க்கவர்ந்தீர் விருந்தரேயுங்கள்பையைச்
சுபமாகக்கிழிறக்குஞ் சோதிக்கவேண்டும்நாமே.

வசனம்—அன்னமிட்டவீட்டிற் கன்னமிடலாமா? அதிபதியின் பானபாத்திரத்தை அங்கே காணேமே, உங்கள் அடைப்பங்களைச்சோ திப்பதற்குக் கீழே இறக்குங்கள் பிரயாணிகளே.

யூதா விருத்தம்.

இம்மொழிபேசலாமோ எம்மிறையவனின்பாத்ரம்
எம்மிடமிருக்குமாகி லெங்கள்போனிலில்லை
தம்மிடமந்தப்பாத்ரம் தங்கவைத்தவன்சாகட்டும்
உம்மிடம்நாமெல்லோரும் ஊழியஞ்செய்குவோமே.

வசனம்—நாங்கள் செய்நன்றிகொன்ற பாதகரா? அரசனின் பா த்திரத்தைத் தொடுவோமா? அப்படியே ஆருடைய அடைப்பத்தில் பாத்திரமிருந்தாலும் அவனைக் கொன்றுபோடலாம், நாமெல்லோ ரும் அரசனுக்கு அடிமையாவோம் அதிபதியே.

காரியஸ்தன் வசனம்—எல்லார் பைகளையும் இங்கே கொண்டுவா ருங்கள்.

யூதா வசனம்—இதோ கண்முன்பாயிருக்கிறது இஷ்டப்படி சோ தனைசெய்யலாம் அதிபதியே.

சபைவிருத்தம்.

வஞ்சகமாகவங்கே வந்தவர்பைகளெல்லாம்
கொஞ்சநேரத்துக்குள்ளே கூர்ந்துசோதனைசெய்போதில்

பென்சமீன்பையிலுள்ளே பிறங்குபாத்திரத்தைக்கண்டார்
அஞ்சினாரடப்பக்காரர் அதிகாரியதட்டினானே.

வசனம்—காரியஸ்தன் சோதனைசெய்தபோது பென்சமீன் பைக்குள் பாத்திரங் காணப்பட்டதினால் காரியஸ்தன் கோபிக்கும் விதங் காண்க.

காரியஸ்தன் வசனம்—அடே இதோ பாத்திரம் இருக்கிறதே திருட்டுப்பயல்களே.

## காரியஸ்தன் தரு.

(மோடிசெய்யாமலே என்றமெட்டு)

ஆகா மன்னன்சொம்மவம் போகா கள்வரேசீங்கள்
சாகா வழிவகையை வாகாகத் தேடுவீரே

நாடாளும் பூபதியின் வீடானதிலிருந்த
பீடான பாத்திரத்தைக் கேடாய்க் கவர்ந்தீரே

கோடாத மனத்துடனே மூடாநீ கிற்பதென்ன
வாடா அரசன்முன்னர் போடா புலைஞாநீ

வாருந் திருடர்களெல்லோரும் அநிபன்திறல்
பாரும் அவர்சமுகஞ் சேரும் அதிவிரைவில்

காரியஸ்தன் வசனம்—அடா திருடர்களே காரியம் வெளித்துப் போயிற்று. உண்டவீட்டுக்கு இரண்டகஞ்செய்துபோட்டீர்கள். அதிபதியிடம் வாருங்கள்.

யூதா வசனம்—இதை நாங்கள் திருடவில்லை ஐயா!

காரியஸ்தன்வசனம்—உங்கள் பைக்குள்ளோ இருந்ததா இல்லையா? வாய்பொத்திக்கொண்டு சட்டென வாருங்கள் திருடரே.

## சகோதரர் தரு.

(திங்களைச்சூடிய என்றமெட்டு)

என்னசெய்வோமிதற் கேதுசெய்வோமெங்கள் ஏகதேவா
ஏதுமறியாமற் றீதுவரலாமோ ஏகதேவா

முன்னைபுரிவினை முற்றிவந்திட்டதோ ஏகதேவா
மொழியென்னசொல்லுவோம் பழிவந்துசூழ்ந்ததே ஏகதேவா

பார்வோர்பிரதானி பாடுபடுத்துவார் ஏகதேவா
பரதேசத்திற்சிறை பட்டுழலலாமோ ஏகதேவா

நேர்வழிபார்த்தையர் நெடுமூச்செறிவாரே ஏகதேவா
நினைந்துநினைந்தெமை நித்திரைகொள்ளாரோ ஏகதேவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—நாமென்னசெய்யப்போகிறோம், மூற்பழிவந்து சூழ்ந்ததோ தெய்வமே!

காரியஸ்தன் வசனம்—இதோ வந்துகிற்கிறுர்கள். இச் சிறுவனின் அடைப்பத்திற் பானபாத்திரமிருந்தது அரசனே.



யோசேப்பு விருத்தம்.

அட அட திருடரென்று அறியாமல்மனைக்குள்விட்டேன்
இடமுறுமதிபனென்ன எண்ணுமற்பாலையுண்டு
விடமதையரவுகக்கும் விதமெனப்பாத்திரத்தைத்
தொடவென்னதுணிவுகொண்டீர் துளங்கிடச்செய்குவேனே.

தரு

(வாயைத்திறந்துகொஞ்சம் என்றமெட்டு)

பல்லவி

என்றலின்னணத்தைதக்களவாடவோ—அதை
எடுத்துக்கொண்டோடவோ அட—என்றன்.

அநுபல்லவி

இன்றுவிருந்தருந்தி ஈனர்களேயூத மானர்களேயட ... என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

அன்னமிட்டவீட்டைக் கன்னமிட்டோநாட்டை
அகலிடநாடியே அதிக்கிரமநீடியே
மிகுபகைசூடியே வேதனைதேடியே ... என்

காலத்தின்கோலமோ கள்வரின்சாலமோ
கயவர்களல்லவோ கருதெனைவெல்லவோ
செயுநன்றிசொல்லவோ திருடியேசெல்லவோ ... என்

இன்றெல்லோரையுமெத்தி எடுத்தீர்கள்கள்ளப்புத்தி
என்னுடைபாத்திரம் எடுத்ததேதஆத்திரம்
அன்னவன்மாத்திரம் அடிப்படல்காத்திரம் ... என்

யோசேப்பு விருத்தம்.

என்னகாரியஞ்செய்தீர்கள் என்போன்றஞானவான்கள்
இன்னமாதிரிகளெல்லாம் இயற்கையாயறிவாரென்று
முன்னர்நீருணர்ந்திலீரோ முறைகெட்டசெய்கைசெய்தீர்
உன்னியேநீரிதற்கா முத்தரமிருந்தாற்சொல்வீர்.

வசனம்—என்னைப்போன்ற ஞானவான்கள் இவ்வித கருமங்களை கண்டறிவார்களென யோசிக்கவில்லையா? இக்குற்றிற்கு என்ன பதில் சொல்லுகின்றீர் பிரயாணிகளே.

யூதா விருத்தம்.

நீண்டஞானத்தோயுங்கள் நேரினில்யாதுசொல்வோம்
மீண்டெதனுலெம்நேர்மை விளக்குவோமெமதுநீதி
பூண்டவக்கிரமந்தன்னைப் பூரணன்விளங்கச்செய்தார்
ஆண்டவாஉமக்கெல்லோரும் அடிமையாயிருப்போமையா.

- வசனம்—நாம் எமது நீதியை எவ்விதம் விளங்கச்செய்வோம். எங்கள் அக்கிரமத்தைத் தேவன் வெளிப்படுத்தினர். நாங்கள் எல்லோரும் உமக்கு அடிமையாயிருப்போம் ஆண்டவனே,

யோசேப்பு விருத்தம்.

அந்தவிதம்நீதிசெய்யேன் ஆரிடம்பாத்திரமிருந்ததவனேயென்ற
சொந்தவடிமையவனுக விருக்கட்டும்மற்றோர்கள் சுகமதாக [ன்
எந்தவுதவியுமற்ற தந்தைக்குத்தானியத்தை ஏற்றிக்கொண்டு
சந்தோஷமாயேகு மிதுவேயென்றீர்மானம் சாற்றினேனே.

வசனம்—அவ்விதமான அநியாயத்தை நான் செய்யமாட்டேன். எவனிடம் பாத்திரமிருந்ததோ அவனே என்னடிமையாயிருக்கட்டும், மற்றோர்கள் சுகமே உங்கள் பிதாவுக்குத் தானியத்தைக் கொண்டுபோங்கள் பிரயாணிகளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூதா தரு.

[மசானத்தில்வந்ததாரடி என்றமெட்டு]

பல்லவி

நம்பியெம்மோடனுப்பினுரையா—எமது தந்தை
நம்பியெம்மோடனுப்பினுரையா

அநுபல்லவி

வெம்பியழுதாரேசுவி விட்டுப்போனலவாகி
அம்புவியிற்றங்கிடாதையா—ஐயோதுரையே ... நம்பி

சரணங்கள்

குற்றம்செய்யவில்லேயா குறகினதேதிமைமெய்யாய்
சற்றும்பேசச்சக்தியற்றேமே—ஐயோதுரையே ... நம்பி

இவனுடன்பிறந்தோன்தேசத் தில்லேயென்றுதந்தைநேச
கவனம்வைத்தாரவருயிரையா—நாமங்குசெல்லோம் ... நம்பி

தனயன்போகாவிட்டாற்குழி தனினுறவேனென்றார்பழி
எனதுதலேமேல்வருமையா—நான் ஏதுசெய்வேன் ... நம்பி

இவனுக்குத்ரவாதம்நானே என்றுகூட்டிவந்திட்டேனே
இவனுக்காகநானிருக்கிறேன்—இவனேவிடும் ... நம்பி

வசனம்—தயவாய் நான்சொல்வதைக் கவனிக்கும்படி மன்றுடுகிறேன். எங்கள் பிதாவுக்குப் பன்னிரு புத்திரருனர். அவர்களுள் ஒருதாய்பெற்ற இருசகோதரரில் பிதாவின் பட்சத்துக்குரிய ஒருபுத்திரன் காணமற்போனுன், அன்றுமுதல் இவனில் பிதா அதிக நேசம்வைத்து எப்போதுந் தன்னருகில்வைத்துக்கொள்வார். முன் நாங்கள் வந்தபோது இச்சங்கதியைத் தேவரீருக்குத் தெரிவித்தோம். தாங்கள் ஐயமுற்று அவனைக் கூட்டிவாருங்கள், அவன் வரும்வரையும் இவன் இருக்கட்டுமென்று சிமியோனை மறிப்பிலிருத்தினீர், அதைப் பிதாவுக்கு அறிவித்தபோது அவர் மிகவுங் கஸ்திப்பட்டு இவனைவிட மனமில்லாதிருந்தார். உணவுக்குத் தானியங்குறைந்தபோது வேறு வழியில்லாமையால் இவனை யனுப்ப நேரிட்டது. ஆதலால் இவன் திரும்பி வராவிடில் நான் இங்கு வரேனென்று பிணையாய்நின்று கூட்டிவந்தேன். இவன் வராவிடில் துக்கத்துடனே தான் குழியிலிறங்குவேனென்றூர். நான் அப்பாதகத்தைப்பார்க்கமாட்டேன். இவனுக்குப்பதிலாய் நான் சிறையிருக்கிறேன். இவனை விடுதலைசெய்தால் தேவானுக்கிரகமுண்டு ஆண்டவனே.

யோசேப்பு வசனம்—இவர்கள்தவிர மற்றெல்லோரும் வெளியேபோங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யோசேப்பு தன்னை இன்னானென்று தெரிவித்தல்,

## யோசேப்பு தரு.

(மாதவன்குலத்துதித்த என்றமெட்டு)

என்னைநீரறியீரோ—துணைவரே
யானேயோசேப்பென்று குறியீரோ

முன்செய்தசெயலையெண்ணீர்—சென்று
முடித்ததற்காயோ சனைகள்பண்ணீர்

கண்டிடுகனுவின்வண்மை—அது
கர்த்தனின்சித்தப்படி கண்டதுண்மை

விண்டிடக்கோபங்கொண்டீர்—அது
மெய்யானகனுவென்றிப் போதுகண்டீர்

தாசனைநோக்கிடுவார்—அவர்
தாழ்ந்தவர்தமைமேலாக்கிடுவார்

நேசரைக்கைவிடமாட்டார்—அவரின்
நீசச்செயற்குஞ்சினமேகாட்டார்

உங்கள்செய்கையைவெறுத்தேன்—இனிமுன்செய்
வனைச்செயலைநினை யாதுபொறுத்தேன்

எங்கள்பரமன்சித்தமே—உமக்
கின்பமுடனேதந்தே னென்முத்தமே

வசனம்—அண்ணமாரே, என்னை இன்னுனென்ற அறியவில்லையா? நான்தான் யோசேப்பு. முன் நடந்தவைகள் திருவுளச்செயலாய் நடந்தது. அப்பர் இன்னும் உயிரோடிருப்பதே நான்செய்த பாக்கியம். கிட்டவாருங்கள்அண்ணமாரே! தம்பி! நீயும் மனச்சோர்வுற்றுயோ!

## யோசேப்பும் சகோதரருந்தரு.

[தில்லாக்கிரி என்றமெட்டு]

சகோத. ஐயோஉனை மெய்யாய்நாங்கள்
அநியாயஞ்செய் தோமே
பொய்யோவின்றுன் கையால்நாங்கள்
பொருள்பெற்றுழுய் தோமே

யோசேப் தேவன்செய லிதெனவே
சிந்தைதனில் நினையும்
மேவும்பஞ்சத் தும்மைக்காக்க
விமலன்விட்டா ரெனையும்

சகோத. உன்னைச்செய்த செய்கைக்குன்றன்
முன்னிற்கநா ணுகிறோம்
புன்மனத்தர் பாவம்மலை
போலவேகா ணுகிறோம்

யோசேப் துக்கித்திட வேண்டாமிந்தத்
தோஷமும்மே லல்ல
தக்கோன்பஞ்சம் நீக்கவழி
தனைத்திறந்தார் மெல்ல

சகோத. அழவுமெம்மைத் தொழவுமுன்னை
அடிமையாக விற்றோம்
பழவினைக்கா யுன்னுடைய
பாதந்தொழப் பெற்றோம்

யோசேப்பு வசனம்—பயப்படாதீர்! பஞ்சகாலத்தில் உங்களுக்கு உதவிசெய்யும்படியே தேவன் முன்னதாய் என்னை இங்கேயனுப்பினர். நீங்கள் இச்செய்தியைப் பிதாவுக்குப்போய் அறிவிக்கத் தீவிரியுங்கள், இன்னும் ஐந்துவருஷம் பஞ்சமிருக்கும். பிதாவிடம்போய் உன்மகன் யோசேப்பு உயிருடன் இருக்கிறுன் என்றும், உம்மைக் குடும்பத்தாருடனும் உள்ள பொருள் பண்டங்களோடும் வரும்படி அழைக்கிருனென்றுஞ் சொல்லுங்கள், பென்சமீனே கிட்டவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தம்.

யோசேப்பு

தம்பியேயுனைப்பிரிந்து தனிமையாய்வாழ்ந்திட்டேனே
வெம்பியேயழவாயிற்றே விமலனின்கிருபையாலாய்

பென்சமீன்

பைம்பொன்சூடியவென்னண்ணா பாடுகள்பட்டிட்டாயோ
நம்பினோர்தமையேக நாயகன்தனிகாப்பாரே.

வசனம்—எல்லாம் திருவுளச் செயலின்படி நடக்கும் அண்ணா.

சபைவிருத்தம்.

அதிபதியோசேப்பினது சகோதரர்வந் தாரெனக்கேட்டத்தேச (த்தார்
த்திபலரூதிக்களித்தார் பார்வோனுமகிழ்ந்துமகிழ் கூர்ந்தருவி
விதிதவறுதவர்களுக்கு வண்டிகளுந்தானியமும் விரும்பிவீந்திப்
பதிதனிலேவந்திருக்கப் பரிந்துசொல்வாயெனக்கிருபை பாலித்
தானே.

வசனம்—யோசேப்பின் சகோதரர் வந்தாரென்று கேள்வியுற்ற யாவரும் மகிழ்ந்தார்கள். பார்வோனும் மகிழ்ந்து வேண்டியவற்றைக் கொடுக்கும்படியும் தனது தேசத்தில் அவர்களை அழைப்பித்துக் குடியிருத்தும்படியும் அனுமதியருளினான் என்க.

## யோசேப்பு தரு.

(சாமிச்வாடா என்றமெட்டு)

பல்லவி

சோதரர் வாரீர்

அனுபல்லவி

சோதரர்வாரீ ரிங்குபாரீர் துப்பெயித்தின் மாட்சியைச் ...சோ

சரணங்கள்

மாதாவொடுசெல்லுவீர் வரலாறப்பர்க்குச்சொல்லுவீர்
வரவழைத்திடும் விரைவிலவர்களை
வண்டிகளுமிங் குண்டுகொண்டுபோம் ... சோ

மனதுதேறித்துணிந்திடும் மாற்றுவஸ்திரமணிந்திடும்
மாறில்லாதிம்முந் நூறுவெள்ளியும்
வந்தபென்சமீன் சொந்தமாகட்டும் ... சோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துக்கழுதைபதார்த்தமே பாங்காயிந்தேன்நிதார்த்தமே
பாவுகோழிகைக் கழுதைபத்தினில்
பாருந்தானியம் வருமப்பர்க்கு ... சோ

வழியிற்சண்டைசல்செய்திடீர் மனமாயப்பார்முன்னெய்திடீர்
வழுக்துமுண்மையைக் களித்துக்குடும்பத்தோ
டழைத்துவாரும்நீர் தழைத்துவாழுவீர் ... சோ

யோசேப்புவசனம்—ஒன்றுக்கும் நீங்கள் பயப்படவேண்டாம். எங்கள் தகப்பனுக்கு இங்கு கண்ட கேட்ட யாவற்றையுந் தெரிவித்து அவரைப் பிள்ளைகளுடனும் குடும்பத்துடனும் ஆடு மாடுகள் பொருள் பண்டங்களுடனும் வரும்படி நான் அழைக்கிறேன் என்றுசொல்லிக் கூட்டிவாருங்கள். தேவன் உங்களுக்குக் கிருபைசெய்வாராக.

சகோதரர்வசனம்—மெத்தச்சந்தோஷம், போய்வருகிறோம்.

## சகோதரர் தரு.

[காசிநாதா என்றமெட்டு]

பல்லவி

தந்தை சமூகத்துக்குச் செல்வோம்—நாம்
தந்தை சமூகத்துக்குச் செல்வோம்

அனுபல்லவி

சுந்தரயோசேப்பு விந்தையாயுயிருடன்
சிந்தையாய்வாழ்ந்திடுஞ் சந்தோஷஞ்சொல்லவே ... தந்

சரணங்கள்

எங்கள் குற்றத்தைப்பொறுத் தானே—அவன்
கள்ளமெவளியினுந்தன் னுள்ளமகிழ்சினம்
கொள்ளாமலேயன்பு கூர்ந்தனளித்தினம் ... தந்

அற்ப மனுஷனல் லல—மன
அன்புடனெங்களின் முன்புரைதிட்டினன்
இன்பசந்தோஷத்தை இனிதுறக்காட்டினன் ... தந்

நெஞ்சில் வஞ்சகம்வைக்க வில்லை—நீர்
நிறைகுடந்தளம்பாது குறைகுடங்கூத்தாடும்
அறைமொழிப்படிகடைக் கதிகமெல்வந்தீடும். ... தந்

கண்ட கனவுமுண்மை தானே—அவன்
காட்சியைக்கூறிட ஆட்சியையழித்திடும்
சூழ்ச்சிசெய்தோமிதாற் மாயருள்வெளித்திடும் ... தந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரூபன் விருத்தம்.

தந்தையேமகன்யோசேப்புத் தற்பரனருளினுலே
விந்தையாய்ச்சீவனேடே விளங்கெகிபத்ததிபனுக
அந்தமாய்வாழுகின்ருன் அவனுனைபாவரோடும்
சந்தோஷமாகவங்கே சார்ந்திடவழைக்கின்றுனே.

வசனம்—பிதாவே! உமது மகன் யோசேப்பு உயிருடனே எசித்துக்கு அதிபதியாயிருக்கிறுன். உம்மை உமது குடும்பத்தாருடனும் உமக்குற்ற சகல பொருட்களுடனும் அங்குவந்து வசிக்கும்படி சொன்னுன் பிதாவே!

பிதா வசனம்—இது கனவா? நினைவா? அன்றி உண்மையா?

### யாக்கோபும் ரூபனுந் தரு.

(சிங்கத்திலுல்லான்வருத்தி என்றமெட்டு)

யாக். இப்படிச்சொல் வார்த்தைதனை யாவர்ஒப்புவாரோ
ஈனமிர்க வாய்ப்பட்டோர்கள் எப்படித்தப்புவாரோ

ரூபன் அப்பரேநாங் கண்ணுற்கண்டோம் அழைக்கிருரங்கே
அரியாதம் வேசரியாதிய வனுப்பினுரிங்கே

யாக். இப்படிநீர் சொல்லுமுறை இன்னதென்றறியேன்
இறந்தமகன் உயிர்த்திருப்ப தேதென்றுகுறியேன்

ரூபன் தப்பிதம் நடந்ததுண்டு சாற்றவெம்புவீர்
தலைவனுயங் கிருக்கிருர்நிச் சயமாய்நம்புவீர்

யாக். அப்பப்பாயோசேப்பையாரும் அடித்தேயோட்டினுரோ
அங்கியிலரத் தந்தைத்தோய்த்து ஐயோகாட்டினுரோ

ரூபன் அவரையியா பாரிகட்கு இவர்கள்விற்றதுமெய்
அதிதுயர்கொள் வீரென்றுமக் கறைந்தசெய்திபொய்

யாக். இப்படிக் கொடுமைசெய்ய இவர்களெண்ணினுரோ
ஈனரிரக் கமில்லாமல் இடரைப்பண்ணினுரோ

### ரூபன் விருத்தம்.

அன்றுசோல்கனவா லீனவருமிவன்கீ
ழாகவேவோவெனச்சினமீறிக்
கொன்றிடநினைத்தார் குறிப்பொடுதடுத்துக்
குழியினிற்றள்ளிடச்செய்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுநான்கடத்தப் போகுமுன்னிவர்கள்
சேர்ந்துதம்பியைவிற்றுவிட்டார்
ஒன்றுமேசெய்ய வியலாமலிருந்தேன்
உறுபிழைபொறுத்திடுவீரே.

வசனம்—எல்லோர்க்கும் இறைவனுவதாய்க்கண்ட தரிசனமே சகோதரருக்குச் சினத்தைமூட்டிவிட்டது நான் தடுக்கப்பார்த்துங் கூடாமையால் பின்பு மீட்கலாமென்ற கருத்துடன் பாண்கிணற்றுட் றள்ளும்படிசெய்தேன். நான் மீட்குமுதலே அவர்களுக்கு இராக்கம்பிறந்து வியாபாரிகளுக்கு விற்றுவிட்டார்கள். இனி நினைந்தழுததில் பலனில்லை. கறந்தபால் முலைபுகாது பிதாவே!

### யாக்கோபு தரு.

(யோகிபாரு என்றமெட்டு)

ஐயோஉன்மேல் அழுலேதொட்டாரோ
மெய்யாயுன்னை விற்றுவிட்டாரோ

துய்யோய்காட்டில் துரத்திவிட்டேனோ
துயராழியினுற் சூழப்பட்டேனோ

நினைக்கவென்றன் நெஞ்சுபக்கிடுதே
நீர்த்துவேர்த்து வார்த்தைதிக்கிடுதே

இனத்தார்வெட்கக் கனத்தைப்பெற்றுயோ
தேவனருளாற் சீர்த்தியுற்றுயோ

உடன்பிறந்தார் அடம்புரிவாரோ
ஒவ்வாமையால் உள்ளம்எரிவாரோ

விடுஞ்சேர்ந்திடும் விரியன்களைப்பெற்றேன்
விதனமான ததனமாயுற்றேன்

அன்றுநீயும் அறைகனுமெய்யே
அமலனருளால் அரசாட்சிசெய்யே

இன்றுதேவற் கேதாபலியிடுவேன்
எற்றவிடைபெற் றியான்புறப்படுவேன்

வசனம்—அப்பப்பா இப்படிபாதகச்செய்கை செய்தார்களா! தெய்வமே!

### யாக்கோபு விருத்தம்.

எப்தியகரு மமினி நினைத்தென்ன யாவுமெம்பிறையவன்செயலே
கைவிரல்க ளொன்றுக் குக்கினுல் தங் கைதனைத்தறித்திடலாமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவனைதயொழித்து நமதுதேவனுக்கு நற்பலிசெலுத்தியேவண
க்கம்
செய்தவர்தமது திருவுளமறியச் செச்சைகொள்டிங்குவாராயே.

வசனம்—இனியென்னசெய்யலாம். லைசிரல் சண்ணுக்குட் குத்திருல் கையைத் தறிப்பாருண்டோ? ரூபனே நாம் வாகுத்தக்கிணற்றண்டைசென்று எம்தேவனுக்குப் பலியிட்டு அவரது திருவுளமேதென்றறியவேண்டியிருப்பதால் பலிப்பொருளாய் ஓர் ஆட்டுக்குட்டி கொண்டுவருவாயாக.

ரூபன் வசனம்—அப்படியே செய்கிறேன் பிதாவே.

சபைவிருத்தம்.

நயவுறுமிசிறவேலுந் தனக்குளயாவற்றோடும்
பெயர்சொபாவுக்குச்சென்று பிதாவீசாக்கின்றேவர்க்கு
உயர்வுறுபலியையிய வுன்னியேகாஷ்டமூட்டி
வயமுறாட்டினைமேல்வைத்து வளர்பலிசெலுத்தினானே.

வசனம்—யாக்கோபு உள்ளம்பூரித்துப் பெயர்சொபாவுக்குப்போய் அங்கே தன் பிதாவின் தேவனுக்குப் பலிசெலுத்தினவிதங்காண்க.

யாக்கோபு தரு.

(ராத்தசையாமோரி என்றமெட்டு)

பல்லவி

உசிததயாபரா உயர்கிருபாகரா—பரா
உயர்கிருபாகரா—உசித.

சரணங்கள்

விசிதாதிகாரணு விளங்குசம்பூரணு
விமலகான்சிறிம்பனே விருப்பெதென்றறியேனே ... உசித

மைந்தனைக்காத்தவா மனக்குறைதீர்த்தவா
வளரெசித்தேதகவோ பகனிடம்போகவோ ... உசித

அடியனைப்பாருமே அனுமதிதாருமே
நெடிதன்புகூருமே நிறையாவல்தீருமே ... உசித

வசனம்—என் தேவனே! என் பலியை ஏற்று நான் எசித்துக்குப் போகலாமோவென்று தெரிவித்தருளவேண்டுஞ் சுவாமி!

யாக்கோபு தேவாரம்.

ஐயனேயருவேஞான வமலனேவிமலசோதி
மெய்யனேயோசேப்பின்னும் விரிநிலத்திருக்கச்செய்த
துய்யனேபவனையானுந் துஞ்சுமுன்கண்ணுற்காணச்
செப்பவேவேண்டுமென்றன் சேவடிபிறைஞ்சினேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—ஜெகதீசா! உன் திருவுளமீதோ! உன்னை நம்பினவரை நீ கைவிட்டதுண்டோ? என்மகனை நான் இறக்குமுன் கண்ணாற்காணக் கிருபைசெய்யவேண்டும் சுவாமி!

சபைவிருத்தம்.

அன்றிரவு தேவன்யாக்கோபின்முன்ன
ரணுகிநீயஞ்சாமலெகிப்துக்கேகு
உன்றனையங்கேபெரியசாதியாக
உயர்த்துவேனங்குமுன்னுடன்நான்வந்து
வென்றியுடன்மீண்டுமிங்குறவேசெய்வேன்
மெய்யாதேயெனப்பராக்கேட்டதாலே
நன்றியுறத்தோத்திரஞ்செய்தெகிப்தினுக்கு
நாடிடவேமனந்துணிந்துபுறப்பட்டானே.

வசனம்—அன்றிரவில் தேவன் யாக்கோபுக்குத் தரிசனையாகிப் பயப்படாதே, நீ எகிப்துக்குப்போ. அங்கே உன்னைப் பெரியசாதியாய் உயர்த்துவேன். நான் உன்னுடன் அங்கே வருவேன். உன்னைத் திரும்பவும் இங்கே வரப்பண்ணுவேனென்று திருவாய்மலர்ந்தருளினார். அதனால் மனந்துணிந்து எகிப்துதேசத்திற்குப் போகப் புறப்பட்டவிதங்காண்க.

சபை மறுவிருத்தம்.

உத்தரவுபெற்றபின்ன ருள்ளபொருளாடுமா
டொருங்குசேர்த்துப்
பத்திரமாய்க்கழுதைகளி லேற்றிவந்த பண்டிகளின்
மேலேயேறிப்
புத்திரர்பவுத்திரர்குடும்ப மெழுபதுபேர்களுந்தானும்
புக்கிருந்து
சித்ரவெகிப்தினைநாடி இசிறவேல்மனமகிழ்ந்து ..
சென்றிட்டானே.

யாக்கோபு தரு.

(பலேசாட்சணி நம்மாதின்னூடு என்றமெட்டு)

பல்லவி

எகித் தென்னுமா நகரினுக் கேகுவோம்

சரணங்கள்

உன்னித மைந்தனை, உருகியென் சிந்தனை
உவப்புடனேகாண உயர்மகிழ்ச்சிபூண ... எகித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளை வேண்டியே கானகந் தாண்டியே
உடைமைபொருளோடும் உயர்செல்வம்நீடும் ... எசித்

புத்திரர்க டம்முடன் பொருந்திய பவுத்திரர்
பத்தினியா தியவேழ் பதின்மர்களு மிங்காள் ... எசித்

மகனைநான் காணவே மகிழ்ந்தன்பு பூணவே
மிகுவிரைவாய் நடந்து மிளிர்கானகங் கடந்து ... எசித்

யாக்கோபு வசனம்—யூதாவே கிட்டவா; கோசேயின்னாட்டிலே என்னைச் சந்திக்கும்படி யோசேப்புக்குச் சொல்வாய்.

யூதா வசனம்—அப்படியே செய்கிறேன் பிதாவே.

யூதா விருத்தம்.

நம்பினபேரைக்காக்கும் நமதுசோதரனேயிந்த
அம்புவியதனிலேதம் மாஸ்திகளெல்லாங்கொண்டு
எம்பிதாவருகிறார்நீ யெழுந்துகோசேயின்னாட்டில்
தம்சமுகத்தைக்கண்டு சந்தோஷங்கொளச்சொன்னாரே.

வசனம்—எம்மருமைச் சகோதரனே, எமது பிதா நமக்குள்ள யாவற்றோடும் வருகிறார். கோசேயின்னாட்டில்வந்து உன்னைச் சந்திக்கும்படி சொன்னார் தம்பி.

யோசேப்பு வசனம்—மகா சந்தோஷம், இதோ வருகிறேன். காரியஸ்தனே ரதத்தைத் தயார்செய்விப்பாய்.

காரியஸ்தன் வசனம்—அப்படியே ஆயத்தமாயிற்று ஆண்டவனே.

சபைவிருத்தம்.

கோசேயின்னாட்டினிலேதனைச்சந்திக்கும்படியேகுணயாக்கோபு
யோசேப்புக்கறிவிக்கயூதாவையனுப்பவவனேடிச்சென்று
ஆசையுடனறிவிக்கஅவனிரதத்திவர்ந்துவந்தேயடிபணிந்து
நேசமுடன்தந்தைகழுத்தினைக்கட்டிக்கொண்டழுதான்நெடிதாய்
மன்னே.

வசனம்—யாக்கோபு கோசேயின் நாட்டில்வந்து தன்னைச் சந்திக்கும்படி சொல்லியனுப்ப யோசேப்பு ரதத்திவர்ந்துவந்து பிதாவின் கழுத்தைக்கட்டிப்பிடித்துப் புலம்பும் விதங்காண்க.

## யாக்கோபும் யோசேப்புந் தரு.

(துரையேயுன்னைப்பறையனுக என்றமெட்டு)

யாக். பாலாஉன்னை மேலுங்கண்டேனேடா ஆ ஆ மகனே
பற்றுமேதனன்னுதாம் பகருமேதனன்னதாம்
குற்றம்புரிந்தாரோ சற்றுமுள்ளாரேனே ... பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோ. மேலோன்செய விதென்னீர்தி வீரே ஓ ஓ தந்தையே
காலாகாலங்கண்ட கர்த்தனை நுவின்ட
கட்டளையென்றேரும் கருமத்தினைத்தேரும்... மேலோ

யாக். ஐயோ உன்மேலழுக்காறுற்றனரோ ஆ ஆ மகனே
அன்றுகாண் செல்லென்றேன் அல்லற்காளாயினின்றேன்
ஆறுமோ என்மனந் தேறுமோ இத்தினம் ... ஐயோ

யோ. துய்யோயினித் துக்கமுற்றுவ தென்ன ஓ ஓ பிதாவே
வையகவாழ்வுநீர் மருவுங்குமிழிநேர்
வானேன்செய்பார்பேதம் மானமாறுதல்நீதம் ... துய்

யாக். அன்றுகண்ட அரியகனவு மெய்யே ஆ ஆ மகனே
இன்றேயுனைக்கண்டேன் இன்பமிகக்கொண்டேன்
ஏகனைப்போற்றுவேன் ஸ்துதிசாற்றுவேன் ... அன்

யோ. என்றும்பரன் எம்மைநடத்திடுவாரே ஓ ஓ பிதாவே
குன்றுவருட்செய்வார் குறைகளெல்லாங்கொய்வார்
நன்றியைக்கூறுவோம் நாம்மணமாறுவோம் ... என்

## வேறு தரு.

(இங்கிலீச்சுமெய என்றமெட்டு)

யாக்கோ. உன்னை யிறந்தாரென்
றேதினரேசெல்வ மகனே—மிக
உள்ளுடைந் தென்கண்கள்
நள்ளிருளானதே மகனே

யோசேப் இன்னுமுயிரோ
டிருக்கப்பெற்றேனேயென் தந்தாய்—உன்றன்
இனிய வசனத்தைக்
கேட்கப்பெற்றேனேயென் தந்தாய்

யாக்கோ. துட்ட மிருகங்களால்
விட்டாயுயிரென்றார் மகனே—நானும்
சொல்ல வொண்ணாத்துய
ரெல்லாமடைந்தேனே மகனே

யோசேப் சிட்டன் செயலிது
நட்டம்வந்திட்டதோ தந்தாய்—என்னுஞ்
சீர்பெற வென்றுதி
தேவன்செய்தார்நன்மை தந்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யோசேப்பு விருத்தம்.

தந்தையேயெமது தேவன் தயவாலொன்றுகச்சேர்ந்தோம்
இந்தவூராசனுக்கு இச்செய்திசொல்லவேண்டும்
வந்தசோதரரிவ்வர் வாட்டும்நான்கூட்டிச்சென்று
சந்தோஷமாயவர்க்குச் சங்கதிதெரிவிப்பேனே.

வசனம்—எங்கள் சந்தோஷ சங்கதியைப் பார்வோனும் அறிய வேண்டும். இவருள் ஐந்துபேருடன்சென்று அறிவித்துவருகிறேன் பிதாவே.

யாக்கோபு வசனம்—அப்படியே போய்வா மகனே.

## யோசேப்பும் சகோதரருந்தரு.

[தேவசேனுபதிவந்தனம் என்றமெட்டு]

பார்வோன்ராசனேவந்தனம் படிபுரப்பவாவந்தனம்
கார்முகில்போன்றாய்வந்தனம் கருணைசெய்குவோய்வந்தனம்
சம்ப்ரமலோலாவந்தனம் சற்குணசீலாவந்தனம்
கெம்பீரதீராவந்தனம் கிருபைசெய்குவாய்வந்தனம்

வசனம்—வந்தனம் மகராஜ்.

### பார்வோன் விருத்தம்.

மதியுணர்ந்தெனதுநாட்டை வளம்பெறப்புரந்துகாக்கும்
அதிபதியேநீயிப்போ தடுத்திட்டகருமமேது
புதியவரிவராரிங்கே பொருந்திவந்திட்டதேது
இதயசந்தோஷமாக என்றனக்கியம்புவாயே.

வசனம்—எனது நேசத்துக்குரியவரே, நீர் இங்கேவந்த கருமமென்ன? இவரார் தெரியச்சொல்லும் அதிபதியே.

## யோசேப்பும் பார்வோனுந் தரு.

[மருமலர்ப்பூ என்றமெட்டு]

யோ. எகித்துதேச ராசனுன மகத்வசம்பன்னு
இவர்சகோதரர் தந்தையுடன்வந் திருக்கிறார்மன்னு

பார். அகத்தில்நேசம் மிகுத்திட்டேனிவர் அன்பாய்வாழ்ந்தி
டவே [ழ்ந்திடவே
அழகுறுமுங்கள் தொழிலென்னசொல்லும் அமைதிரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபன் எங்கள்முன்னோரும்நாமும்மேய்ப்பராயிருக்கிறோமையா
பொங்குபஞ்சத்தா லிங்கேதங்க வந்திட்டோந்தய்யா

பார். இந்தத்தேச முனதுமுன்பா யிருக்குததிபதி
தந்தையுஞ்சகோ தாருங்கோசேனிற் றங்கிடவிதி

பார்வோன் வசனம்—அதிபதியே, எனதுதேசம் உனது முன்பா யிருக்கிறது உனது தந்தையும் மற்றோரும் கோசேன்நாட்டிற் றங்கி அதைச் சுதந்தரிக்கும்படி செய்வாயாக.

யோசேப் வசனம்—பெரிய பாக்கியம் மகராஜ்.

யோசேப்பு மறுவசனம்—நமது அரசர் கோசேயின்நாட்டைச் சுதந்தரமாய் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார். அவரைக்கண்டு அவரை ஆசீர்வதியும் பிதாவே!

யாக்கோபு வசனம்—அப்படியாகட்டும் மகனே.

யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்தல்.

விருத்தம்.

கொற்றமாமகுடஞ்சூடிக் குவலயம்புரப்பாய்வாழி
பற்றவர்தமைத்தடிந்து பரிவுடனிருப்போய்வாழி
பெற்றநன்மைகளையுன்றன் பிரசைகட்கருள்வோய்வாழி
இற்றைநாட்டேவனும்மை ரட்சிப்பார்வாழிவாழி.

வசனம்—எகித்து ராச்சியத்தை அரசாட்சிசெய்யும் அரசனே, நீரும் உமது தேசமும் வாழும்படி சர்வ வல்லப கடவுள் ஆசீர்வதிப்பாராக.

பார்வோன் வசனம்—அப்படியே யாவதாக முதியோரே.

யாக்கோபு வசனம்—மக்காள், எங்களுக்கு இவ்வளவு தயவுகாண்பித்த பரமபிதாவுக்குத் தோத்திரஞ் செய்வோமாக.

## யாக்கோபும் புத்திரருந் தரு.

(இந்திரனே என்றமெட்டு)

யாக். தோத்திரமே நிதாநிதர் தோத்திரமே
தூயபர னுக்குந்தோத்ரமே

நேத்திரத்தை வெளித்திட நிலத்திற்செய்த
நிர்மலசோ திக்குந்தோத்ரமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோ. தந்தையுடன் சகோதரர் தமைக்கண்ணுறத்
தயவுவைத்த பரற்குத்தோத்ரமே

ரூபன் சிந்தைவர்மங் கொண்டவெந் திருக்கறுத்த
திவ்வியகர்த் தர்க்குத்தோத்ரமே

சிமி. தம்பியழ வம்புசெய்த சதியையெண்ணுத்
தயவுறச்செய்த பரற்குத்தோத்ரமே

லேவி நம்பினரைக் கைவிடாத நாதனென
நானிலம்புக ழிறைக்குத்தோத்ரமே

யூதா வன்மனத்தார் எங்களுடை மனமெழுகாய்
வடிந்துருகச்செய் பரற்குத்தோத்ரமே

இசகா. புன்மனதைப் போக்கியின்று புதுமனமாய்ப்
புரிந்தசோதிக்குப் பரந்ததோத்ரமே

செபி. காசினிமேல் தெய்வச்செயல் காட்டுதற்குக்
கருணையாங்கட வுளுக்குத்தோத்ரமே

தாண் தாசர்பிழை சகித்ததிக தயவுசெய்யும்
தற்பரனின்பொற் பாததோத்ரமே

நத்தலி வந்தவினை மாற்றிநாங்கள் மனமகிழ
விந்தைசெய்விம லற்குத்தோத்ரமே

காத் புந்தியற்றுச் செய்தவினை போக்கடித்த
பூரணநா தற்குத்தோத்ரமே

ஆசே. சர்வலோக வதிபதி தானெனவே
தரையிற்காட்டும் பரற்குத்தோத்ரமே

பென். கிர்பைவைத்தெ எம்மனதைக் கிளரச்செய்த
கீர்த்திசேர்நா தருக்குத்தோத்ரமே

சபைவிருத்தம்.

அ[illegible]பாவண்ண மனுவசையாறுதிண்ணம்
தமதிடைபொறுமையாலே தம்பியைத்தொலைத்திட்டாலும்
விமலனுமவர்களெண்ணம் வியர்த்தமென்பதனைநாட்டி
உமதெண்ணம்நடவாதென்று உறுதியாய்த்தெரிவித்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம்—இச்சரித்திரத்தால் என்னசூழ்ச்சிசெய்தாலும் மனுடர
ல் ஒன்றும் நிறைவேறப்போகிறதில்லையென்றும் எல்லாம் இறை
ன்செயலென்றுந் தெரிந் துய்க.

## மங்களம்.

(அடிபணிகிறேன் என்றமெட்டு)

பல்லவி

மங்களம் மங்களம்—நித்தியசுக
மங்களம் மங்களம்

சரணங்கள்

எங்குஞ்சிறந்திட யாவும்நிறைந்திட
துங்கஞ்சுரந்திடத் தூய்மைபரந்திட ... மங்

கிறீஸ்தவருய்ந்திடக் கேடுகள்கைந்திட
அறத்தினர்பொங்கிட அருநீதிதங்கிட ... மங்

அவனிதழைத்துய்ய அடர்மழையதுபெய்ய
எவரும்பரன்துய்ய இணையடிதுதிசெய்ய ... மங்

அங்க்ளிவரசுநீள அருஞ்ஜோர்ஜ்சரசராள
யெங்குஞ்செல்வஞ்சூழப் புவியுஞ்செழித்துவாழ ... மங்

## வாழி விருத்தம்.

எம்பெருமானுர்மீதி லேற்றபத்தியினைவைத்து
நம்பினபேரையெந்த நாளிலுங்கைவிடாரே
அம்புவிதனிலேயிந்த அருஞ்சரித்திரத்தைக்கேட்போர்
தம்பமாய்ப்படிப்போரென்றுந் தழைத்துநீடூழிவாழி.

யோசேப்பு டிருமா முற்றிற்று.

SOUTH ASIA SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SOUTH ASIA SECTION

R. 17899.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AR 61

DANIEL POOR LIBRARY
JAFFNA COLLEGE©
A10044
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org